# தேசிய வருமானம்

மா. சின்னத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வருமானம்

# NATIONAL INCOME

ஆக்கம் :

மா. சின்னத்தம்பி, B. A., B. Phil. (Hons.)

அணிகமஞ்சரி வெளியீடு — 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : மே — 1988
உரிமை பதிவு

வெளியீடு:
வணிக அறிவியல் நிறுவனம்,
'மஹாலக்ஷ்மி'
அம்மன்கோவில் மேற்கு ஒழுங்கை,
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

பதிப்பு :
திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

விலை : சாதாரண பதிப்பு — ரூ. 20-00
நூலகப் பதிப்பு — ரூ. 30-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

வணிக அறிவியல், மாணவர் மத்தியில் மட்டுமன்றிப் பொது மக்கள் மத்தியிலும் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ள துறையாக வளர்ந்துள்ளது. இவர்கட்குத் தேவையான பல்வேறு கருத்துக்களையும் தகவல்களையும் தம் தாய்மொழியில் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட இடையீடுகளைக் களையும் நோக்குடன் வணிக அறிவியல் நிறுவனம் அமைக்கப் பட்டது.

இந் நிறுவனம் வணிக மஞ்சரி என்ற மாதாந்த சஞ்சிகையை வெளியிடுவதன் மூலம் தனது குறிக்கோளில் ஒரு பகுதியை நிறைவு செய்து வருகின்றது.

அதே வேளையில் பலருக்கும் பயன்தரத் தக்க நூல்களை வெளியிடும் தனது இரண்டாவது கட்ட நடவடிக்கையையும் அது தற்போது மேற் கொண்டு வருகின்றது. இந்த வகையில் வணிக மஞ்சரி வெளியீடுகள் அமைகின்றன.

எமது இரண்டாவது வெளியீடாக திரு. மா. சின்னத்தம்பி அவர்களால் ஆக்கப்பட்ட தேசிய வருமானம் என்னும் நூல் இப்போது உங்களுக்கு அளிக்கப்படுகின்றது. பொருளியற் கல்வித் துறையில் தளராத ஆர்வமும், பரந்த அனுபவமும் கொண்ட திரு. மா. சின்னத்தம்பி எமது ஆட்சி உறுப்பினருள் ஒருவர். அவரது நூலை வெளியிடும் சந்தர்ப்பம் கிடைத்தமையை நாம் ஒரு பேருகவே கருதுகின்றோம்.

இந்நூலுக்கு நீங்கள் வழங்கும் ஆதரவு தொடர்ந்தும் இத்தகைய பல பிரசுரங்களை வெளியிடுவதற்கு எமக்கு ஊக்கமளிக்கும்.

தமது ஐந்து தசாப்த அனுபவ முத்திரையை ஆழப் பதித்து இந் நூலை அழகுற அச்சிட்டு உதவிய சுன்னுகம் திருமகள் அழுத்தக உரிமையாளரும், ஊழியரும் எமது நன்றிக்கு உரியவர்கள். வணிகமஞ்சரி வெளியீடுகள் தரமானவையாக அமைவதற்கு அவர்களது அயராத பணி முதன்மைக் காரணியாக அமைந்துள்ளது என்ருல் அது மிகையாகாது.

சஞ்சிகை வெளியீட்டில் மட்டுமின்றி, நூல்வெளியீட்டிலும் புதிய பரிமாணம் ஒன்றினை இலக்காகக் கொண்டு செயற்படும் வணிகஅறிவியல் நிறுவனத்திடமிருந்து இதனைப் போன்ற பல நூல்களை வாசகர்கள் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

**வணிக அறிவியல் நிறுவனம்**

'' மஹாலக்ஷ்மி ''
அம்மன் கோவில் மேற்கு ஒழுங்கை,
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

தேசிய வருமானம் என்ற இந்நூல் எல்லாமட்டத்திலும் மாணவருக்குப் பயன் தரக்கூடிய வகையில் ஆக்கப்பட்டுள்ளது. தேசிய வருமானம் பற்றிய அறிமுகமாகவே இந்நூலைக் கொள்ளல் பொருத்தமானதாகும்.

அரசியல் ஆர்வம் கொண்டுள்ளவர்களுக்குத் தேவையான பல கருத்துக்களைத் '' தேசியவருமானம் '' என்னும் பொருள் உள்ளடக்கி இருப்பதனுல் மாணவர் அல்லாதோருக்கும் இந்நூல் பயன்தரத் தக்கதே.

இந்நூலைத் தமது வணிகமஞ்சரி நூல் பிரசுர வரிசையில் முன்னணியில் உள்ளடக்க முன்வந்த வணிக அறிவியல் நிறுவனத்திற்கு எனது நன்றிகள் உரித்தாகுக. அதேபோல் இதனை அழகுற அச்சிட்டு உதவிய திருமகள் அழுத்தகத்தினருக்கும் அணிந்துரை வழங்கி உதவிய யாழ் பல்கலைக் கழகப் பொருளியல் துறைத் தலைவர் கலாநிதி வி. நித்தியானந்தன் அவர்கட்கும் எனது நன்றிகள்.

சம்பியன் லேன், மா. சின்னத்தம்பி
கொக்குவில்,
30 – 4 – 88

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

திரு. மா. சின்னத்தம்பி அவர்கள் சென்ற ஆண்டு ஒக்ரோபரில் அரசநிதி என்ற தலைப்பில் வெளியிட்ட நூலைத் தொடர்ந்து தற்போது தேசிய வருமானம் பற்றி இந்தச் சிறுநூலில் எடுத்துக் கூறுகின்றார். தேசிய வருமானத்துடன் தொடர்புபடும் பல்வேறு அம்சங்களும் மாணவர் இலகுவிற் புரிந்து கொள்ளக்கூடியவாறு தெளிவாக எடுத்து விளக்கப் படுகின்றன.

திரு. சின்னத்தம்பி அவர்களது சிறந்த பொருளியல் அறிவு என்பதற்குப் புறம்பாக, அவர் நீண்ட காலம் பொருளியல் ஆசிரியராகப் பணியாற்றியதன் மூலம் மாணவர்களின் தேவைகளையும் குறைகளையும் நன்கு அறிந்துகொள்ளும் வாய்ப்புப் பெற்ற ஒருவர். அது மாத்திர மன்றித் தற்போது வலய ஆசிரிய ஆலோசகராகவும் அவர் கடமை யாற்றுகின்ற காரணத்தினுற் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களின் பிரச்சினைகளையும் நன்கு அறிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் பெற்றி ருக்கின்றார். ஆகவே அவரது அறிவும் அனுபவமும் இந்நூலின் தரத் திற்கும் பெரிதும் துணை செய்திருக்கின்றன. பொருளியல் மாணவரும் ஆசிரியரும் இந்த நூலை மகிழ்ச்சியுடன் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை. அவர்கள் மாத்திரமன்றிப் பொருளியல் தொடர்பான விடயங்களை வாசிக்க விரும்பும் அனைவரும் எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு மொழி நடையை ஆசிரியர் கையாண்டிருப்பது நூலின் தனிச்சிறப்பு.

தமிழ் மொழியிற் சமூக விஞ்ஞானம் பயிலுவோருக்கும் பயிற்று விப்போருக்கும் நண்பர் சின்னத்தம்பி தொடர்ச்சியாக ஆற்றி வரும் சேவை குறித்துப் பெருமைப்படும் அதே வேளை அது மேன்மேலும் ஓங்கி வளருவதற்கு எனது நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலாநிதி வி. நித்தியானந்தன்**
தலைவர், பொருளியல் துறை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
*15 - 4 - 1988*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் ... ... ... | 1 |
| 2. | தேசிய வருமான உபயோகம் ... | 6 |
| 3. | வருமான வட்டப் பாய்ச்சல் ... | 13 |
| 4. | தேசிய வருமானத்தை அளவிடல் ... | 17 |
| 5. | தேசிய வருமான எண்ணக் கருக்கள் ... | 35 |
| 6. | தேசிய வருமான பிரச்சினை ... | 48 |
| 7. | வளர்ச்சியும் அபிவிருத்தியும் ... | 53 |
| 8. | சமநிலைத் தேசிய வருமானம் ... | 68 |
| 9. | தேசிய வருமானத்தை அதிகரித்தல் ... | 71 |
| 10. | இலங்கையின் தேசிய வருமானம் ... | 75 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 1

# அறிமுகம்

தேசிய வருமானம் என்பது ஒரு நாட்டுக்கான மக்களுக்குரிய வருமானம் ஆகும். தனி மனிதன், குடும்பம், நிறுவனங்கள் ஆகிய பலரும் தமது வருடாந்த பொருளாதார நடவடிக்கைகளின் திறமை, திறமையின்மை பற்றி மதிப்பிட்டுக்கொள்ள அவர்களால் பேணப்படும் கணக்கு உதவுகின்றது. இதேபோல ஒரு நாட்டு மக்களது பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய மதிப்பீட்டைச் செய்ய தேசிய வருமானக் கணக்கு உதவுகின்றது. ஒரு நாடு என்பது பொருளாதார அமைப்பைக் குறிக்கிறது. பொருளாதார அமைப்பு என்பது மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுதற்கான அடிப்படை வசதிகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் புவியியற் பரப்பு ஆகும். மக்கள் தேவைகள் நிறைவேறுதல் என்பது நுகர்வதற்கான பொருட்கள் சேவைகள் பகிரப்படுகின்றன என்பதும் அவ்வாறு பகிரப்படுதற்காகவே உற்பத்தியாகின்றன என்பதுமாகும். எல்லாவிதமான பண்டங்களும் நேரடியாகவே எல்லோர்க்கும் கிடைக்கும் என்பதுமில்லை. பல பொருட்கள் நேரடியாகவன்றி நிறுவனங்களுடாகப் பெறப்படலாம்.

ஒருநாட்டில் மக்கள் தேவைகள் நிறைவுசெய்தல் என்பதில் குடும்பம், நிறுவனம், அரசாங்கம் என்ற பொருளாதார அலகுகள் பிரதான இடம் பெறுகின்றன. குடும்ப நுகர்வு சீராக நிறைவேற உதவுகின்றது. நிறுவனங்கள் அவர்களுக்கான பொருட்களையும் சேவைகளையும் நேரடியாக அல்லது மறைமுகமாக ஆக்க அல்லது பங்கிடுசெய்ய உதவுகின்றன. அரசாங்கம் குடும்பங்கள், நிறுவனங்கள் ஆகியோரிடையிலான தொடர்புகளைச் சீராக்க உதவுகின்றது.

இவ்வாறுன மூன்று அமைப்புக்களிடையிலான பரிவர்த்தனைகள் உற்பத்திக்காக காரணிகளைக் குடும்பங்களிடமிருந்து நிறுவனங்களுக்கு மாற்றுவதில் தொடர்புபடுகின்றன. அப்போது நிறுவனங்களால் கொடுக்கப்படும் காரணிகளின் விலைகள் குடும்பத்தவர்களின் வருமானம் ஆகின்றது. மறுபுறம் நிறுவனங்களால் ஆக்கப்பட்ட பண்டங்கள் நுகர்வுக்காகக் குடும்பத்தவர்க்குப் பங்கீடு செய்யப்படுகின்றன. இதனுல் குடும்பங்களால் பெறப்பட்ட வருமானம் நிறுவனங்களுக்கே வந்துசேர்கின்றது. இவ்வாறுன வருமானக் கைமாறல்கள் 'வருமானச் சுற்றேட்டம்' எனப்படுகின்றது. இவை தொடர்பாக வரும் கணக்குகள் தேசிய வருமானம் எனப்படும். இங்கு வருமானம் என்பது பண வடிவில் வாடகை, வட்டி, கூலி, சம்பளம், இலாபம் என்று குடும்பத்துறையினருக்கு வரும்போது, மெய்ரீதியான வருமானம் நிறுவனங்களுக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கிறது. அதேபோல் பண்டங்களின் விலை என்ற பணவடிவில் நிறுவனங்களுக்கு வருமானம் கிடைக்கும்போது, பண்டங்கள் என்ற மெய்வடிவில் குடும்பத்தவருக்குக் கிடைக்கின்றன. இவ்வாறு பண வருமான ஓட்டம் மறுபக்கத்தில் மெய்வருமான ஓட்டமாகச் செயல்படுகிறது. இவ்வாறான பொருட்கள், சேவைகளின் ஓட்டம், பண ஓட்டம் என்பன பொருளாதாரத்தில் தொடர்ந்து மாறியே செல்லும். இவை இரு வகைகளில் ஏற்படும்:

(அ) இவ்வாறான ஓட்டத்தின் அளவு மாற்றமடைவதனால் உற்பத்தி நுகர்வு முதலீடு என்பன தொடர்ச்சியாக மாற்றமடைந்தே செல்லும். பொருளாதாரம் வளர்ச்சியடைந்து செல்லும்போது முதலீடு உற்பத்தி நுகர்வு என்பனவும் கூடிச் செல்லும். இதனால் இவ்வாறான மாற்றங்களை அளவிடுவது அவசியமாகிறது. இதனால் அவ்வாறான கணிப்பீடாகத் தேசிய வருமானம் அமைகிறது.

(ஆ) இவ்வாறான ஓட்டத்தின் கட்டமைப்பு அல்லது சேர்க்கையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பொருளாதார வளர்ச்சியின்போது பல்வேறு பண்டங்கள் உற்பத்திசெய்யப்படுவதுடன் அதில் மாற்றங்களும் ஏற்படும். புதிய உற்பத்திகளும் ஆரம்பிக்கப்படலாம். விவசாயத் துறையின் மொத்தப் பெறுமதி படிப்படியாகக் கூடிவந்தாலும், அதன் சதவீதப் பெறுமானம் அல்லது பங்களிப்புக் குறையலாம். கைத்தொழில்துறை, சேவைகள் துறை ஆகியவற்றின் மொத்தப் பெறுமதி அதிகரிப்பதோடு அவற்றின் சதவீதப் பெறுமானங்கள் உயர்ந்து செல்ல முடியும். இத்தகைய அமைப்பு மாற்றங்களே பொருளாதார வளர்ச்சி எனப்படுகிறது. இதனால் இவற்றைக் கணித்துக்கொள்வது அவசியமே. இதுவே தேசிய வருமானம் ஆகும்.

## தேசியக் கணக்கீடு:

ஒரு நாட்டின் கணக்கீடு தேசியக் கணக்கீடு எனப்படும். சமூகக் கணக்கீடு என்றும் அது அழைக்கப்படுவதுண்டு. எனினும் சமூகக் கணக்கீடு என்பதில் தேசிய வருமானக் கணக்கீடு, நிதி ஓட்ட ஆய்வு, உள்ளீட்டு — வெளியீட்டு முறை என்ற பலவும் இணைந்துள்ளன என்பதையும் அறிதல் வேண்டும்.

இக் கணக்கு ஒரு நாட்டின் முடிவான உற்பத்தி, நுகர்வு, மூலதனக் குவிப்புப் போன்ற பலவற்றையும் அளவிட உதவுகிறது. இது மாற்றமடைந்து கொண்டிருக்கும் பொருளாதார, நிதி நடவடிக்கைகள் பற்றி ஆராய்கிறது. காரணிகளின் ஓட்டத்தையும், அதற்குரிய காரணி விலைகளால் நிர்ணயிக்கப்படும் அக் காரணி உடமையாளரின் வருமான ஓட்டத்தையும் இது ஆராய்கிறது, ஒரு நாட்டின் தேவைகள் நிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றப்படுதல் தொடர்பான நடவடிக்கைகளின் அளவையும், மறுபக்கத்தில் உற்பத்தி, நுகர்வு, முதலீடு போன்ற பல்வேறு நடவடிக்கைகளிடையிலான தொடர்பையும் ஆராய்கின்றது. பிராங்க் சான் (Frank Zahn) என்பவர் ''பொருளாதார நடவடிக்கைகளின் மொத்தத்தை அடையாளம் கண்டு, அளப்பதே தேசிய வருமானம்'' என்றார். பொருளாதாரத்தில் காணப்படும் சிக்கலான நிதிப்பரிவர்த்தனைகளிடையிலான இணைத் தொடர்புகள், தன்மை, அளவு பற்றி மதிப்பிட உதவும் கருவியாகவே தேசிய வருமானக் கணக்குக் காணப்படுகிறது எனப் போல் ஸ்ருடென்ஸ்கி (Paul Studenski) கூறுகிறார். டேன்பேர்க்கும் மக்டுகலும் (Dernberg and Mc Dougall) பொருளாதாரத்தின் தேசிய உற்பத்திக் கணக்கு என்பது ஒன்றுதிரட்டிய நடைமுறை வருமானத்தின் சேர்க்கையாகவும், பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளின் உற்பத்திப் பெறுமதியாகவும் அமையும் என்றனர்.

இவ்வாறான வரைவிலக்கணங்கள் தேசிய வருமானக்கணக்குப் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிய ஒழுங்குமுறையான தரவுகளிலான விளக்கம் என்பதைக் காட்டும். இது ஒருபுறம் பல்வேறு பொருளாதாரத் துறைகளான விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து, வர்த்தகம், வங்கியியல் போன்றவற்றின் முடிவு நிலையிலான மொத்தப் பெறுமதியைக் காட்டும் புள்ளி விபரமாகக் காணப்படுகிறது. மறுபுறம் பல்வேறு துறைகளிலிருந்து கிடைக்கும் காரணிகளின் வருமானப் பகிர்வு பற்றியும், அவ்வாறு பெற்ற வருமானங்கள் மக்களால் எவ்வாறு செலவிடப்பட்டன என்றும் காட்டுகின்றன என்பதாகும்.

தற்போது எல்லா நாடுகளும் பணப் பொருளாதாரங்களாகவே காணப்படுகின்றன. இங்கு தொழிற் பிரிவுகளும் தெளிவாக வளர்ச்சி பெற்றுள்ளன. இதனால் ஒவ்வொரு துறைபற்றியும் தெளிவான புள்ளி விபரங்களைப் பெற முடிகிறது. தனி நபர்கள் தமது தொழிற்பாடுகளுக்கு ஏற்ப குடும்பங்கள், நிறுவனங்கள் என்ற வகையில் பண்ட உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபடுகின்றனர். இவைபற்றிய புள்ளி விபரங்களாகத் தேசிய வருமானம் காணப்படுகிறது. பொருளாதாரம் முழுவதும் உற்பத்தியாளர்துறை, நுகர்வோர்துறை, அரசாங்கத்துறை என்று மூன்று துறைகளின் தொழிற்பாடு தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுகின்றது. ஒத்த தொழிற்பாடுகள் பலவும் ஒருங்கிணைக்கப்பட்டு துறையடிப்படையில் தொகுக்கப்பட்டிருக்கும். உற்பத்தி தொடர்பான ஒழுங்கமைப்பில் தொடர்புடைய நபர்கள் அல்லது நிறுவனங்கள் ஆகியோரின் நடவடிக்கைகள் இணைக்கப்பட்டதே உற்பத்தியாளர் துறையாகும். சேவைகளை வழங்கக்கூடியதாயும் நுகர்வோராயும் உள்ள வீட்டுத்துறை சார்ந்த நபர்களின் நடவடிக்கைகளை உள்ளடக்கியது நுகர்வோர் துறையாகும். ஒரே நபர் இரு துறைகளிலும் செயற்படுபவராயிருத்தலும் கூடும். ஒவ்வொரு செயற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுக்குமேற்ப துறைகள் மாற்றப்படும். அரசாங்கத்தின் செயற்பாடுகள் முழுவதும் அரச துறையில் சேர்க்கப்படும். இவை ஒரு பொருளாதாரத்தின் உள்நாட்டுத்துறையில் காணப்படுவனவாகும். எனினும் நாட்டின் முழுமையான, தேசிய ரீதியிலான பொருளாதார, நிதி நடவடிக்கைகள் எல்லாம் இன்றைய நிலையில் அதன் அரசியல் எல்லைக்குள் அடங்குவதில்லை. அவை தேசிய எல்லைகளுக்கு அப்பாலும் செல்கின்றன. சர்வதேச ரீதியில் பிறநாடுகளுடனான தொடர்பில் உள்ள நடவடிக்கைகளும் சேர்த்தே தேசிய வருமானக் கணக்கு அமைகிறது.

## படிமுறை வளர்ச்சி :

தேசிய வருமானம் என்ற எண்ணக்கரு முதன் முதலில் பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் சேர் வில்லியம் பெற்றி (Sir William Petty) என்பவராலும், பிரான்ஸில் பொயிஸ் கில்பேர்ட் (Bois Guillebert) என்பவராலும் உருவாக்கப்பட்டது. அக்காலத்தின் தனிநபர்கள் தமது செல்வம், ஆற்றல் என்பவற்றை ஒப்பிடுவதற்கு தமது வருடாந்த வருமானங்களை ஒப்பிடுவதுண்டு. இத்தகைய பழக்கத்தின் விரிவாக்கமாகவே தேசிய வருமானக் கணக்கு காணப்படுகின்றது. பல்வேறு நாடுகளின் செல்வம், சக்தி என்பவற்றை ஒப்பிடுவதற்கு தேசிய வருமானக் கணக்கு உதவுகிறது.

வில்லியம் பெற்றி என்பவர் 1676இல் வெளியிட்ட "அரசியல் எண்கணிதம்" (Political Arithmetic) என்ற நூலில் மக்களின் வருடாந்த உழைப்பு பெறுமானம் பற்றிய தொகையே தேசிய வருமானம் என்கிறார்.

1696இல் கிறகெரி கிங் (Gregory King) என்பவர் இங்கிலாந்தின் ஒவ்வொரு பொருளாதார சமூக வகுப்பினதும் தலா வருமானம், செலவு, சேமிப்பு போன்றவற்றைத் தனித்தனியாகக் கணித்து, அவற்றின் அடிப்படையில் தேசியவருமானத்தைத் தயாரித்தார். தற்போதைய தேசிய வருமானக் கணக்கு முறைக்கு இவர் வழிகாட்டியவர் எனலாம். தொடர்ந்து இங்கிலாந்தில் இக்கணக்கைச் சரியான முறையில் கணிப்பதற்கு பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் முயற்சிக்கப்பட்டது. எனினும் இருபதாம் நூற்றாண்டிலேயே இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பியநாடுகளில் சரியான கணக்குமுறை ஏற்படுத்தப்பட்டது. இரண்டாம் உலக யுத்த காலத்திலேயே இக்கணக்கு இறுதிவடிவம் பெறலாயிற்று. பேராசிரியர் சைமன் குஸ்நெட்ஸ் (Prof. Simon Kuznets) முதன்முதலில் மிகவும் சரியான முறையில் அமைந்த தேசிய வருமானக் கணக்கு அமைப்பை ஏற்படுத்தினுர். யுத்தம் முடிந்தவுடன் சர்வதேச அமைப்புக்களான ஐக்கிய நாடுகள் தாபனம் (U. N. O.), சர்வதேச நாணய நிதியம் (I. M. F.), உலகவங்கி (I. B. R. D.) போன்றனவற்றுக்குச் சர்வதேசரீதியில் உலக நாடுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார, தராதரங்களை ஒப்பிடுவதற்கு ஒழுங்கான விரிவான விபரங்கள் தேவைப்பட்டன. 1947 அளவில் பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, அயர்லாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகள் தொடர்புடையதாக முழுமையான தேசிய வருமானக் கணக்கு முறையை ஏற்படுத்தின. இலங்கையில் 1952இல் அப்போதைய திட்டமிடல் செயலக பொறுப்பதிகாரியாக இருந்த திரு. வில்லியம் என்பவர் அப் போதைய தேசிய வருமானப் புள்ளிவிபரங்களைச் சுங்கப்பகுதியிலிருந்து பெற்று தேசிய உற்பத்தி, தேசிய செலவு என்பவற்றைக் கணித்தார். 1950 ஆகஸ்ட் 28ஆம் திகதியிலிருந்து மத்திய வங்கி தொழிற்படத் தொடங்கியபோதும் உடனடியாக இக்கணிப்பில் அது ஈடுபடவில்லை. பின்புதான் இலங்கை மத்திய வங்கி தேசிய வருமானத்தைக் கணிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. 1960இல் ஐக்கியநாடுகள் தாபனம் பல்வேறு நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளை ஒப்பிடக்கூடிய முறையில் தேசியவருமானக் கணக்கைத் தயாரித்தது. அத்தகைய கணிப்பு முறையே “நியம தேசியக் கணக்கு முறை” (Standard National Accounts System - SNA) எனப்படுகிறது.

இதன்படியே தற்போதைய தேசிய வருமானக் கணக்கு கணிக்கப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 2

# தேசிய வருமான உபயோகம்

தேசிய வருமானம் ஒரு நாட்டின் பொருளாதார செயற்பாடுகள் பற்றி புள்ளி விபரங்களாகவே காணப்படுகின்றது. எல்லா நாடுகளும் தற்போது வருடாந்தம் இதைக் கணித்து வருகின்றன. இந்தப் புள்ளி விபரங்கள் பல்வேறு வழிகளிலும் உபயோகப்படுகின்றன. இதுவே தேசிய வருமானத்தின் முக்கியத்துவமாக விளங்குகின்றது. இவற்றைப் பின்வருமாறு நோக்க முடியும்.

**(1) திட்டமிடல் :**

அரசதுறையினர் பொருளாதார அபிவிருத்திக்கான கொள்கைகளைத் தீர்மானித்துக்கொள்ள தேசிய வருமான புள்ளிவிபரங்கள் உதவுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலத்தின் பொருளாதார துறைகளின் வளர்ச்சி பற்றிய புள்ளி விபரங்களிலிருந்து அவ்வத்துறைகளின் முதன்மையை அறிய முடியும். பொருளாதாரத் திட்டங்களைப் பிரதானமாகக் கொண்டு இயங்கும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்களில் இத்தரவுகள் வழிகாட்டிகளாக அமைகின்றன. பொருளாதார இலக்குகளைத் தீர்மானிக்கவும், திட்டங்களைத் தயாரிக்கவும் உதவுகின்றன. நாட்டின் சேமிப்பு, வருமானம், நுகர்வு, முதலீடு, தொழில்வாய்ப்பு போன்றவற்றின் மொத்த புள்ளிவிபரங்கள் கிடைப்பதால் அவற்றின் அடிப்படையில் சாத்தியமாகக் கூடிய திட்டங்களைத் தயாரிக்க முடிகின்றது.

இதேபோல் வருடமுடிவில் அல்லது திட்டகால முடிவில் தேசிய வருமானத்தைக் கணிப்பதால் அபிவிருத்தித் திட்டங்களைச் சரியாக மதிப்பீடு செய்துகொள்ள இயலும். எந்தளவுக்கு அவை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன, எத்தகைய மாற்றங்கள் தேவையென முடிவு செய்தற்கு தேசிய வருமான கணிப்பீடுகள் உதவும்.

**(2) தொழில் முடிவுகள் :**

நாட்டின் பெரிய தொழில் நிறுவனங்கள் தமது நிறுவன செயற்பாடு பற்றி மிகச் சரியான முடிவு எடுப்பதற்குத் தேசிய வருமானப் புள்ளி விபரங்கள் உதவும். நாட்டின் மொத்த உற்பத்தியில் தமது நிறுவனத்தின் பங்கு என்ன என்பதையும் மொத்தச் சந்தையில் எத்தனை சத வீதத்தைத் தாங்கள் கைப்பற்ற வேண்டும் என அறியவும் மக்களின் செலவு பற்றிய புள்ளிவிபரங்கள் உதவும். மக்களின் வருமானப் பரம்பல் எவ்வாறமைந்துள்ளது என அறிந்தால், அதன்படி தமது வியாபார உத்திகளைத் தீர்மானித்துக்கொள்ள முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) தொழிலாளர் கோரிக்கைகள் :

நாட்டில் உள்ள தொழிற்சங்கங்கள், ஏனைய தொழிலாளர் நிறுவனங்கள் என்பன தேசிய வருமானப் பரம்பல் மற்றும் அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் என்பன பற்றி அதிக அக்கறையுடையவர்கள். நாட்டின் உற்பத்திப் பெருக்கம் அதில் தொழிலாளர் பங்கு என்பவற்றை அறியவும், அதன்படியான தமது நடவடிக்கைகளை நிச்சயிக்கவும் தேசிய வருமானப் புள்ளிவிபரங்கள் உதவும். தொழிலாளர் வேலை நேரம் கூடியும் தேசிய வருமானத்தில் அவர்கள் பெற்றுக்கொள்ளும் பங்கின் சதவீதம் குறைவாகவும் காணப்படுமாளுல் கூலி உயர்வுக் கோரிக்கைகளிலும் அவர்கள் ஈடுபட முடியும்.

(4) பொருளாதார வளர்ச்சி :

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, மக்களின் பொருளாதார நலன் என்பவற்றைச் சரியாகக் காட்டக்கூடிய குறிகாட்டி தேசிய வருமானமாகும். உற்பத்தி, நுகர்வு, முதலாக்கம் போன்றவற்றின் விபரங்களிலிருந்து அவற்றின் போக்கினை அறியலாம்.

குறித்த வருடங்களிடையிலான பொருளாதார வளர்ச்சி தொடர்பான மாற்றங்களை மதிப்பிட்டுக்கொள்ள தேசிய வருமான புள்ளி விபரங்கள் உதவும். இலங்கையில் 1978இல் 8.8 வீதமாயிருந்த பொருளாதார வளர்ச்சி 1985இல், 5.3 வீதமாகியதிலிருந்து இலங்கையின் வளர்ச்சி உறுதியற்ற போக்கைக் கொண்டிருப்பதை அறியலாம்.

(5) சர்வதேச ஒப்பீடு :

சர்வதேச ரீதியில் நாடுகளை ஒப்பிடும்போது வறிய, செல்வந்த நாடுகளை ஒப்பிட்டுக்கொள்ள உதவுகிறது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளைவிட அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடுகளின் தலா வருமானம் உயர்வாக இருப்பதை அறியமுடிதல் இவ்வாருனது.

இப் புள்ளி விபரங்களின் அடிப்படையில்தான் ஐக்கியநாடுகள் தாபனம், உலகவங்கி போன்றன ஒப்பிட்டு, தமது உதவிக்கு உரிய நாடுகள் எவையெனத் தீர்மானித்துக்கொள்கின்றன.

(6) பொருளாதாரக் கட்டமைப்பு :

ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் ஒவ்வொரு பொருளாதாரத் துறையினதும் சார்புரீதியான பங்கினைக் காட்டக்கூடியதாக தேசிய உற்பத்தியின் துறைசார் வீதங்கள் உதவுகின்றன. இதன் அடிப்படையில்தான் வளர்முக நாடுகளில் பெரும்பாலானவை விவசாய நாடுகள் என்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் அதிகமானவை கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் நாடுகள் என்றும் அறிந்துகொள்ள முடிகின்றது. இதன்படி கைத்தொழில் துறையின் வளர்ச்சியானது பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் எனவும் அறிய உதவுகிறது.

இதன்படியே இலங்கை விவசாயப் பொருளாதாரம் என ஏற்றுக் கொள்ளப்படுகிறது. 1985இல் விவசாயத்துறையின் பங்கு மொத்த உற்பத்தியில் 26·6% மாக இருந்தபோது தயாரிப்புத் தொழிலின் பங்கு 15.2% மாத்திரமாகவே கணப்பட்டது என்பதையும் அறியமுடிகின்றது·

(7) மூல வளப் பாவனை:

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மூலவளங்கள் எவ்வளவுக் குப் பங்களிக்கின்றன என்பதை அறிந்துகொள்ளவும் அதன் அடிப்படை யில் வளப்பாவனை பற்றிய கொள்கைகளை அரசாங்கம் மாற்றியமைப் பதற்கும் தேசியவருமானக் கணிப்பீடு உதவும். பொதுவாக அபிவிருத் திக்கான வளங்கள் உள்நாட்டு உற்பத்தியிலிருந்தும் இறக்குமதியி லிருந்தும் பெறப்படுவதுண்டு. இவற்றில் இறக்குமதியில் தங்கியிருக்கும் பங்கு குறைந்துவருவதே விரும்பத்தக்கது.

இலங்கையின் புள்ளிவிபரங்கள் இறக்குமதி வளங்களில் இலங்கை தங்கியிருத்தல் அதிகரிப்பதாகவே காட்டுகின்றன. 1977இல் இறக்கு மதி வளங்கள் 23 வீதமாயிருந்தன. 1985இல், இவை 28 வீதமாகிவிட் டன. இது குறைக்கப்படல் வேண்டும் என்பதை அறிய தேசிய வருமா னக் கணிப்பீடு உதவுகின்றது.

(8) செலவு அமைப்பு :

ஒரு நாட்டு மக்கள் தமது வருமானத்தை எவ்வாறு செலவிட்டார் கள் என்பதை அறிந்துகொள்ள செலவு வழியில் கணிக்கப்பட்ட தேசிய வருமானம் உதவுகிறது. மக்களின் நுகர்வுச் செலவு எவ்வாறு குறைந் துள்ளது, சேமிப்பு ஆற்றல் எவ்வாறு கூடியுள்ளது, நாட்டின் முத லாக்கம் எவ்வாறு மாற்றமடைந்துள்ளது போன்ற விபரங்களை அறிய தேசிய செலவு பற்றிய கணிப்பீடுகள் உதவும்.

இலங்கையில் நுகர்வானது 1977இல் 62.6 வீதமாயிருந்தது. 1985இல் 62 வீதமாக மட்டுமே குறைந்துள்ளது. இதன்படி நுகர்வு நாட்டம் குறையவில்லை என்பது அறியப்படுகின்றது. இதேபோல நாட்டின் மொத்த உள்நாட்டு நிலையான முதலாக்கம் இதே காலப்பகுதியில் 11.2 வீதத்திலிருந்து 16 வீதத்துக்கு மட்டுமே உயர்ந்துள்ளது என் பதையும் அறியமுடிகிறது. இதன்படி இலங்கையின் சேமிப்பு மட்டத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என்பதை இவை காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9) நாணய நிதிக் கொள்கைகள் :

ஒருநாட்டில் குறித்த காலப்பகுதியில் சிலவகையான நாணய நிதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதனுல் பொருளாதாரத்தில் ஏற்பட்ட விளைவுகளை அக்கால தேசிய உற்பத்தி, தேசிய வருமானம்' தேசிய செலவு பற்றிய புள்ளி விபரங்களிலிருந்து அறியலாம். இதன் அடிப்படையில் எதிர்காலத்தில் அவ்வாருன நாணய கொள்கைகள் பிரயோகிக்கத் தக்கனவா என முடிவு செய்து கொள்ள நாணய அதிகாரிகளுக்கு மிகவும் உதவும்.

வரையறைகள் :

மேலே குறிப்பிட்ட பல வழிகளில் தேசிய வருமானப் புள்ளி விபரங்களைப் பயன்படுத்தலாம் என்ருலும், அதில் சில வரையறைகளும் உள்ளன. அதாவது அத்தகைய எதிர்பார்ப்புகள் பூரணப்படுத்த முடியாத வகையினதாகவும் காணப்படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை பின்வருவன :-

1. ஒரு வருடத்தின் எல்லாவகையான பொருளாதார நடவடிக்கைகளும் புள்ளிவிபர பதிவுக்குள் வருவதில்லை. இதனுல் நாட்டில் செயற்பாடுகள் இடம்பெற்று பொருளாதாா நலன்களும் ஏற்பட்டாலும் அவை இவற்றில் வெளிப்படுவதில்லை.

நாட்டில் ஊழியச்சந்தை, பண்டச் சந்தை, உள்நாட்டு நிதிச் சந்தைகள், அந்நியச் செலாவணிச் சந்தைகள் போன்ற பலவற்றிலும் இடம்பெறும் எல்லா செயற்பாடுகளும் சட்டபூர்வமான பதிவுகளில் வருவதில்லை. ஊழியச் சந்தையில் சிறுவர் ஊழிய நேரமும், வேலையின் அளவும் கூடுதலாக இருப்பினும், கொடுபடும் கூலியினளவு மிகவும் குறைவாயும் சட்டபூர்வமான பதிவில் இடம் பெருததாகவுமுள்ளது. பெண்கள், இளைப்பாறியோர் போன்றவர்கள் இழிவுக்கூலி, மேலதிக வேலைநேரம், போன்ற விதிகளின்படி பயன் படுத்தப்படுவதில்லை. ஊழியத்திலும் கறுப்புச்சந்தை வளர்ந்துள்ளது. இதேபோல் பொருட்சந்தையிலும் விலைக்கட்டுப்பாடு, பங்கீட்டு முறை, கட்டாய விற்பனை, இறக்குமதித்தடை போன்ற விதிகளும் சட்டபூர்வமற்ற செயற்பாட்டை ஊக்குவிக்கின்றன. ஆபிரிக்க நாடுகளில் இத்தகைய மறைவான சந்தைகள் அதிகமாகும். நிதிச்சந்தையில் வட்டி வருமானங்களைக் கிராமிய மட்டத்தில் குடும்பங்கள் பெறும்போது அவை வரிவிதிப்புக்குரியதாகக் காட்டப்படுவதில்லை. வட்டி வருமான விபரங்கள் சரியானதாயில்லை. இலங்கையின் கிராமங்களில் இது அதிகமாகும். அந்நியச் செலாவணி மாற்றுவதிலும் கள்ளச் சந்தை நடவடிக்கைகளும் வறியநாடுகளில் அதிகரித்துள்ளன. அவை தேசிய வருமானக் கணக்கில் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதில்லை. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரிகள் பண்ட பெறு மதிகளைக் கூட்டியும், குறைத்தும் காட்டுவதால் அதிக இலாபம் உழைக்க முயல்வர். இது அந்நியச் செலாவணிச் சந்தையில் பல விபரங்களை மறைத்து விடுகிறது.

பண்டவடிவில் இன்னமும் கிராமியத்துறையில் சில வருமானங் கள் பெறப்படுகின்றன. அது அவர்கள் வாழ்க்கைத்தரத்தையும் பாதிக்கின்றது. ஆனால் அவை தேசிய வருமான புள்ளி விபரங்க ளில் தெரிவதில்லை.

2. எல்லாப் பொருளாதாரங்களிலும் சில நடவடிக்கைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் தனியார் அவற்றை மேற்கொள்ள விரும்புகின்றனர். அப்போது களவான முறையில் இயங்குகின்றனர். இவை தேசிய வருமானத்தில் இடம்பெறமாட்டா. சட்டரீதி யற்ற போதைப்பொருள் விற்பனை, சட்டரீதியற்ற சூதாட்டம், நேர்மையற்ற வட்டிவீதங்களுக்குக் கடன் வழங்குதல் போன்றன இத்தகையனவாகும். சட்டபூர்வமாக வேலையற்றவராகத் தென் படுபவர் மிகக் கூடிய வருமானம் பெறும் நிலை பல நாடுகளில் தென்படுவது இவ்வகையானதே. ஐக்கிய அமெரிக்காவில் இவ் வாறு தேசிய வருமானத்தில் சேராத நடவடிக்கைகள் குறிப் பிடத்தக்க அளவில் உள்ளதாக விற்ரோ ரான்சி (Vito Tanzi) குறிப்பிடுகின்றார்.

3. பல நாடுகளில் உயர் அதிகாரத்தில் இருப்பவர்கள் தமது பொது அதிகாரத்தைத் தனிப்பட்டமுறையில் பிரயோகிக்கின்றனர். (Private use of public power). இது சட்டரீதியற்றதே. இந்த வகையில் அதிக வருமானங்களை சட்டரீதியற்ற வகையில் திரட்டிக் கொள் கின்றனர். இவை பல நாளிதழ்களில் அடிக்கடி பிரசுரிக்கப்படு கின்றன. அரச உத்தியோகங்களை வழங்குவதிலும், அரச கட்டிட ஒப்பந்த வேலைகளைப் பெறுவதிலும் பலர் இவ்வகைக் கொடுப்பனவு களை உயர் அரச அதிகாரிகளுக்குக் கொடுப்பதுண்டு. சில தொழில் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கும் அதிக பணம் பெறுகின் றனர். வறிய நாடுகளின் அரச தொழிலின் குறைந்த கூலிமட் டங்கள் இதற்கு ஊக்கமளிப்பதாயும் கூறப்படுகின்றது. இவ்வகை ஆட்சிப்பணித்துறை ஊழல்கள் (Bureaucratic corruption) சார்ந்த வருமானங்கள் தேசிய வருமானக் கணக்கில் காட்டப்படச் சந்தர்ப்பமில்லை.

## ஒப்பீட்டிற்குப் பயன்படுத்தல்

பொதுவாக உலகரீதியில் நாடுகளை ஒப்பிடுவதற்குத் தேசிய வருமானத் தரவுகள் சிறப்பாக தலா தேசிய வருமானத் தரவுகள் பயன்படுத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. ஆனால் தலா வருமானத்தை மாத்திரம் கொண்டு இரண்டு நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கைத்தரம் போன்றனபற்றி ஒப்பீடு செய்வது திருப்தியானதல்ல. இதனால் தலா தேசிய வருமானத்துடன் பின்வரும் விடயங்களையும் கருத்தில் கொண்டால் ஓரளவு சரியான முடிவுகளைப் பெறக்கூடியதாக இருக்கும்.

(i) பௌதிக நிலைமைகள் :

குறித்த வருடத்தில் இருநாடுகளிலும் காணப்பட்ட வரட்சி, வெள்ளப்பெருக்கு, புவிநடுக்கம், எரிமலைப் பாதிப்புப் போன்ற நிலைமைகளையும் அறிந்துகொள்ளுவது மிக அவசியம்.

(ii) அரசியல் நிலைமைகள் :

குறித்த வருடகாலத்தில் இரு நாடுகளிலும் காணப்பட்ட அரசியல் குழப்பங்கள், ஆட்சி மாற்றங்கள், இராணுவ நடவடிக்கைகள், வேலை நிறுத்தங்கள் போன்ற பலவற்றையும் ஒப்பிடல் அவசியம்.

(iii) புதிய கண்டுபிடிப்புகள் :

குறிப்பிட்ட வருடத்தில் இரு நாடுகளிலும் ஏதேனும் புதிய கனிப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டனவா என்பதையும் கவனித்தல் வேண்டும். எண்ணெய்க் கிணறுகள், தங்கச் சுரங்கங்கள், இரும்புப் படிவுகள் ஏதேனும் ஒரு நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டனவா என்பதையும் கவனித்தல் வேண்டும்.

(iv) ஊழியப்படை விகிதம் :

குறித்த வருடகாலப் பகுதியிலான இரு நாடுகளினதும் மொத்த குடித்தொகையிலான ஊழியப் படையினரின் விகிதங்களையும் ஒப்பிடல் வேண்டும். ஊழியப்படையினருக்கான வயதெல்லை, போஷாக்கு நிலை, தொழிற் பயிற்சி, கல்வித்தரம், உழைப்பு பற்றிய மனோபாவம் என்பவற்றையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

(v) பணவீக்க வீதம் :

ஒப்பிடப்படும் இரண்டு நாடுகளிலும் குறித்த வருடகாலப்பகுதியான விலைமட்ட உயர்வு வீதங்கள் எவ்வாறமைகின்றன என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். ஏனெனில் தேசிய வருமானம் பணரீதியில் அளவிடப்பட்டிருப்பதோடு, அந்தப் பண அளவீடு விலையடிப்படையிலேயே அமைகின்றது என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(vi) முறை சாராத் துறைகள் :**

ஒப்பிடப்படும் இருநாடுகளிலும் முறைசாராத்துறைகள் (Informal sectors) எந்தளவு வளர்ச்சி பெற்றுள்ளன என்பதை ஒப்பிடல் வேண்டும். கிராமியத்துறை அதிகமாயும், சுயதொழில்தன்மை கூடுதலாயும், பண்டமாற்று தொழிற்பாடு குறிப்பிடத்தக்களவிலும், குடும்பத்துறை அதிகளவிலும் ஒரு நாட்டிலிருப்பின் புள்ளிவிபரங்களில் அவை அதிகம் உள்ளடக்கப்பட்டிருக்க முடியாது. இதனால் எந்த நாட்டில் இத்தன்மை கூடியுள்ளது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**(vii) நாணய மாற்று விகிதம் :**

ஒவ்வொரு நாடும் தனது செலாவணியிலேயே தேசிய வருமான விபரங்களை வெளியிட்டிருந்தால், இரண்டு செலாவணிகளினதும் நாணய மாற்றுவிகிதங்கள் எவ்வாறு அமைகின்றன, எவ்வாறு மாற்றமடைந்துள்ளன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாறாக இரண்டும் ஐக்கிய அமெரிக்க டொலரில் அல்லது சிறப்பு எடுப்பனவு உரிமை (S. D. R.) அடிப்படையில் கணிக்கப்பட்டிருப்பின், அந்த செலாவணிக்குரிய ஒவ்வொரு நாட்டினதும் நாணயமாற்று விகிதங்களில் ஏற்பட்ட வேறுபாட்டையும் ஒப்பீட்டுக் கொள்ளுதல் உபயோகமுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 3

# வருமான வட்டப் பாய்ச்சல்

ஒரு பொருளாதாரம் என்பது மக்கள் தேவைகள் நிறைவேற்றப் படுவதற்கான நடவடிக்கைகளை ஒழுங்கானமுறையில் கொண்டவை என்பதேயாகும். இவ்வாறு தேவைகளை நிறைவேற்றல் என்பது பொருள் வடிவிலான ஓட்டத்துடன் அதாவது மெய் ஓட்டத்துடன் (Real flow) தொடர்புடையதாகும். அதேபோல் மறுபுறமாகப் பண வடிவிலான ஓட்டத்துடனும் (Money flow) இது தொடர்புடையது. இவை பொருள் உற்பத்திக்காக நிலம், உழைப்பு, முதல், முயற்சி போன்ற சாதனங்களின் அசைவுடனும் பங்கீட்டுக்காக முடிவுப் பொருட்கள் சேவைகளின் அசைவுடனும் தொடர்புடையவை. இவை பிரதானமாக இரு பகுதி அல்லது துறைகளுடன் தொடர்புடையவை. அவையாவன:

(i) குடும்பத்துறை அல்லது நுகர்வுப்பகுதி


(ii) நிறுவனத்துறை அல்லது உற்பத்திப்பகுதி

மேற்குறிப்பிட்ட இரு பகுதிகளுக்கிடையிலான உள்தொடர்புகள் தேசிய வருமானச் சுற்றோட்டம் ஆகும். இது இரண்டு சந்தர்ப்பங்களில் நிகழ்கிறது.

(அ) உற்பத்திச் சந்தர்ப்பம்:

உற்பத்தி என்பது முடிவுப்பண்டங்களை ஆக்குதற்கென நிலம், உழைப்பு, முதல், முயற்சி போன்ற ஆக்கக் காரணிகளை அதன் உடமையாளரான குடும்பத்துறையினரிடமிருந்து பெற்றுப் பயன்படுத்துவதாகும். இதனால் நுகர்வுப் பகுதியிடமிருந்து உற்பத்திப் பகுதியால் பணவிலை கொடுத்துக் காரணிச் சேவைகள் வாங்கப்படும். இந் நிலையில் உற்பத்திப் பகுதிக்குக் காரணிகளின், சேவைகளின் ஓட்டம் இடம்பெறும். இதற்குப் பதிலாக உற்பத்திப்பகுதியிலிருந்து நுகர்வுப் பகுதிக்கு விலை வடிவில் பண ஓட்டம் உண்டாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 1:1

**(ஆ) நுகர்வுச் சந்தர்ப்பம்:**

இங்கு நுகர்வுப் பகுதியினருக்கு நுகர்வதற்காக உற்பத்திப் பகுதியிலிருந்து முடிவுப் பொருட்கள், சேவைகள் செல்லும். நுகர்வுப் பகுதியினராகிய குடும்பங்கள் பணவிலைகளை உற்பத்திப் பகுதியாகிய நிறுவனங்களுக்குக் கொடுத்து அதற்காகப் பண்டங்களை வாங்கிக்கொள்கின்றனர். இங்கு நுகர்வுப்பகுதிக்குப் பொருள் ஓட்டமும், உற்பத்திப்பகுதிக்குப் பண ஓட்டமும் உண்டாகும்.




படம் 1:2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின்படி

(i) மெய் ஓட்டம்: நுகர்வுப் பகுதியிலிருந்து காரணிகள் உற்பத்திப் பகுதிக்குச் செல்லுதல்.

பின்பு பதிலாக உற்பத்திப் பகுதியிலிருந்து முடிவுப் பொருட்கள் நுகர்வுப் பகுதிக்குச் செல்லுதல் ஆகும்.

(ii) பண ஓட்டம்: உற்பத்திப்பகுதியிலிருந்து காரணி விலைகளாக வருமானம் நுகர்வுப்பகுதிக்குச் செல்லுதல், பின்பு பதிலாக நுகர்வுப்பகுதியிலிருந்து பண்டங்களின் விலைகளாக வருமானம் உற்பத்திப் பகுதிக்குச் செல்லுதல் ஆகும். இத்தகைய ஓட்டங்களின் தொடர்பே பொருளாதாரததின் "வருமான வட்டப் பாய்ச்சல்" எனப்படுகின்றது. இதைப் பின்வருமாறு படத்தில் காட்ட முடிகிறது.




படம் 1 . 3

படம் 1 . 3 இன்படி ஒரு நாட்டின் தேசிய வருமானம், தேசிய உற்பத்தி, தேசிய செலவு என்பவற்றிடையிலான உள்ளார்ந்த ரீதியில் அமைந்த தொடர்கள் காட்டப்பட்டுள்ளன.

காரணி விலைகளாக நிறுவனங்களால் கொடுபடுபவை உற்பத்தியாளரின் காரணி விலையிலான செலவுகளாகின்றன. இதற்கு சமனுக உற்பத்திப் பெறுமதி அமையும். இதுவே தேசிய உற்பத்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு காரணி விலைகளே குடும்பத்துறையினரால் பெறப்பட்டிருக்கும். இவை அவர்களின் வருமானமாகும். இதுவே தேசிய வருமானமாகும்.

இவ்வாறு பெற்ற பணவருமானத்தைக் கொண்டு குடும்பங்கள் பண்டங்களை வாங்குதற்கு அவற்றுக்கான உற்பத்திப் பெறுமதிப்படி பணம் கொடுப்பர். அதாவது பணவருமானத்தைச் செலவு செய்வர். இதுவே தேசிய செலவாகும். இதன்படி தேசிய வருமானம் தேசிய உற்பத்திக்கும், தேசிய செலவுக்கும் சமனாகும் என்பதாகும். அதாவது உற்பத்திச் சுற்றோட்டத்துள் வருமான ஓட்டமும், வருமான ஓட்டத்துள் செலவு ஓட்டமும் உண்டாகின்றன என்பதாகும். இதன்படியே தேசிய வருமானம் என்பது உற்பத்திமுறை, வருமானமுறை, செலவு முறை என்ற மூன்று முறைகளிலும் அளவிடப்படலாம் எனப்படுகிறது.

எடுகோள்கள் :

இங்கு மிகவும் எளிய வருமான வட்டப் பாய்ச்சல் விளக்கப்பட்டுள்ளது. இச் சுற்றோட்டத்தை செயற்படுத்துவனவாக பின்வரும் எடுகோள்கள் அமைகின்றன :-

(i) பொருளாதாரம் சுழற்சி நிலையில் உள்ளது என்றும் இங்கு வெளி நாடுகளுடனான கொடுக்கல், வாங்கல்கள் எதுவும் நிகழவில்லை என்றும் கொள்ளப்படும். அதாவது பொருளாதாரம் மூடப்பட்டதாயுள்ளது என்பதாகும்.

(ii) இங்கு குடித்தனத்துறை, நிறுவனங்கள் என்ற இரண்டு துறைகள் மாத்திரமே இயங்குகின்றன. அரசாங்கம் பொருளாதாரக் கடமைகளில் தலையிடுவதில்லை. அதாவது அரசாங்கம் உற்பத்தியாளனுக்கோ, நுகர்வோனுக்கோ உதவிப்பணம் எதுவும் கொடுக்காததுடன், அவர்களிடமிருந்து வரி அறவிடுவதும் இல்லை. இதேபோல் அரசு பண்டங்கள், சேவைகளுக்காகச் செலவு செய்யவுமில்லை.

(iii) பொருளாதாரத்தில் சேமிப்பு எதுவுமில்லை. நுகர்வோர் தம் வருமானங்கள் முழுவதையும் நுகர்வில் செலவிடுகின்றனர். உற்பத்தியாளர்களும் மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்யவில்லை என்பதுமாகும்.

(iv) பொருட்கள் சேவைகளின் விற்பனையால் பெறப்படும் எல்லா வருமானமும், காரணி விலைகளுக்கான கொடுப்பனவுகளாகச் செலவிடப்பட்டு விடுகின்றன. அதாவது தமது வருமானத்தில் எதையும் நிறுவனங்கள் ஒதுக்கி வைக்கவில்லை என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 4

# தேசிய வருமானத்தை அளவிடல்

ஒரு நாட்டின் தேசிய வருமானம் பல வழிகளில் கணிக்கப்பட முடியும்.

(i) பொருட்கள் சேவைகளின் ஓட்டத்தைக் கொண்டு கணிப்பது உற்பத்திவழியிலானதாகும்.

(ii) வருமான ஓட்டத்தைக் கொண்டு கணிப்பது வருமானவழியிலானதாகும்.

(iii) செலவு ஓட்டத்தைக் கணிப்பது செலவுவழியிலானதாகும்.

## 1. வருமான வழியில் கணித்தல்:

ஒரு வருட காலத்தில் உற்பத்திச் செயல்முறையில் ஈடுபடுகின்ற பல்வேறு காரணிச்சேவைகளால் உழைக்கப்பட்ட வருமானத்தைக் கணிப்பதாகும். இவற்றின் கூட்டுமொத்தம் காரணிச் செலவிலானதாக அமையும். இந்தமுறையில் உள்ளடக்கப்படும் பல்வேறு வருமானங்களையும் பின்வருமாறு குறிப்பிடலாம்:

(i) கூலியும், ஊழியர் நட்ட ஈட்டுத் தொகைகளும்,
(ii) சமூகப் பாதுகாப்புக்கான தொழில் வழங்குனர் வழங்கு தொகை,
(iii) சுயதொழில் வருமானங்கள்,
(iv) பங்கிலாபங்கள்,
(v) வட்டி,
(vi) இலாபங்கள்,
(vii) வாடகை,
(viii) பொதுத்துறை நிறுவனங்களின் மிகைகள்,
(ix) தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம்.

இவற்றின் கூட்டுப் பெறுமதி காரணிச் செலவிலான மொத்த தேசிய வருமானம் ஆகும். இதிலிருந்து பெறுமானத் தேய்வைக் கழிக்க வருவது காரணிச் செலவிலான தேறிய தேசிய வருமானம் ஆகும்.

பொருளாதாரத்தில் பல்வேறு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்கு நிலம், உழைப்பு, முதல், முயற்சியுடைமை போன்ற பலவற்றின் ஒத்துழைப்புத் தேவை. அத்தகைய ஒத்துழைப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதற்கான வெகுமதியை அக்காரணிகள் பணம் அல்லது வேறு வடிவங்களில் பெற்றுக்கொள்கின்றன. உற்பத்தியாளர்கள் அவர்கள் ஒத்துழைப்பைப் பெறுதற்காக அவற்றுக்குப் பணம் கொடுக்கவேண்டிய நிலையிலிருப்பர். இவை காரணிகளின் விலையான காரணி வருமானங்களாகும். உற்பத்தியாளரைப் பொறுத்தவரை இவை கொடுக்கப்பட்ட வருமானங்களாகவும், காரணி உடமையாளரைப் பொறுத்தவரை இவை பெறப்பட்ட வருமானங்களாகவும் அமையும். இதனால் வருமானங்களைச் செலுத்திய நிறுவனங்களின் விபரங்களிலிருந்து இதைக் கணிக்கலாம். அல்லது காரணிகளால் பெறப்பட்டதிலிருந்து அறியலாம். எவ்வகையில் கணித்தாலும் தேசிய வருமானம் சமனாக இருத்தல் வேண்டும். தரவுகள் கிடைப்பதைப் பொறுத்து இரண்டு முறைகளில் அல்லது ஏதேனும் ஒரு முறையில் அவற்றைக் கணிக்கின்றனர். பல நாடுகளில் வருமானம் கொடுப்போரிடமிருந்து தரவுகள் பெறுவது சுலபமாயிருப்பதால் அவ்வகையிலேயே பெரிதும் கணிக்கப்படுகின்றது.

காரணிகளின் வருமானங்களைப் பின்வருமாறு பாகுபடுத்தி விளக்க முடியும் :

(1) கூலி வருமானங்கள் :

தொழிலாளரால் பெறப்படுபவை இவையாகும். இவர்கள் நாட்டின் குடிமக்களாக இருப்பார்கள். வரிகள் சமூக பாதுகாப்பு ஒதுக்குகள் என்பன கழிக்கப்படுவதற்கு முன் இவை கணிக்கப்படும். தனியார் நிறுவனங்கள், அரசாங்கம் ஆகியவற்றால் வழங்கப்படும் வேதனங்களும், சுயதொழில் உழைப்புகளும் இதில் சேர்க்கப்படக்கூடியவை. பல்வேறு அறிக்கைகள், வருடாந்த அளவீடுகள் (Surveys) போன்றவற்றிலிருந்து இவை கணிக்கப்படும். சில "ஈடுசெய் வருமானங்கள்" வீட்டு வேலையாட்கள், பண்ணைத் தொழிலாட்கள் போன்றவர்களினால் பெறப்படுகின்றன. "இணை ஊழிய வருமானம்" என்றவகையில் ஊழியர் சேமலாபநிதி, ஓய்வூதியம், சமூகபாதுகாப்புத் தேவை போன்ற வடிவங்களில் தொழிலாளருக்கு ஒதுக்கப்படுவதுமுண்டு.

(2) கூலியல்லாத வருமானங்கள்:

2.1. வட்டி, வாடகை, பகிரப்பட்ட இலாபங்கள், பங்கிலாபங்கள் என்பன இதில் அடங்கும். தொழில் முயற்சிகளுக்கு மூலதனம் வழங்கியதால் தனியாரும், இலாபம் உழைக்காத நிறுவனங்களும் (Non-Profit Making Institutions) பெற்ற வருமானம் வட்டியாகும். இதில் ஆயுள் காப்புறுதிப் பத்திரங்கள், வங்கி வைப்பு, திறைசேரி உண்டியல் போன்ற அரச பிணைகள் தொடர்பான வட்டியையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கலாம். குடும்பங்களால் தனிப்பட்ட முறையில் உழைக்கப் படும் வட்டி பற்றிய புள்ளி விபரங்கள் கிடைப்பது கடினமாகையால் அவை இதில் சேர்க்கப்படுவதில்லை.

2 . 2. வாடகை என்பது நிலம், கட்டிடம் என்பவற்றின் உரிமை காரணமாகப் பெறப்படும் மூலதனப் பங்காக அமையும். குடும்பத் துறையினர், இலாபம் உழைக்காத நிறுவனங்களினால் பெறப்படும் வாடகை வருமானம் அடங்கும். சொந்த நிலத்தைப் பாவிப்போர் சொந்த வீட்டில் குடியிருப்போர் தொடர்பான வாடகைகள் சேர்க்கப் படுவதில்லை.


2 . 3. இலாபங்கள், பங்கிலாபங்கள் என்பதில் பங்கிலாபங்கள், பகிரப்படாத இலாபங்கள் என்பன அடங்கும். இவை கூட்டு இலாப மாக இருக்கும். நிறுவனங்களிலிருந்து குடும்பங்களுக்கு வழங்கப்பட் டவையாக பங்கிலாபங்கள் இருக்கும். பகிரப்படாத இலாபங்கள் என்பது எதிர்கால வரிக் கொடுப்பனவுகளுக்கென நிறுவனங்களில் ஒதுக்கிவைக்கப்படுபவையாகும். இவை பங்கிலாபங்கள், வட்டிமாற் றங்கள், நேர்வரிகள் என்பன கொடுத்தபின்னர் எஞ்சிய தொகையாக இருக்கும்.

2 . 4. சுயதொழிலால் பெற்ற கலப்பு வருமானம் என்பது பெரி தும் தனது சொந்த நிலம், முதல் என்பவற்றைப் பயன்படுத்தித் தானாக ஒரு பொருளை உற்பத்திசெய்து பெறும் வருமானமாகும். இது முதலுக்கான வட்டி, நிலத்துக்கான வாடகை என்பதையும் உள்ளடக் கியதாகும். ஆனால் இவற்றைத் தெளிவாக வரையறை செய்ய முடியா திருப்பதால் இவை எல்லாம் வேலைக்கான வருமானம் எனப்படும்.

2 . 5. அரசதுறையினரால் ஏதேனும் மேலதிகம் உழைக்கப்பட் டிருந்தால் அவை தனியாருக்குப் பகிரப்படுவதில்லை. இவற்றை ஏனைய வருமானம் எனலாம்.

2 . 6. தேறிய வெளிநாட்டு காரணி வருமானமும் சேர்க்கப்படல் வேண்டும். இது ஒரு நாட்டுக்குச் சொந்தமான சொத்துக்கள், காரணி கள் என்பவை வெளிநாட்டு உற்பத்திக்கு உதவியதால் பெற்ற வரு மானங்களுக்கும், அதேவகையில் வெளிநாடுகளுக்குச் சென்ற தொகைக் கும் இடையிலான வேறுபாடாகும். இவ்வகை உட்பாய்ச்சல், வெளிப் பாய்ச்சல் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடு நேர்க்கணியமாக இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படம் 1:4

இவற்றைச் செய்முறை ரீதியாகவும் விளக்கலாம்.

உ + ம்: ஒரு நாட்டின் குறித்த ஆண்டுக்கான (உ + ம் 1986) தரவுகள் வருமாறு:

| | |
|---|---|
| வாடகை | 2000 |
| கூலிகளும், சம்பளங்களும் | 6000 |
| வட்டி | 500 |
| சுய தொழிலின் கூட்டுவருமானம் | 200 |
| பங்கிலாபங்கள் | 1000 |
| பகிரப்படாத இலாபங்கள் | 300 |
| சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவுகள் | 100 |
| கூட்டுத்தாபன இலாப வரி | 400 |
| தனிநபர் மீதான வரி | 200 |
| மாற்றல் கொடுப்பனவு | 50 |
| வெளிநாட்டிலிருந்து பெற்றவை | 400 |
| வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டவை | 300 |

மேற்கூறியவற்றிலிருந்து—

1. மொத்த உள்நாட்டு வருமானம்
2. தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம்
3. மொத்த தேசிய வருமானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தனிநபர் வருமானம்
5. கையாள்தகு வருமானம்

போன்றவற்றைக் கீழ்க்கண்டவாறு கணிக்கலாம் :

| | | |
|---|---|---|
| வாடகை | 2000 | |
| கூலிகளும், சம்பளங்களும் | 6000 | |
| வட்டி | 500 | |
| பங்கிலாபங்கள் | 1000 | |
| சுயதொழில். கூட்டு வருமானங்கள் | 200 | |
| பகிரப்படாத இலாபங்கள் | 300 | |
| சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவுகள் | 100 | |
| கூட்டுத்தாபன இலாப வரி | 400 | |
| 1. மொத்த உள்நாட்டு வருமானம் | | 10500 |
| வெளிநாட்டிலிருந்து பெற்றவை | 400 | |
| வெளிநாட்டிற்குச் சென்றவை | (300) | |
| 2. தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் | | 100 |
| 3. மொத்த தேசிய வருமானம் (கா. செ. வி.) | | 10600 |
| பகிரப்படாத இலாபங்கள் | (300) | |
| சமூகப் பாதுகாப்பு கொடுப்பனவுகள் | (100) | |
| கூட்டுத்தாபன இலாப வரிகள் | (400) | |
| | | (800) |
| | | 9800 |
| மாற்றல் கொடுப்பனவுகள் (மானியக் கொடுப்பனவுகள்) | | 50 |
| 4. தனிநபர் வருமானம் | | 9850 |
| தனிநபர் மீதான வரிகள் (நேர் வரிகள்) | | (200) |
| 5. கையாள் தகு வருமானம் | | 9650 |

6. மாறுவிலையில் மொத்த தேசிய வருமானம்.

$$\frac{\text{நடைமுறையில் மொத்த தேசிய வருமானம்}}{\text{நடைமுறை வருட விலைச்சுட்டெண்}} \times 100$$

| | |
|---|---|
| நடைமுறைவிலையில் மொத்த தேசிய வருமானம் | 10600 |
| இதே வருட விலைச்சுட்டெண் (1982 = 100) | 120 |

மாறுவிலையில் மொத்த தேசிய வருமானம்

$$\frac{10600}{250} \times 100 = 8833.3 \text{ மி.}$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தலா வருமானம்

7.1. நடைமுறைவிலையில் தலா வருமானம் = மொத்த தேசிய வருமானம் / நடு ஆண்டு குடித்தொகை

$$\frac{10600}{20} = 530$$

7.2. மாறாவிலையில் தலா வருமானம் = மாறாவிலையில் மொத்த தேசிய வருமானம் / நடு ஆண்டுக் குடித்தொகை

$$\frac{8833.3}{20} = 441.66$$

8. பொருளாதார வளர்ச்சி வீதம்:

1986 இன் மாறாவிலையிலான மொ. தே. வருமானம் = 8833.3

1985 இன் மாறாவிலையிலான மொ. தே. வருமானம் = 8000

1986 இன் தேசிய வருமான அதிகரிப்பு = 833.3

1986 இன் பொருளாதார வளர்ச்சி வீதம்

= 1986 இன் மாறாவிலையிலான அதிகரிப்பு / 1985 இன் மாறாவிலையில் மொ. தே. வருமானம் × 100

$$= \frac{833.3}{8000} \times 100 = 10.41\%$$


## 2. உற்பத்தி வழியில் கணித்தல்:

ஒரு வருடகாலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் சேவைகளின் பெறுமதியைக் கணிப்பது இம் முறையாகும். இது காரணிகளின் நிலையான செலவின்படியானதாக அமையும்.

உற்பத்திச் செயல்முறையில் பல்வேறு பொது, தனியார் நிறுவனங்கள் பல்வேறு உற்பத்திக் காரணிகளின் உதவியுடன் பல பண்டங்களை ஆக்குகின்றன: இவை அரிசி, மா, சீனி, புடவை, பாவனைப் பொருட்கள் போன்ற நுகர்வுப் பொருட்களாகவோ, கட்டிடப்பொருட்கள், யந்திர சாதனங்கள், போக்குவரத்துக் கருவிகள் போன்ற மூலதனப் பொருட்களாகவோ இருக்கும். இவற்றுடன் வைத்தியர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், அரச ஊழியர்கள், வங்கியாளர், காப்புறுதியாளர் போன்ற பலராலும் ஆக்கப்படும் சேவைகளும் இதனுள் அடக்கப்படும். ஒரு வருடத்தில் ஆக்கப்படும் இதே பண்டங்களைத் துறை அடிப்படையில் விவசாய உற்பத்திகள், கைத்தொழில் உற்பத்திகள், சேவைகள் உற்பத்திகள் என்றும் வகைப்படுத்திக் கூட்டலாம். ஒருவருட காலத்துள் ஒருநாட்டின் அரசியல் எல்லைக்குள் காணப்படும் இவற்றின் கூட்டுப் பெறுமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துடன் தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானத்தையும் கூட்டுதல் வேண்டும். இது ஒரு நாட்டுக்குச் சொந்தமான சொத்துக்கள், காரணிகள் என்பன வெளிநாட்டு உற்பத்திக்கு உதவியதால் பெற்ற வருமானங்களுக்கும் அதே வகையில் வெளிநாடுகளுக்குச் சென்ற தொகைக்கும் இடையிலான வேறுபாடாகும். இது நேர்க் கணியமாக இருப்பின் கூட்டப்படும். எதிர்க் கணியமாக இருப்பின் கழிக்கப்படும்.




படம்-1:5

(அ) காரணிச் செலவு விலையில் கணித்தல்

இலங்கைத் தேசிய உற்பத்திக் கணிப்பீடுகள் பொதுவாகப் பின்வரும் துறைகளின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டுக் கணிக்கப்படுகின்றன.

1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில்,
2. தயாரிப்புத் தொழில், சுரங்கம், பயன்பாட்டுக்குரிய பணிகள்,
3. நிர்மாணம்,
4. வியாபாரம், போக்குவரத்து, பிற சேவைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் விரிவான துறைகளின் அடிப்படையில் முதற்றுறை, துணைத்துறை, சேவைத்துறை என்ற பெருந்தலைப்புகளின் கீழ் இவை மேலும் பின்வருமாறு பாகுபடுத்தப்படுகின்றன:

1. முதற்றுறை (விவசாயம்)
   1 . 1. வேளாண்மை (தேயிலை, றப்பர், தெங்கு, நெல், சிறு வேளாண்மை உற்பத்தி)
   1 . 2. காட்டுத்தொழில்
   1 . 3. கடற்றொழில்

2. இரண்டாம் துறை (கைத்தொழில்)
   2 . 1. சுரங்கமும், கல் அகழ்வும்
   2 . 2. தயாரிப்பு
   2 . 3. மின்சாரம், வாயு, நீர், நலத்துறைப்பணி
   2 . 4. நிர்மாணம்

3. மூன்றும் துறை (சேவைகள்)
   3 . 1. போக்குவரத்து, களஞ்சியம், தொடர்பூட்டல்
   3 . 2. மொத்த சில்லறை வியாபாரம்
   3 . 3. வங்கி, காப்புறுதி, மெய்ச் சொத்துக்கள்
   3 . 4. குடியிருப்பு உடமை
   3 . 5. பொதுநிர்வாகமும், பாதுகாப்பும்
   3 . 6. ஏனைய சேவைகள்

இந்த அடிப்படையில் தேசிய உற்பத்தி பற்றிய பின்வரும் கணிப்பீடுகளைச் செய்யலாம்:

1. மொத்த உள்நாட்டு உற்பத்தி
2. தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம்
3. மொத்தத் தேசிய உற்பத்தி (கா. செ. வி.)
4. மொத்தத் தேசிய உற்பத்தி (ச. வி.)
5. தேறிய தேசிய உற்பத்தி (ச. வி.)
6. மாறு விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி
7. குறித்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி வீதம்
8. விவசாயம், கைத்தொழில், சேவைகள் துறைகளின் பங்களிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டின் குறித்த ஆண்டுக்கான பின்வரும் புள்ளி விபரங்களை உதாரணமாகக் கொண்டு மேற்கண்டவற்றைக் கணிக்கும் விதம் இதன் கீழ் விளக்கப்படுகின்றது:

| | |
|---|---|
| வேளாண்மை | 10,000 |
| கடற்றொழில் | 600 |
| காட்டுத்தொழில் | 400 |
| சுரங்கம் | 200 |
| தயாரிப்பு | 6000 |
| கட்டிடவாக்கம் | 4000 |
| மின்சாரம், வாயு, நீர் | 100 |
| போக்குவரத்து, களஞ்சியம் | 5000 |
| மொத்த, சில்லறை வியாபாரம் | 8000 |
| வங்கியும், காப்புறுதியும் | 3000 |
| குடியிருப்பு உடமை | 500 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு | 200 |
| ஏனைய சேவைகள் | 800 |
| வெளிநாட்டிலிருந்து பெற்ற காரணி வருமானம் | 2100 |
| வெளிநாட்டிற்குச் சென்ற காரணி வருமானம் | 2700 |
| விலைச்சுட்டெண் (1982 = 100) | 120 |
| குடித்தொகை | 40 |
| நேரில் வரிகள் | 150 |
| உதவி மானியங்கள் | 80 |
| பெறுமானத் தேய்வு | 40 |

செய்முறை :

| | | |
|---|---|---|
| வேளாண்மை | 10,000 | |
| கடற்றொழில் | 600 | |
| காட்டுத் தொழில் | 400 | |
| விவசாயம் | | 11,000 |
| சுரங்கம் | 200 | |
| தயாரிப்பு | 6000 | |
| கட்டிடவாக்கம் | 4000 | |
| மின்சாரம், வாயு, நீர் | 100 | |
| கைத்தொழில் | | 10,300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| போக்குவரத்து, களஞ்சியம் | 5000 | |
| மொத்த, சில்லறை வியாபாரம் | 8000 | |
| வங்கியும், காப்புறுதியும் | 3000 | |
| குடியிருப்பு உடைமை | 500 | |
| பொதுநிர்வாகம், பாதுகாப்பு | 200 | |
| ஏனைய சேவைகள் | 800 | |
| சேவைகள் | | 17,500 |
| 1. மொத்த உள்நாட்டு உற்பத்தி | | 38,800 |
| வெளிநாட்டிலிருந்து பெற்றவை | 2100 | |
| வெளிநாட்டிற்குச் சென்றவை | 2700 | |
| 2. தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் | | (600) |
| 3. மொத்த தேசிய உற்பத்தி (கா. செ. வி.) | | 38,200 |
| நேரில் வரிகள் | | 150 |
| | | 38,350 |
| மானியங்கள் | | (80) |
| 4. மொத்த தேசிய உற்பத்தி (சந்தை விலையில்) | | 38,270 |
| பெறுமானத் தேய்வு | | (40) |
| 5. தேறிய தேசிய உற்பத்தி (ச. வி.) | | 38,230 |

6. மாறுவிலையில் மொத்த தேசிய உற்பத்தி (கா. செ. வி.)

$$\frac{\text{நடைமுறை வருட மொத்த தேசிய உற்பத்தி}}{\text{நடைமுறை வருட விலைச் சுட்டெண்}} \times 100$$

$$\frac{38,200}{120} \times 100 = 31833 \cdot 3$$

7. குறித்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி வீதம்

| | |
|---|---|
| குறித்த ஆண்டின் மாறுவிலையில் மொத்த தேசிய உற்பத்தி | 31833.3 |
| முந்திய ஆண்டின் மாறுவிலையில் மொத்த தேசிய உற்பத்தி | 31000 |

குறித்த ஆண்டின் தேசிய உற்பத்தி அதிகரிப்பு

$$31833 \cdot 3 - 31,000 = 833 \cdot 3$$

குறித்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சி வீதம்

$$\frac{\text{குறித்த ஆண்டின் தேசிய உற்பத்தி அதிகரிப்பு}}{\text{முந்திய ஆண்டின் மாறுவிலையில் மொத்த தேசிய உற்பத்தி}} \times 100$$

$$\frac{833 \cdot 3}{31000} \times 100 = 2 \cdot 68\%$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மாருவிலையிலான மொத்த தேசிய உற்பத்தியில் துறைகளின் பங்களிப்பு (சதவீதம்)

8 · 1 விவசாயம் $\frac{11,000}{31,833} \times 100 = 34 \cdot 55\,\%$

8 . 2 கைத்தொழில்: $\frac{10,300}{31,833} \times 100 = 32.35\,\%$

8 . 3 சேவைகள்: $\frac{17,500}{31,833} \times 100 = 54,97\,\%$

## 1. சந்தை விலையில் உற்பத்தியைக் கணித்தல்:

தேசிய உற்பத்தியைச் சந்தை விலையிலும் கணித்துக்கொள்வதுண்டு.

எல்லா உற்பத்தியாக்கப்பட்ட பொருட்களும் ஒரே அளவீட்டில் அமைவதில்லை. தானியம் கிலோகிராமிலும் பெற்ரோலியம், எண்ணை வகை லீற்றரிலும், துணிவகை மீற்றரிலும் காணப்படுவதுண்டு. சேவைகளின் பயன்களையும் மிகச் சரியாக அளவிடல் கடினம். இதனாலேயே பணத்தை அளவிடு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். இதனாலேயே பணவிலைகளில் கணிக்கப்படுகிறது. இதன்படி உள்நாட்டிலான பொருட்கள், சேவைகளின் பெறுமதி சந்தைவிலையின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது:

இது பின்வரும் மூன்று படிமுறைகளில் நோக்கப்படலாம்:

1. பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளினதும் உள்நாட்டு உற்பத்தியின் மொத்தப் பெறுமதியைக் கணித்தல்.

2. ஒவ்வொரு துறையிலும் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களின் செலவையும், பிறதுறையிலிருந்து பெறப்பட்ட சேவைகள் துறையின் பெறுமதியையும், யந்திரம், பொறிகள் என்பவற்றின் பெறுமானத் தேய்வையும் கணித்துக்கொள்ளல்.

3. மொத்தப் பெறுமதியிலிருந்து இத்தகைய செலவுகள், பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கழித்தல்.

இத்தகைய முறை கூட்டிய பெறுமதி முறை (Value added Method) எனப்படும். வெளியீட்டு முறை என்றும் இதனை அழைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்: 2

பின்வரும் தரவுகளிலிருந்து சந்தை விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி, காரணிச் செலவு விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி என்பவற்றைப் பின்வருமாறு கணிக்கலாம்:

( மில்லியன் ரூபாவில் )

| | |
|---|---|
| மா | 10,000 |
| அரிசி | 20,000 |
| தளபாடம் | 5,000 |
| மூலப்பொருட்கள் | 15,000 |
| நேரில்வரிகள் | 3,000 |
| மானியங்கள் | 1,500 |

செய்முறை:

| | | |
|---|---|---|
| மா | 10,000 | |
| அரிசி | 20,000 | |
| தளபாடம் | 5,000 | |
| மொத்த விற்பனை பெறுமதி | | 35,000 |
| மூலப்பொருட்கள் | | (15,000) |
| மொத்த தேசிய உற்பத்தி (ச. வி.) | | 20,000 |
| மொத்த தேசிய உற்பத்தி (ச. வி.) | | 20,000 |
| நேரில் வரிகள் | | (3,000) |
| | | 17,000 |
| உதவி மானியங்கள் | | 1,500 |
| மொத்த தேசிய உற்பத்தி ( காரணிச் செலவு விலையில் ) | | 18,500 |

## 2. செலவு வழியில் கணித்தல்:

இறுதிச் செலவு பற்றிய முறை "நுகர்வு, முதலீட்டு முறை" எனப்படுவதுண்டு. சமூகத்தின் இறுதிநிலை நுகர்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவு விபரங்களை இது காட்டும். இதில் நுகர்வு, முதலீடு பற்றிய புள்ளிவிபரங்கள் அவசியமாகும். இதனைப் பின்வரும் வாய்ப்பாட்டால் விளக்கலாம்.

$$Y = C + I$$

இங்கு,

Y தேசிய வருமானம்
C நுகர்வுச் செலவு
I முதலீட்டுச் செலவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்தனத்துறையினரால், நிறுவனங்களால், அரசாங்கத்தினுல் நுகர்வின் மீது மேற்கொள்ளப்பட்ட செலவுகளும், சொத்துக்களை உருவாக்குவதற்கான முதலீட்டுச் செலவுகளும் இதில் கணிக்கப்படும். இந்த இருவகைச் செலவுகளையும் பின்வருமாறு விளக்குவோம்.

(1) நுகர்செலவு: (Consumption Expenditure)

இது தனியார் நுகர்வுச் செலவு, அரசாங்க நுகர்வுச் செலவு என்ற இரண்டையும் உள்ளடக்கியதாகும்.

1 . 1. தனியார் நுகர்வு:

மீளவும் பாவிக்கக்கூடிய பண்டங்களான தளபாடம், தொலைக்காட்சிப் பெட்டி போன்றவற்றிலும், ஒரே தடவைமட்டும் பாவிக்கக்கூடிய பண்டங்களான உணவு, குடிபானம், புகையிலை போன்றவற்றிலும், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், சுற்றுலா விடுதிகள் போன்ற சேவைகளிலும் மேற்கொள்ளப்படும் செலவுகள் இதில் அடங்கும். இதனுடன் வெளிநாட்டுப் பயணிகளின் நுகர்செலவுகளைத் தவிர்த்து இலங்கையரின் வெளிநாட்டிலான செலவைக் கூட்ட வேண்டும். இதில் எல்லாவகைச் செலவுகளும் சரியாகச் சேர்க்கப்படும் எனக் கூறமுடியாது.

1 . 2. அரசாங்க நுகர்வு:

ஊழியர்களுக்கான நட்டஈட்டுத் தொகைகளும், வர்த்தகநிறுவனங்களிலிருந்தும்வெளிநாடுகளிலிருந்தும் வாங்கப்படும் தேறிய கொள்வனவுச் செலவுகளும் இதனுள் அடங்கும். நாட்டின் வதிவாளருக்கும், வெளிநாட்டவருக்குமான மாற்றல் கொடுப்பனவுகள் இதில் சேர்க்கப்படுவதில்லை. இதிலும் சேவைகள் மீதான செலவுகளும் உள்ளடக்கப்படுகின்றது. மருத்துவமனைகள் பாடசாலைகள், போக்குவரத்து, தொடர்பூட்டல் போன்ற சேவைகளின் செலவுகளும் அடங்கும்.

(2) முதலீட்டுச் செலவு:

செலவினங்களில் ஒரு பகுதி முதலீட்டுச் செலவாக அமைய முடியும். உற்பத்தித் திறனுள்ள மெய்ச் சொத்துக்களில் அதிகரிப்பு ஏற்படுத்தக் கூடியதாய் நடைமுறை வெளியீட்டில் ஒரு பகுதி அமையும்போது அது முதலீடு எனப்படும். 1986இல் இலங்கையின் மொத்தச் சொத்துப் பெறுமதி ரூ.4000 மில்லியனிலிருந்து 1987இல் ரூபா 4300 மில்லியனுக மாறியிருப்பின் 1986—87இன் தேறிய முதலீடு ரூபா 300 மில்லியன் எனலாம். இதனைப் பின்வரும் சமன்பாட்டால் விளக்கலாம்.

முதலீடு = தற்போதைய சொத்துப் பெறுமதி — முந்திய வருட சொத்துப் பெறுமதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறிய முதலீட்டின் பெறுமதியை மதிப்பிட மொத்த முதலீட்டி லிருந்து பெறுமானத் தேய்வைக் கழிக்க வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்திக் கணக்கீட்டில் மூன்று பிரதானவகை முதலீடுகள் உள்ளன.

(1) தொழில்களின் நிலையான முதலீடுகள் : யந்திரங்கள், தொழிற் சாலைக் கட்டிடங்கள் போன்ற நெடுவாழ்வுடைய முதற் சொத்துக்களின் கொள்வனவு.

(2) வதிவிட நிர்மாணங்கள் : சுயவசிப்பிடத் தேவைக்கான அல்லது வாடகைக்கு விடுவதற்கான வதிவிடங்களின் கொள்வனவும் நிர்மாணமும்.

(3) தொழில்களின் இருப்பு மாற்றங்கள் : முடிவுப் பொருட்கள் நடைபெறும் வேலை நிலையிலான பொருட்கள், மூலப் பொருட்கள் என்பவற்றின் இருப்பு மட்டத்தை அதிகரிக்கத் தொழில் நிறுவனங்களால் வாங்கப்படும் வெளியீடுகளின் ஒரு பகுதி.

பொருளாதாரத்தில் குடித்தனத்துறையினர் பொருட்கள், சேவைகள் மீது செலவு செய்கின்றனர். குடித்தனத்துறையினர் தமது செலவிடத் தக்க வருமானத்தைப் பண்டங்களில் செலவிடுவர். நிறுவனங்களும் தமது நிறுவன சேமிப்புக்களைப் பண்டங்களில் செவிடுவர். அரசாங்கம் வரிவடி வில் சேகரித்த வருமானங்களை இவற்றில் செலவிடுவர். இந்த மூன்று பிரிவினராலும் மேற்கொள்ளப்பட்ட செலவுகளின் கூட்டிய மொத்தமே மொத்தத் தேசிய வருமானம் அல்லது மொத்த தேசிய செலவாகும்.

தனியார் தொழிற்சாலைகள், யந்திரங்கள், வீடுகள் என்பவற்றில் செலவிடுவது தனியார் முதலீடாகும். அரசாங்கம் பாலங்கள், போக்கு வரத்துக் கருவிகள், மின்சக்தி, லொறிகள் என்பனவற்றுக்குச் செய்யும் செலவுகள் அரச முதலீடாகும். இதில் மத்திய அரசாங்கம், கூட்டுத் தாபனம், உள்ளூராட்சி மன்ற முதலீடுகளும் அடங்கும்.

இதில் தேறிய முதலீடுபற்றிய விபரங்களே கணிப்பில் எடுக்கப்படும்.

## இருப்பு மாற்றம் :

பொருளாதார இருப்பு மாற்றத்தை உள்ளடக்கும். இது மூலப் பொருட்கள், முடிவுறு உற்பத்திகள், முடிவுப் பொருட்களிலான முத லீடுகளாகும். எனினும் நிலையான முதலாக்கத்திலிருந்து பின்வரும் வழி களில் இருப்பு மாற்றம் வேறுபடும்.

1. முதற் சொத்துக்கள் திரும்பத்திரும்பப் பாவிக்கக்கூடியன.
   உ + ம் : யந்திரங்கள்.

   ஆனால் இருப்பு ஒருதடவையே பாவிக்கக்கூடியது.
   உ + ம்: சீனி ஆலையில் உள்ள கரும்பு.

2. நிலையான முதலாக்கத்தில் எப்போதும் ஒரே மாதிரிச் சொத் துக்கள் பேணப்படும்.

   உ + ம் : யந்திரம், கட்டிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பு பருவத்துக்கேற்ப மாற்றப்படலாம்.

உ + ம்: வெயில் காலத்தில் மின் விசிறியும் குளிர்காலத்தில் கம்பளி உடையும் இருப்பாகப் பேணப்படலாம்.


3. முதற் சொத்துக்கள் திட்டமிட்ட முறையில் ஏற்படுத்தப்படும். இருப்பு உடனடியான சந்தையின் கேள்வி, நிரம்பல் நிலையின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும்.

## தேறிய வெளிநாட்டு முதலீடு:

ஒரு வருடகாலத்தில் ஒரு நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட பொருட்கள் போக்குவரத்து, பயணம், துறைமுக சேவைகள் போன்ற சேவைகளின் ஏற்றுமதி என்பவற்ருல் பெற்ற தொகைக்கும் அதே வகையில் வெளிச் சென்ற தொகைக்கும் உள்ள வித்தியாசம் தேறிய வெளிநாட்டு முதலீடாகும்.

பொருட்கள், காரணி அல்லா சேவைகளின் ஏற்றுமதியிலும் பார்க்க பொருட்கள், காரணி அல்லா சேவைகளின் இறக்குமதி அதிகமாக இருந்தாற்ருன் வெளிநாட்டில் முதலீடு தென்படும். அதுவே தேறிய வெளிநாட்டு அடிப்படையிலான முதலீடாகத் தென்படும்.

மொத்தத் தேசிய வருமானம் மொத்தத் தேசிய செலவுக்குச் சமனுகும் என்பதைக் கீழ்க்காணும் படம் விளக்கும்.




படம் 1:6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின்படி செலவு வழியிலான தேசிய உற்பத்தியைப் பின்வரும் சமன்பாட்டால் விளக்கலாம்:

$$GNP = C + S + \triangle S + X - M$$

இங்கு,

C — நுகர்வு

S — சேமிப்பு

$\triangle$S — இருப்பு மாற்றம்

X — பொருட்கள், காரணி அல்லா சேவைகளின் ஏற்றுமதி

M — பொருட்கள், காரணி அல்லா சேவைகளின் இறக்குமதி.

இந்த வகையில் தேசியவருமானக் கணக்கீட்டைப் பின்வரும் உதாரணங்கள் மூலம் விளக்கலாம்.

உ+ம் 1:

செலவுமுறையில் பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி

( i ) மொத்த தேசிய உற்பத்தி (சந்தை விலையில்)

( ii ) மொத்த தேசிய உற்பத்தி (காரணிச் செலவு விலையில்)

(iii) தேறிய தேசிய உற்பத்தி (சந்தை விலையில்)

என்பவற்றைப் பின்வருமாறு கணிக்கலாம்.

| | (மில்லியன் ரூபா) |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவு | 1000 |
| அரசாங்க நுகர்வுச் செலவு | 500 |
| வட்டி | 100 |
| நேரில் வரிகள் | 200 |
| சமூக பாதுகாப்பு தொகைகள் | 50 |
| தனிநபர் வருமான வரி | 100 |
| பகிரப்படாத இலாபங்கள் | 80 |
| கூலியும் சம்பளமும் | 1200 |
| தேறிய உள்நாட்டு முதலீடு | 300 |
| தேறிய வெளிநாட்டு முதலீடு | 50 |
| மாற்றல் கொடுப்பனவு | 20 |
| பெறுமானத் தேய்வு | 75 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்முறை :

| | | |
|---|---|---|
| 1. | அரசாங்க நுகர்வு | 500 |
| | தனியார் நுகர்வு | 1000 |
| | தேறிய உள்நாட்டு முதலீடு | 300 |
| | தேறிய வெளிநாட்டு முதலீடு | 50 |
| | பெறுமானத் தேய்வு | 75 |
| 2. | மொத்தத் தேசிய உற்பத்தி (ச. வி.) | 1925 |
| | (நேரில் வரி) | (200) |
| 3. | மொத்தத் தேசிய உற்பத்தி (கா. செ. வி.) | 1725 |
| | (பெறுமானத் தேய்வு) | (75) |
| 4. | தேறிய தேசிய உற்பத்தி (ச. வி.) | 1650 |

இதிலிருந்து பொருட்கள், சேவைகள் மீதான தனியார், அரச நுகர்வுச் செலவுடன் தேறிய முதலீட்டைக் கூட்டுவதால் தேறிய தேசிய உற்பத்தியை மதிப்பிடலாம் என்பது தெளிவாகிறது.

உ + ம் : 2

இலங்கையில் மொத்தத் தேசியச் செலவானது சந்தைவிலையில் பின்வருமாறு கணிக்கப்படுகிறது.

(மில்லியன் ரூபா)

| | | | |
|---|---|---|---|
| 1. | தனியார் நுகர்வு : | | 10,000 |
| 1.1 | பொருட்கள் காரணியல்லா சேவை இறக்குமதி | 2000 | |
| 1.2 | உள்நாட்டுற்பத்திப் பொருட்கள் | 8000 | |
| 2. | அரச நுகர்வு | | 1500 |
| 2.1 | பொருட்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு : மத்திய அரசாங்கம் | 1000 | |
| 2.2 | பொருட்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு : உள்ளூராட்சி மன்றம் | 500 | |
| 3. | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | | 2000 |
| 3.1 | அரசும் பொதுமக்களும் | 500 | |
| 3.2 | அரச கூட்டுத்தாபனங்கள் | 300 | |
| 3.3 | தனியார்துறை | 1200 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 4. இருப்பு மாற்றம் | | 200 |
| 4.1 அரசும், அரச தொழில்களும் | 50 | |
| 4.2 அரச கூட்டுத்தாபனம் + தனியார் | 150 | |
| 5. மொத்த உள்நாட்டுச் செலவு (1+2+3+4) | | 13700 |
| 6. (தேறிய வெளிநாட்டு முதலீடு) | | (500) |
| | | 13200 |
| 7. (தேறிய பெறுகைகள், பன்னுட்டு நன்கொடைகள்) | | (200) |
| 8. மொத்தத் தேசிய செலவு (5+6+7) (ச. வி.) | | 13000 |

இலங்கையில் மொத்தத் தேசிய உற்பத்தி மீதான செலவு நடைமுறைச் சந்தை விலையில் பின்வருமாறு கணிக்கப்படுகிறது:

உ + ம்: 3

(மில்லியன் ரூபா)

| | | |
|---|---|---|
| (1) நுகர் செலவு | | 80,000 |
| 1.1 தனியார் | 70,000 | |
| 1.2 அரசாங்கம் | 10,000 | |
| 2) மொத்த உள்நாட்டு முதலாக்கம் | | 20,000 |
| 2.1 தனியார் | 10,000 | |
| 2.2 அரச கூட்டுத்தாபனம் | 5,000 | |
| 2.3 அரசாங்கம் | 5,000 | |
| (3) மொத்த உள்நாட்டுச் செலவு (1+2) | | 100,000 |
| (4) பொருட்கள் காரணி அல்லா சேவை ஏற்றுமதி | | 30,000 |
| (5) பொருட்கள் காரணி அல்லா சேவை இறக்குமதி | | (45,000) |
| (6) மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு (3+4+5) | | 85,000 |
| (7) (வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்) | | (1000) |
| | | 84,000 |
| (8) (புள்ளிவிபரத் தவறுகள்) | | (500) |
| (9) மொத்தத் தேசிய உற்பத்திமீதான செலவு (சந்தைவிலையில்) (6+7+8) | | 83,500 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 5

# தேசிய வருமான எண்ணக் கருக்கள்

தேசிய வருமானத்தில் தேசிய உற்பத்தி தொடர்பான கணிப்பு முறையில் பல உப கணிப்புக்கள் இடம்பெறுகின்றன. அவை ஒவ் வொன்றையும் பற்றிய தெளிவு இருந்தால்மட்டுமே தேசியவருமானம் பற்றிய சரியான விளக்கம் ஏற்படும். அவ்வகையில் முக்கியமான எண்ணக் கருக்களை விளக்குவது அவசியமாகும்.

1, காரணிச்செலவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி :

ஒரு வருடத்தில் நாட்டில் ஆக்கப்பட்ட முடிவுப் பொருட்களின் பெறுமதியை அதன் உற்பத்திக்குக் காரணிச் சேவைகள் வழங்கிய பங்கிற் காகக் கொடுத்த கொடுப்பனவுகளின்படி கணிப்பது காரணிச்செலவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

உள்நாட்டு உற்பத்தி என்பதில் பின்வரும் பகுதிகள் அடக்கப்படும்:

விவசாயம், காட்டுத்தொழில், கடற்றொழில்

சுரங்கமும், கல் அகழ்வும்

தயாரிப்புத் தொழில்

நிர்மாணத் தொழில்

மின்சாரம், வாயு, நீர், நலச் சேவைகள்

போக்குவரத்து, களஞ்சியம், தொடர்பூட்டல்

மொத்த, சில்லறை வியாபாரம்

வங்கி, காப்புறுதி, மெய்ச் சொத்துக்கள்

குடியிருப்பு உடமை

பொது நிர்வாகம், பாதுகாப்பு

ஏனைய சேவைகள்

2. சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி :

ஒரு வருடத்தில் நாட்டின் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்களின் பெறுமதியை அவை சந்தையில் விற்கப்படும் விலையின் அடிப்படையில் கணித்துக்கொள்வது இதுவாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் பின்வருமாறு பெறலாம்:

| | | |
|---|---|---|
| காரணிச் செலவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | | 10000 மி |
| நேரில் வரி | 500 | |
| மானியம் | (100) | |
| தேறிய நேரில் வரிகள் | | (400) மி |
| சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | | 9600 மி |

3. காரணிச் செலவில் மொத்தத் தேசிய உற்பத்தி :

மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானத்தைக் கூட்டும்போது மொத்த தேசிய உற்பத்தி பெறப்படும். தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் சாதகமாக இருப்பின்— அதாவது வெளியே சென்றவற்றைவிட பெற்றவை அதிகமாக இருப்பின் அது நேர்க்கணியமாக இருப்பதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தி யுடன் கூட்டப்படும். இந் நிலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட மொத்த தேசிய உற்பத்தி அதிகமானதாகக் காணப்படும் மாறாக காரணி வருமானம் பாதகமாக — எதிர்க்கணியமாக இருப்பின் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து அது கழிக்கப்படும். அப்போது மொத்த தேசிய உற்பத்தி குறைவாகவே இருக்கும். இலங்கையில் பொதுவாக தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் பாதகமானதா கவே காணப்படுகிறது.

4. சந்தை விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி:

சந்தைவிலையிலான மொத்த உள்நாட்டுற்பத்தியுடன் தேறிய வெளி நாட்டுக் காரணி வருமானத்தைக் கூட்டுவதால் சந்தைவிலையில் மொத்தத் தேசிய உற்பத்தி கிடைக்கும்.

அல்லது காரணிச் செலவு விலையின் கீழ் மொத்தத் தேசிய உற்பத்தி யுடன் நேரில் வரியைக் கூட்டி, உதவி மானியத்தைக் கழிக்க வேண்டும். அதாவது காரணிச் செலவிலான மொத்த தேசிய உற்பத்தியுடன் தேறிய நேரில்வரியைக் கூட்டவேண்டும்.

5: காரணிச் செலவு விலையில் தேறிய உள்நாட்டு உற்பத்தி :

மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து பெறுமானத் தேய்வைக் கழிப்பதால் பெறப்படுவது தேறிய உள்நாட்டு உற்பத்தியாகும்,

உள்நாட்டு உற்பத்திக்கென நிலையான மூலதனப் பொருட்கள் பயன்படுத்தப்படும்போது அதன் பெறுமதி தேய்வடைந்து செல்கிறது. மூலதனப் பொருட்கள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுவதனால் இத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகைய தேய்மானம் ஏற்படுகின்றது. மறுபுறத்தில் இப் பொருட்கள் பழமை யடைவதனுலும் தேய்மானம் ஏற்படலாம். அத்துடன் தீ அல்லது வெள்ளப்பெருக்கு என்பவற்ருலும் இவற்றின் பெறுமதியின் ஒரு பகுதி அழிவுறலாம். இத்தகைய இழப்புகளே பெறுமானத் தேய்வு ஆகும்.

6. சந்தை விலையில் தேறிய உள்நாட்டு உற்பத்தி :

சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து பெறுமானத் தேய்வைக் கழிப்பதால் சந்தை விலையிலான தேறிய உள்நாட்டு உற்பத்தி பெறப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| உ + ம் : | சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 4000 மி |
| | (பெறுமானத் தேய்வு) | (50) மி |
| | சந்தை விலையில் தேறிய உள்நாட்டுற்பத்தி | 3950 மி |

7. காரணிச் செலவில் தேறிய தேசிய உற்பத்தி :

காரணிச் செலவிலான மொத்தத் தேசிய உற்பத்தியிலிருந்து பெறுமானத் தேய்வைக் கழிப்பதால் தேறிய தேசிய உற்பத்தி கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| உ + ம் : | காரணித் செலவில் மொத்த தேசிய உற்பத்தி | 5000 மி |
| | (பெறுமானத் தேய்வு) | (50) மி |
| | காரணிச் செலவில் தேறிய தேசிய உற்பத்தி | 4950 மி |

8. சந்தை விலையில் தேறிய தேசிய உற்பத்தி :

சந்தை விலையிலான மொத்தத் தேசிய உற்பத்தியிலிருந்து பெறுமானத் தேய்வைக் கழிப்பதால் பெறப்படுவதாகும்.

| | | |
|---|---|---|
| உ + ம் : | சந்தை விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி | 4500 மி |
| | (பெறுமானத் தேய்வு) | (50) மி |
| | சந்தை விலையில் தேறிய தேசிய உற்பத்தி | 4450 மி |

9. மொத்த உள்நாட்டுச் செலவு :

நாட்டின் அரசியல் எல்லைக்குள் பண்டங்கள் சேவைகளின் கொள்வனவுக்காக அவற்றின் மீது செலவிடப்படும் தொகைகள் இவை ஆகும். இச் செலவின் அடிப்படையிலும் உற்பத்தியின் பெறுமதி கணிக்கப்படலாம். இலங்கை மத்திய வங்கியின் புள்ளி விபரங்களின்படி பின்வருவன உள்நாட்டுச் செலவில் சேர்க்கப்படுகின்றன:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம்:

| | | |
|---|---|---|
| (1) | தனியார் நுகர்வு | 8000 மி |
| (2) | அரச நுகர்வு | 1000 மி |
| (3) | மொத்த உள்நாட்டு நிலையான மூலதான ஆக்கம் | 2000 மி |
| (4) | இருப்பு மாற்றங்கள் | 500 மி |
| | மொத்த உள்நாட்டுச் செலவு | 11,500 மி |

10. **மொத்த தேசிய செலவு:**

மொத்த உள்நாட்டுச் செலவுடன் தேறிய வெளிநாட்டு மூலதனத்தைக் கூட்டி வரும் தொகையிலிருந்து தேறிய சர்வதேச கொடைகளையும் மாற்றல்களையும் கழிப்பதால் பெறப்படுவது மொத்தத் தேசிய செலவாகும்.

| | | |
|---|---|---|
| உ + ம்: | மொத்தத் உள்நாட்டுச் செலவு | 6000 மி |
| | தேறிய வெளிநாட்டு மூலதனம் | 200 |
| | | 6200 மி |
| | தேறிய சர்வதேச கொடைகளும் மாற்றங்களும் | (50) மி |
| | மொத்த தேசிய செலவு | 6150 மி |

11. **தேறிய நேரில் வரி:**

பொருளாதாரத்தில் அரச செயற்பாடுகளினுல் ஏற்படும் தேறிய மீதி இதுவாகும். சந்தையில் காணப்படும் பண்டத்தின் விலைக்கும், அதே பண்டத்தின் உற்பத்திக் காரணிகளுக்கான செலவின் அடிப்படையான பெறுமதிக்கும் இடையில் வேறுபாடு காணப்படலாம். சில பண்டங்களுக்கு நுகர்வோரால் கொடுபடும் அதே விலை அதன் உற்பத்திக்குப் பயன்பட்ட காரணிகளுக்குக் கிடைப்பதில்லை. அதில் ஏற்படும் வேறுபாடு நேரில் வரிகளாலும் உதவி மானியங்களாலும் ஏற்படுகிறது.

சில வகைப் பண்டங்களின் உற்பத்தியாளர் நேரில் வரியாகக் குறித்த தொகையை அரசுக்குச் செலுத்தியிருப்பர்.

மறுபுறத்தில் சில வகைப் பண்டங்களுக்கு அரசு உதவி மானியமாகக் குறித்த தொகையை வழங்கியிருக்கும். இத்தொகையும் உற்பத்தியில் ஈடுபடும் காரணிகளுக்குக் கிடைக்கிறது. ஆனுலும் சந்தையில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் நுகர்வோர் இதனைச் செலுத்துவதில்லை. இந்த அளவினுல் பொருளின் விலை குறைவாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக எல்லா உற்பத்தியிலும், அரசு அறவிட்ட முழு நேரில் வரித்தொகைக்கும், அரசினால் வழங்கப்பட்ட முழு உதவி மானியத் தொகைக்கும் இடையிலான வேறுபாடு தேறிய நேரில் வரி எனப்படும். காரணிச் செலவு விலையிலான பெறுமதியைச் சந்தை விலைக்கு மாற்றுவதானால் தேறிய நேரில் வரியைக் கூட்ட வேண்டும்.

உ + ம்: காரணிச் செலவு விலையில்

| | | |
|---|---|---|
| மொத்தத் தேசிய உற்பத்தி | | 6000 மி. |
| மொத்த நேரில் வரி | 500 | |
| (மொத்த உதவி மானியம்) | (100) | |
| தேறிய நேரில்வரி | | 400 |
| சந்தை விலையில் | | |
| மொத்தத் தேசிய உற்பத்தி | | 6400 |

12. தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம்

வெளிநாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற பொருளாதாரம் ஒன்றில் நாட்டின் உற்பத்திக்காக வெளிநாட்டுச் சொத்துகள் உபயோகிக்கப்பட்டிருக்கலாம். இதேபோல் மறுபுறம் உள்நாட்டுச் சொத்துக்கள் வெளிநாட்டுப் பொருள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கலாம். இவ்வாறு உற்பத்திக்காக வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட காரணிகளுக்குக் கொடுப்பனவு செய்தல் வேண்டும். இது வெளிநாட்டுக் காரணிக்கான கொடுப்பனவு எனப்படும். அதேபோல் வெளிநாடுகளில் ஈடுபடுத்தப்பட்ட உள்நாட்டுக் காரணிகளின் வருமானம் நாட்டுக்குள் வந்திருக்கும். இது வெளிநாட்டுக் காரணி வருமானம் (பெறுகை) எனப்படும்.

இவ்வாறான காரணி வருமானப் பெறுகைக்கும், கொடுப்பனவுகளுக்கும் இடையிலான வேறுபாடு தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் எனப்படும். இது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ இருக்கும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானத்தைக் கூட்ட வருவது மொத்தத் தேசிய உற்பத்தியாகும். அதேபோல் தேறிய உள்நாட்டு உற்பத்தியுடன் தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானத்தைக் கூட்ட வருவது தேறிய தேசிய உற்பத்தியாகும்.

| | | |
|---|---|---|
| உ + ம்: மொத்த உள்நாட்டு உற்பத்தி | | 6000 மி. |
| வெளிநாட்டுக் காரணி வருமானம் | 500 | |
| வெளிநாட்டுக் காரணி கொடுப்பனவு | (100) | |
| தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் | | 400 மி. |
| மொத்தத் தேசிய உற்பத்தி | | 6400 மி. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பெறுமானத் தேய்வு :

நிலையான மூலதனப் பொருட்கள் பண்டங்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுவதுண்டு. அவ்வாறு பயன்படுத்தப்படுவதால் மூலதனப் பொருட்கள் தேய்வடையும். காலம் கடந்து போவதாலோ, தீயாலோ, வெள்ளப்பெருக்கினுலோ அவை அழிந்தும் போகலாம். இவ்வாறு ஏற்படும் இழப்பு அல்லது தேய்வு பெறுமானத் தேய்வு எனப்படும். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து இப்பெறுமானத் தேய்வுத் தொகையைக் கழிப்பதால் வருவது தேறிய உள்நாட்டு உற்பத்தியாகும். இதேபோல் மொத்தத் தேசிய உற்பத்தியிலிருந்து பெறுமானத் தேய்வைக் கழிப்பதால் வருவது தேறிய தேசிய உற்பத்தியாகும்.

| | | |
|---|---|---|
| உ + ம்: | மொத்தத் தேசிய உற்பத்தி | 6000 மி. |
| | (பெறுமானத் தேய்வு) | (50) மி. |
| | தேறிய தேசிய உற்பத்தி | 5950 மி. |

14. தேறிய வெளிநாட்டு முதலீடு:

வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ள ஒரு நாட்டின் உள்ளே உற்பத்தியான பொருட்கள், சேவைகளை வெளிநாட்டாருக்கு விற்க வேண்டி ஏற்படும். அவ்வாறு விற்பதனுல் வருமானம் கிடைக்கிறது. அதாவது பொருட்கள், காரணி அல்லாத சேவைகளின் ஏற்றுமதியால் வருமானம் கிடைக்கிறது.

மறுபுறம் நுகர்வுக்காகவும், முதலீட்டுக்காகவும் வெளிநாடுகளின் பொருட்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப்படுகின்றன. இவற்றுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றது. இது பொருட்கள் மற்றும் காரணி அல்லாத சேவைகளின் இறக்குமதியால் ஏற்படும் செலவு ஆகும்.

இதன்படி பண்டங்கள், காரணி அல்லாத சேவைகள் என்பவற்றின் ஏற்றுமதி வருமானத்துக்கும், அதேவகையான இறக்குமதிக் கொடுப்பனவுக்கும் இடையிலான வேறுபாடு தேறிய வெளிநாட்டு முதலீடு ஆகும். இறக்குமதியிலும் பார்க்க ஏற்றுமதி கூடுதலாக இருந்தால் மட்டும் நாட்டுக்கான வெளிநாட்டு முதலீடு காணப்படுவதாயிருக்கும்.

இலங்கையில் அண்மைய ஆண்டுகளில் இது பாதகமாகவேயுள்ளது.

மொத்த உள்நாட்டுச் செலவுடன் தேறிய வெளிநாட்டு முதலீட்டினைக் கூட்ட வருவதே மொத்தத் தேசிய செலவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேறிய வெளிநாட்டு முதலீடு சாதகமான பெறுமதியைக் கொண்டிருப்பின் மொத்தத் தேசியச் செலவு மொத்த உள்நாட்டுச் செலவை விடக் கூடுதலாயிருக்கும். மாறாக பாதகமான பெறுமதியைக் கொண்டிருப்பின் மொத்தத் தேசியச் செலவு, மொத்த உள்நாட்டுச் செலவை விடக் குறைவாயிருக்கும்.

| | | |
|---|---|---|
| உ+ம் : மொத்த உள்நாட்டுச் செலவு | | 5000 மி |
| பொருட்கள், காரணி அல்லா சேவை ஏற்றுமதி | 400 | |
| பொருட்கள்,காரணி அல்லாசேவை இறக்குமதி | (200) | |
| தேறிய வெளிநாட்டு முதலீடு | | 200 மி |
| மொத்தச் தேசியச் செலவு | | 5200 மி |

15. தேறிய சர்வதேச நன்கொடைகளும் மாற்றல்களும் :

நாடொன்று சர்வதேச ரீதியாக தொடர்புகளைக் கொண்டிருக்கும் சூழலில் பிறநாடுகளுக்கு நன்கொடை கொடுத்தலும், பிறநாடுகளிலிருந்து நன்கொடை பெறலும் பொதுவாகக் காணப்படுகிறது. இவ்வாறான கொடைகள் நாட்டில் முழுச் செலவுக்குள்ளும் அடங்கவேண்டும். ஆனால் இவை நாட்டின் உற்பத்தியுடன் தொடர்பில்லாதன. இதனால் அது செலவில் உள்ளடங்கி இருப்பினும் நாட்டின் உற்பத்தியின் ஒருபகுதியல்ல. ஆகையால் மொத்த உள்நாட்டுச் செலவுகள் உள்ளடங்கிய சர்வதேச நன்கொடைகளும் மாற்றல்களும் கழிக்கப்படல் வேண்டும். அவ்வாறு கழிக்கப்படுவதால் மொத்தத் தேசிய செலவு கணிக்கப்படுகிறது. தேறிய பெறுகை போன்றவற்றின் கொடுப்பனவு மீதியே சென்மதி நிலுவையின் மாற்றல் கணக்கின் மீதியாகும்.

| | |
|---|---|
| உ + ம் : மொத்த உள்நாட்டுச் செலவு | 5000 |
| வெளிநாட்டுத் தேறிய முதலீடு | (400) |
| தேறிய சர்வதேச கொடைகளும், மாற்றங்களும் | (100) |
| மொத்தத் தேசிய செலவு | 4500 |

16. நடைமுறை விலையில் தேசிய வருமானம் :

குறிப்பிட்ட வருட தேசிய உற்பத்தியை நிகழ்கின்ற அதே ஆண்டின் விலைகளில் கணிப்பதன்மூலம் நடைமுறை விலையில் தேசிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். 1986இன் மொத்த தேசிய உற்பத்தியை 1986இல் காணப்படும் விலையின் அடிப்படையில் கணிப்பதன் மூலம் இது பெறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பிரதானமாக இரு வழிகளில் கணிக்கப்படும் :

(i) நடைமுறை விலையில் காரணிச் செலவு விலையின் படி கணித்தல் (தேசிய உற்பத்தி / தேசிய வருமானம்)

(ii) நடைமுறையில் காணப்படும் சந்தை விலையின்படி கணித்தல் (தேசியச் செலவு)

17. நிலையான விலையில் தேசிய வருமானம் :

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வருடத்தைத் தெரிவுசெய்து, அதே ஆண்டில் நிகழும் விலையின் அடிப்படையில் ஏனைய வருடங்களின் தேசிய உற்பத்திப் பெறுமதியைக் கணித்தலாகும். இரண்டு அல்லது பல வருடங்கள் இடையிலான தேசிய உற்பத்தியின் வேறுபாடுகள் பற்றி ஆராய்ந்துபார்க்கும்போது அதாவது பொருளாதார வளர்ச்சிநிலைமை பற்றி ஒப்பிடும்போது நிலையான விலையில் கணிப்பது முக்கியமானது.

இலங்கை மத்தியவங்கி அறிக்கைகளில் நிலையான விலையிலான கணிப்பீடு இரண்டு சந்தர்ப்பங்களில் காட்டப்படுகிறது.

(அ) நிலையான காரணி விலையில் கணித்தல்

(ஆ) நிலையான சந்தை விலையில் கணித்தல்

நிலையான விலையில் உற்பத்தியைக் கணிப்பதால் கிடைக்கும் பெறுமதி மெய்ப் பெறுமானம் எனப்படும். இதில் விலைமட்டங்களில் ஏற்படும் அதிகரிப்புக்கள்—அதாவது பணவீக்கத்தன்மை—தவிர்த்துக் காட்டப்படும். இதன்படியே குறித்த காலப்பகுதிகளுக்கிடையில் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி வேகத்தை மிகவும் சரியாகக் கணித்துக் கொள்ள இது மிகவும் பயன்படுகிறது.

தேசிய உற்பத்தியை நிலையான விலைகளில் கணிக்கும்போது துறைவாரியான உற்பத்திப் பெறுமதிகள், அவற்றுக்கான பல்வேறு சுட்டெண்கள் என்பன பெறப்படுகின்றன. அதனடிப்படையிலேயே நிலையான விலைகளில் தேசிய உற்பத்தி கணிக்கப்படும்.

கூலி விலைச் சுட்டெண், வாழ்க்கைச் செலவுச் சுட்டெண், பல்வேறு சந்தை விலைச் சுட்டெண்கள், கட்டிடவாக்க விலைச் சுட்டெண்கள் இவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.

நடைமுறை விலையிலான மொத்தத் தேசிய உற்பத்தியை நடைமுறை வருட விலைச் சுட்டெண்ணால் பிரித்து அடியாண்டுக்குரிய விலைச் சுட்டெண்ணாகிய நூறினால் பெருக்குவதால் நிலையான விலையிலான மொத்தத் தேசிய உற்பத்தி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம் :

1986இன் நடைமுறைவிலையிலான மொத்தத் தேசிய உற்பத்தி 12,000 மி

1986இன் விலைச் சுட்டெண் (1982 = 100) 120

நிலையான விலையில் மொத்தத் தேசிய உற்பத்தி

$$\frac{12,000}{120} \times 100 = 10,000 \text{ மி}$$

18. மெய்த் தேசிய வருமானம் :

காரணிச் செலவு விலைகளில் நிலையான விலையின் அடிப்படையில் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியுடன் ஏற்றுமதிகளால் வர்த்தகமாற்று விகிதத்தில் ஏற்பட்ட விளைவுகளும் சேர்க்கப்பட்டுப் பெறப்படுவது நிலையான காரணிச் செலவு விலைகளிலான மெய்த் தேசிய வருமானமாகும். இதைக் கணிக்கும்போது இலங்கையின் பிரதான ஏற்றுமதிகளான தேயிலை, றப்பர், தெங்கு ஏற்றுமதி என்பவற்றை உள்ளடக்கிய எல்லா ஏற்றுமதிகளினதும் சந்தை விதப்படியான தேறிய விளைவுகள் சேர்க்கப்படும். இதற்கு அவ்வப்பண்டங்களுக்குப் பொருத்தமான ஏற்றுமதி விலைச்சுட்டெண்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கை மத்திய வங்கியால் தேசிய வருமானம் உற்பத்தி வழியிலும் செலவு வழியிலும் மட்டுமே கணிக்கப்படுகிறது. அப்படியிருந்தும் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் மெய்த் தேசிய வருமானம் பற்றிய அட்டவணை தரப்படுகிறது.

அவ்வாறு கணிக்கப்பட்ட 1985ஆம் ஆண்டுக்கான மெய்த் தேசிய வருமானக் கணிப்பை 1985ஆம் ஆண்டு மத்திய வங்கியின் பொருளாதார மீளாய்விலிருந்து பின்வருமாறு காட்டமுடியும்.

(மில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| 1. நிலையான காரணிச் செலவு விலைகளில் (1982) மொத்தத் தேசிய உற்பத்தி | 106,741 |
| 2. ஏற்றுமதிகளால் வர்த்தக மாற்று விகிதத்தில் எழுந்த விளைவுகள் | |
| 2 . 1 தேயிலை | 2616.6 |
| 2 . 2 றப்பர் | (56.4) |
| 2 . 3 மூன்று முதன்மை தெங்கு உற்பத்திகள் | 547.1 |
| 2 . 4 ஏனைய உற்பத்திகள் | 404.0 |
| மொத்தம் | 3511.3 |
| 3. நிலையான காரணிச் செலவு விலைகளில் (1982) மெய்த் தேசிய வருமானம் | 110,252 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. பொருளாதார வளர்ச்சி வீதம் :**

கடந்த ஆண்டுகளை விட நடைமுறை ஆண்டில் மொத்த மெய்த் தேசிய உற்பத்தி வீதம் அதிகரிப்பது பொருளாதார வளர்ச்சி வேகம் அல்லது பொருளாதார வளர்ச்சி வீதம் ஆகும். குறித்த வருட காலப் பகுதிக்குள் நாட்டின் நிலையான விலைகளில் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பின் வீதம் பொருளாதார வளர்ச்சி வீதமாகும்.

$$\text{பொருளாதார வளர்ச்சி வீதம்} = \frac{\text{மொத்த மெய்த்தேசிய உற்பத்தி மாற்றம்}}{\text{முந்திய வருட மெய்த் தேசிய உற்பத்தி}}$$

உ + ம் :

1982இன் நிலையான விலையில் மொத்த தேசிய உற்பத்தி 22500

1983இன் நிலையான விலையில் மொத்த தேசிய உற்பத்தி 24500

1982 — 1983 தேசிய உற்பத்தியின் மாற்றம்

$$24500 - 22500 = 2000$$

$$\text{1983இன் பொருளாதார வளர்ச்சி வீதம்} = \frac{2000}{22500} \times 100$$

$$= 8.8\%$$

**20. ஆள்வீத வருமானம் :**

மொத்த தேசிய உற்பத்தியிலிருந்து நாட்டின் ஒவ்வொருவருக்கும் உரியதாகும் தொகை ஆள்வீத வருமானமாகும். இது குறித்த வருடத்தின் மொத்தத் தேசிய உற்பத்தியை அதே வருட நடுப்பகுதிக்கான மொத்தச் சனத் தொகையால் வகுப்பதன் மூலம் பெறப்படும். இது இரு வழிகளில் கணிக்கப்படுகிறது.

(அ) ஆள் வீதப் பண வருமானம் அல்லது பணத் தலா வருமானம்.

(ஆ) ஆள் வீத மெய் வருமானம் அல்லது மெய்த்தலா வருமானம்.

(அ) நடைமுறைவிலையில் கணிக்கப்பட்ட மொத்த தேசிய வருமானத்தை அதே வருடத்தின் நடு ஆண்டுக்குரிய மொத்த சனத்தொகையால் வகுப்பதன்மூலம் பெறப்படுவது ஆள்வீத பண வருமானம் அல்லது பணத் தலா வருமானம் ஆகும்.

$$\text{பணத்தலா வருமானம்} = \frac{\text{நடைமுறைவிலையில் மொத்த தேசிய உற்பத்தி}}{\text{நடு ஆண்டு சனத்தொகை}}$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம் : 1985இன் நடைமுறை விலையில் காரணிச் செலவு
விலையின் படியான மொத்தத் தேசிய உற்பத்தி 144921 மி.
1985இன் நடு ஆண்டுச் சனத்தொகை 15.837 மி.
1985இன் பணத் தலாவருமானம் $\frac{144921}{15.837}$ = 9150/78

(ஆ) நிலையான விலையிலான மொத்தத் தேசிய உற்பத்தியை நடு ஆண்டு சனத்தொகையால் பிரிப்பதால் பெறப்படுவது மெய்த் தலா வருமானம் ஆகும்.

மெய்த்தலா வருமானம் = $\frac{\text{நிலையான விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி}}{\text{நடு ஆண்டு சனதொகை}}$

உ + ம்: 1985இன் நிலையான விலையிலான (1982) காரணிச் செலவு
விலையின் படியான மொத்த தேசிய உற்பத்தி 106,771 மி.
1985இன் நடு ஆண்டு சனத் தொகை 15-837 மி.
1985இன் மெய்த் தலா வருமானம் = $\frac{106741}{15.337}$ = 6739/98

21. வளங்களின் பயன்பாடு:

ஒவ்வொரு வருடமும் நாட்டின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்ற வளங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியாகவும் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், காரணி அல்லாத சேவைகளாகவும் இருக்கும்.

இதேபோல் இந்த வளங்களின் பயன்பாடு நுகர்வு, மொத்த உள் நாட்டு மூலதன ஆக்கம், பொருட்கள், காரணி அல்லாத சேவைகள் என்பவற்றின் ஏற்றுமதியாகவுமிருக்கும்.

1985ஆம் ஆண்டின் வளங்கள், அவற்றின் பயன்பாடு என்பன பற்றி மத்திய வங்கியின் அவ்வாண்டுக்கான பொருளாதார மீளாய்வு பின்வருமாறு காட்டுகின்றது:

(மில்லியன் ரூபாவில்)

அ. வளங்கள் :

| | |
|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 162,375 |
| பொருட்கள், (காரணி அல்லாத) சேவைகளின் இறக்குமதி | 61,646 |
| மொத்தம் | 224,021 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) வளப்பயன்பாடு :

| | |
|---|---|
| நுகர்வு | 143,102 |
| மொத்த உள்நாட்டு முதலாக்கம் | 38,682 |
| பொருட்கள் காரணி அல்லாத சேவைகள் ஏற்றுமதி | 42,237 |
| மொத்தம் | 224,021 |

22. குடித்தன வருமானம் :

ஒரு வருடத்தில் நாட்டின் வீட்டுத்துறையினரால் அதாவது குடும்பங்களால் பெறப்படும் வருமானங்களை அது குறிக்கும். இவ்வகைக் குடித்தன வருமானங்கள் உற்பத்தியில் ஈடுபட்டதால் பெறப்பட்டவையாக மட்டும் அமையவேண்டும் என்பதில்லை. மாற்றல்களாகவோ நன்கொடை, சன்மானங்கள் என்ற வடிவில் பெறப்பட்டிருந்தாலும் கூட அவை குடித்தன வருமானங்களில் உள்ளடங்குவனவே ஆகும்.

இது காரணிச் செலவிலான தேறிய தேசிய உற்பத்தியிலிருந்து பகிரப்படாத இலாபங்களைக் கழித்து, சமூகப் பாதுகாப்புத் தொகைகளையும் வர்த்தக (கூட்டிணைக்கப்பட்ட துறை) வரிகளையும் கழித்து வரும் தொகையுடன் அரசின் மானியங்களைக் கூட்டுவதால் பெறப்படுவதாயிருக்கும்.

உ + ம் : (மில்லியன் ரூபாவில்)

| | | |
|---|---|---|
| 1. | காரணிச் செலவில் தேறிய தேசிய உற்பத்தி | 15,000 |
| 2. | பகிரப்படாத இலாபங்கள் | (200) |
| 3. | சமூகப் பாதுகாப்புக் கொடுப்பனவுகள் | (100) |
| 4. | வர்த்தக வரித்தொகைகள் | (150) |
| 5. | அரச மானியக் கொடுப்பனவுகள் | (125) |
| 6. | குடித்தன வருமானம் | 14,425 |

மேற்படி குடித்தன வருமானத்திலிருந்து தனியாரால் செலுத்தப்படும் வருமானவரிகளைக் கழிப்பதால் பெறப்படுவது வீட்டுத்துறையினரின் செலவிடத்தக்க வருமானமாக இருக்கும்.

23. கூட்டிய பெறுமதி :

ஒரு நாட்டில் குறிப்பிட்ட வருடத்தில் உற்பத்தியில் ஈடுபடும் ஒவ்வொரு நிறுவனமும் தேசிய உற்பத்திக்குச் சேர்க்கின்ற பெறுமதிகளை மாத்திரம் கூட்டிய பெறுமதி என்பர். இவ்வாறாக எல்லா நிறுவனங்களினதும் உற்பத்திப் பெறுமதியைக் கூட்டுவது தேசிய உற்பத்திப் பெறுமதியைக் கணிப்பதற்கான கூட்டப்பட்ட பெறுமதி முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு தொழில் நிறுவனமும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பண்டங்களைக் கொள்வனவு செய்கின்றன. இவற்றைக் கொள்வனவு செய்யும் நிறுவனங்களின் மொத்த விற்பனைப் பெறுமதியிலிருந்து, இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட உள்ளீடுகளைக் கழிக்க வரும் மிகுதி கூட்டிய பெறுமதியாகும். இவ்வாறு எல்லா நிறுவனங்களினதும் பெறுமதியைக் கூட்ட வருவது தேசிய உற்பத்தியாகும். இம்முறையில் இரட்டைக் கணிப்புத் தவறு நீக்கப்படுகிறது. இந்தமுறையில் கணிப்பதால் மொத்த உற்பத்தியின் பெறுமதி அறியப்படுவதோடு ஒவ்வொரு நிறுவனத்தினதும் தனித்தனியான உற்பத்திப் பங்களிப்பையும் அறிந்து கொள்ள முடியும். இவ்வகையில் இது முக்கியமானது.

இதைத் தெளிவாக விளங்கிக்கொள்ள கீழ் வரும் அட்டவணை உதவுகின்றது:

(மில்லியன் ரூபாவில்)

| நிறுவனங்கள் | முடிவுப் பொருளின் பெறுமதி | பிற நிறுவனங்களிலிருந்து வாங்கியது | சம்பளம் | வட்டியும் கூலியும் | இலாபம் | கூட்டிய பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| பஞ்சு | 350 | 0 | 100 | 200 | 50 | 350 |
| நூல் | 800 | 350 | 150 | 100 | 200 | 450 |
| துணி | 1300 | 800 | 200 | 150 | 150 | 500 |
| உடை | 2000 | 1300 | 250 | 250 | 200 | 700 |
| மொத்தம் | 4450 | 2450 | 700 | 700 | 600 | 2000 |

இதில் முடிவுப் பொருளின் பெறுமதியே மொத்த விற்பனைப் பெறுமதி அல்லது மொத்த புரள்மானப் பெறுமதியாகும். இது (ரூ. 4450 மி.) தேசிய உற்பத்தியாகாது. இதிலிருந்து பிற நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய்த உள்ளீடுகளின் பெறுமதியை (2450 மில்லியன் ரூபா) கழிக்க வருகின்ற மிகுதியான 2000 மில்லியன் ரூபாவே கூட்டிய பெறுமதியாகும். இதுவே தேசிய உற்பத்தியாகும். இது நிச்சயமாக காரணிச் செலவு விலைக்குச் (700 + 700 + 600) சமனாகவே இருக்கும். இது நாட்டின் முடிவுப் பொருளின் பெறுமதிக்கும் சமமானதாகும். இங்கு முடிவுப்பொருளின் பெறுமதி 2000 மில்லியனாகும். இதில் ஏனைய பெறுமதி இடைநிலைப் பொருட்களாகும். (உ + ம் : பஞ்சு 350 + நூல் 800 + துணி 1300) இதனால் 2450 மில்லியன் ரூபா பெறுமதியுடைய இடைநிலைப் பொருட் பெறுமதியை முடிவுப் பொருளின் பெறுமதியிலிருந்து கழிக்க வரும் தொகைக்குச் சமனாகக் கூட்டிய பெறுமதி அமைகிறது. இவ்வகையில் இரட்டைக் கணிப்புத் தவறு தவிர்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 6
# தேசிய வருமான பிரச்சினை

நாடுகள் எல்லாம் தேசிய வருமானத்தை மிகவும் சரியாகக் கணித்துக் கொள்ள விரும்புகின்றன. ஆனாலும் நடைமுறையில் அது சாத்திய மாவதில்லை. வளர்ச்சியடைந்த நாடுகளைவிட, வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் தேசிய வருமானத்தைச் சரியாகக் கணிப்பது பெரும் பிரச் சினையாக உள்ளது. தேசிய வருமானம்பற்றிய புள்ளிவிபரங்களைச் சரியா கவும், தொடர்ச்சியாகவும் பெற்றுக்கொள்வது கடினமாயுள்ளது. இவை தொடர்பாகவே பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. அவற்றைப் பின் வருமாறு நிரல்படுத்தக்கூடும்.

1. **இரட்டைக் கணிப்பு :**

தேசிய வருமான விபரங்களைக் கணிக்கும்போது தரவுகள் சில, ஒருமுறை கூட்டப்படுவதற்குப் பதிலாக இருமுறை கூட்டப்பட்டு விடுகின்றன. இதனால் உண்மையாக உள்ளதிலும் பார்க்க தேசிய வரு மானம் கூடுதலாகக் காட்டப்படுகின்றது. உற்பத்திமுறையில் தேசிய வருமானத்தைக் கணிக்கும்போதும் வருமானமுறையில் கணிக்கும்போ தும் பிரச்சினை காணப்படுகின்றது.

**1.1 வருமானவழியில் :**

ஒரு குறிப்பிட்ட வருடத்தில் மக்களுக்குக் கிடைக்கிற வருமானம் உற்பத்தி தொடர்புடையதாயும்; உற்பத்தி தொடர்பற்றதாயும் காணப் படும். இவற்றை இரண்டாக வகுக்கலாம்.

**(அ) பயன்தரு கொடுப்பனவுகள் :**

குறிப்பிட்ட வருடத்தில் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியில் ஈடுபடுவதால் பெறப்படும் பெறுகைகளை இது குறிக்கும். இரு இருபக்கக் கொடுப்பனவுகளாகும். ஏனெனில் காரணிச் சேவையைக் கொடுத்து அதற்குப் பதிலாகப் பெறப்படும் பண வருமானமே இதுவாகும். இது வாடகை, வட்டி, கூலி, சம்பளம், இலாபம் என பல்வேறுவகைப்படும். இவற்றைத் தேசிய வருமானத்தில் சேர்க்கவேண்டும்.

**(ஆ) கைமாறல் கொடுப்பனவுகள்:**

குறிப்பிட்ட வருடத்தில் உற்பத்தியுடன் தொடர்பற்றமுறையில் கொடுபடுபவை இவையாகும். இவை ஒருபக்கக் கொடுப்பனவுகளே யாகும். அதாவது எவ்வித காரணிச்சேவையையும் வழங்காமல் பெறப் பட்ட வருமானங்களாகும். உணவு மானியம், பொதுப்படு கடன் வட்டி, ஓய்வூதியம், நன்கொடைகள் போன்ற பலவும் இவ்வாறானவை. இவற் றைக் கூட்டுதல் கூடாது. இவற்றைக்கூட்டுவதால் இரட்டைக் கணிப் புப் பிரச்சினை ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 . 2 உற்பத்தி வழியில் :

ஒரு வருடத்தில் ஆக்கப்பட்ட உற்பத்திப் பெறுமதியைச் சரியாகக் கணித்துக் கொள்வது கடினமாயுள்ளது. பண்டங்கள் முடிவுப் பொருட்களாயும், இடைநிலைப் பொருட்களாயும் உள்ளன.

(அ) முடிவுப் பொருட்கள் :

நுகர்வோர் பாவிக்கக்கூடிய நிலையில் உள்ள பண்டங்கள் இவை யாகும். இவற்றில் உற்பத்திச் செயல் முறை முடிந்துவிட்டதாயிருக்கும். இவற்றை தேசிய உற்பத்தியில் சேர்த்துக் கொள்ளலாம். அதாவது இவற்றைக் கூட்டி தேசிய உற்பத்திப் பெறுமதி அறியப்படும். நெல், புடவை, தளபாடம் போன்ற முடிந்த நிலையிலான பெறுமதிகளாகவே இவை காணப்படும். நிறுவனங்களின் மொத்த விற்பனைப் பெறுமதிகள் இவையாகும். இப்பெறுமதி கூட்டிய பெறுமதிக்குச் சமனாக இருக்கும்.

(ஆ) இடைநிலைப் பொருட்கள் :

இவை முடிவுறு நிலைக்கு வராதவை. இவற்றில் சில செயல் முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதனால் இவை வேறு நிறுவனங்களால் கொள்வனவு செய்யப்படும். அப்போது இவை அந் நிறுவனங்களின் உற்பத்திப்பொருட்களுக்கான உள்ளீடுகளாகவே அமையும். இதனால் இவற்றுக்கான கொடுப்பனவுகளை இடைக் கொடுப்பனவுகள் என்பர். விதைநெல், இரசாயனம், வளமாக்கி, புடவை நூல் சாயம், மரம், பலகை போன்றவற்றின் பெறுமானங்கள் இடை கொடுப்பனவுகளின் உதாரணங்கள். இவற்றைக் கூட்டுதல் கூடாது. இவற்றைக் கூட்டினால் இரட்டைக் கணிப்பு அல்லது இரட்டை எண்ணல் ஏற்படும்.

2. சந்தைப்படுத்தப்படாத உற்பத்தி :

ஒரு நாட்டில் குறிப்பிட்ட வருடத்தில் உற்பத்தி செய்யப்படும் எல்லாப் பொருட்கள் சேவைகளினதும் பெறுமதிகள் சேர்க்கப்படுதல் வேண்டும். ஆனால் அவ்வாறு சேர்க்கப்படுவதில்லை. இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் இப் பிரச்சினை மிகவும் அதிகமாயுள்ளது.

இலங்கையில் கிராமிய மட்டத்தில் 18 லட்சம் விவசாயிகள் வரையுள்ளனர். இவர்கள் தமது நாளாந்த நுகர்வுக்குரியவற்றைத் தமது உற்பத்தியிலிருந்தே பெறுகின்றனர். ஆனால் இவை கணிப்பில் இடம் பெறுவதில்லை. இதேபோல் பத்தாயிரம் கடற்கரைக் கிராமங்கள் உள்ளன. அங்குள்ள கடற்றொழிலாளர் குடும்பங்களும் தாம் பிடிக்கும் மீனின் ஒரு பகுதியை சொந்த நுகர்வுக்கு எடுக்கின்றனர். ஆனால் அவை

தே – 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் கணிப்பில் இடம்பெறுவதில்லை. இவ்வாறு விவசாயத்துறையில் தான் அதிக விபரங்கள் மறைந்துவிடுகின்றன. கைத்தொழிற் பெறுமானங்கள் சரியாகவேயுள்ளன.

**கலப்பு வருமானங்கள் :**

சிலர் தமது சொந்த நிலம், மூலதனம் என்பவற்றைப் பயன்படுத்தி தாமும் அதில் உழைக்கின்றனர். இவை சுயதொழில் முயற்சியாக இருக்கும். இவற்றில் இருந்து வருமானம் கிடைக்கின்றது. ஆனால் இத் தொகை எந்தக் காரணிக்கு எந்தளவு கிடைத்தது என்பதைச் சரியாக நிர்ணயிக்க முடியாது. எல்லாவற்றுக்குமான பொது வருமானம் அதாவது கூட்டு வருமானத்தை மட்டுமே அறியக்கூடியதாகவுள்ளது. இதில் நிலத்துக்குரிய வாடகை எவ்வளவு, முதலுக்குரிய வட்டி, உழைப்புக்கான சம்பளம் எவ்வளவு எனத் திட்டவட்டமாகக் கணித்தல் இயலாது.

**4. சட்டமுறையற்ற வருமானங்கள் :**

நாடுகளில் மக்கள் பெறுகின்ற சில வருமானங்கள் மிகவும் அதிகமாயுள்ளன. அவர்கள் வாழ்க்கைத் தரத்தையும் இவை உயர்த்துகின்றன. ஆனாலும் இவை தேசிய வருமானக் கணக்கில் இடம் பெறுவதில்லை. போதைவஸ்து விற்பனை, கடத்தல் பொருட்கள் விற்பனை, பொது அதிகாரத்தைத் தனிப்படப் பாவித்து உழைக்கும் இலஞ்சத் தொகைகள், சூதாட்ட உழைப்பு போன்றன இவ்வாறானவை. இவை மூன்றும் உலக நாடுகளில் மட்டுமன்றி வளர்ச்சியடைந்த அமெரிக்கா போன்ற நாடுகளிலும் கணிசமானதாக உள்ளன. இவற்றைத் தேசிய வருமானம் காட்டமாட்டாது.

**5. சிறுவர் ஊழிய வருமானம் :**

மூன்றும் உலக நாடுகளில் சிறுவர் தொகை கணிசமானதாயிருப்பதோடு, அவர்கள் குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் உறுப்பினர்களாகவும் கருதப்படுகின்றனர். பாடசாலைக்குச் செல்லாத நேரங்களில் உழைக்கின்றனர். வருமானம் குறைந்த குடும்பங்களில் பாடசாலையை இடைநிறுத்திக் கூலித்தொழில்களுக்குச் செல்கின்றனர். சிறுவர்கள் ஊழியம்பற்றி கடுமையான விதிகள் இல்லை. இழிவுக் கூலியின் அளவு, வேலையின் மாதிரி, வேலை நேரம், ஊழியர் சேமலாபநிதி செலுத்தல் போன்ற நிபந்தனைகள் இவர்கள் மட்டத்தில் தீவிரமாகக் கவனிக்கப் படுவதில்லை. இதனால் பெரிய மனிதர் செய்யும் அதே அளவு வேலைகளை இவர்கள் செய்கின்ற போதிலும் வேதனங்கள் மிகவும் குறைத்தே வழங்கப்படுகின்றன. இதனால் சரியான உழைப்புப் பெறுமானங்கள் கணிப்பில் இடம்பெறுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பெண்களின் பணி :

குடும்பப் பெண்கள் வீட்டுத்துறையில் நாளாந்தம் மேற்கொள்ளும் கடமை மிகவும் பெரிதாக உள்ளது. சுத்தம் செய்தல், சமைத்தல், ஆடை தயாரிப்பு, மருத்துவப் பராமரிப்பு, குடும்ப வரவு செலவு திட்டமிடல், பக்க வருமானம் போன்ற பல்வேறு பணிகளில் பொறுப்புடன் ஈடுபடுகின்றனர். மணித்தியால அடிப்படையில் அளவிட்டால் இவற்றின் பெறுமதி மிகவும் அதிகமானதே. இவற்றுக்குப் பணப் பெறுமதி இட்டு கணிப்பில் சேர்க்க வேண்டும். ஆனல் அவ்வாறு சேர்க்கப்படுவதில்லை. இதே பணிகளை ஒரு வீட்டு வேலையாள் செய்வாரயின் அவனுக்கு வேதனம் வழங்கப்படுகின்றது. இதனுல் இப்பணிகளின் பணப் பெறுமதி தேசிய வருமானக் கணிப்பீட்டில் சேர்க்கப்பட்டு விடுகின்றது.

7. வீட்டு வாடகைகள் :

வீடுகளைச் சொந்த மூலதனத்தில் கட்டி வாடகை உழைத்தல் பொதுவான நடவடிக்கையாகக் காணப்படுகிறது. தனிநபர்கள், நிறுவனங்கள், அரசாங்கம் ஆகியோர் இவ்வாறு வீடுகளைக் கட்டி வாடகை பெறுகின்றனர். இவை தேசிய வருமானத்தின் ஒரு பகுதியே. ஆனல் வீட்டுரிமையாளர்கள் தாங்களே தமது வீடுகளில் வசிக்கும்போதும் வாடகைப் பெறுமதிகளை வருமானங்களாகக் காட்டுதல் வேண்டும். ஆனல் அவ்வாறு ஒருவரும் பதிந்து வைப்பதில்லை. இதனுல் தேசிய வருமானம் சரியாகக் காட்டப்படுவதில்லை.

8. பணவீக்க வீதம் :

நாடுகளில் உற்பத்திப் பெறுமதிகள் பண விலைகளில் கணிக்கப்படும் போது உண்மை மதிப்பீடுகள் தெரிவதில்லை. அக்கால பணவீக்கப் பாதிப்பு அதில் சேர்க்கப்பட்டு விடும். வறிய நாடுகளில் விலைகளின் மாற்றம் மிகவும் வேகமாயும், உறுதியற்றதாயும் காணப்படுகின்றது. இந்த நிலையில் பணவிலைகளின் படியான பெறுமதியை மிகச் சரியானதாகக் கருத முடியாதுள்ளமை கவனிக்கத்தக்கது.

9. பண்டப் பெறுகை :

இலங்கை போன்ற பல வளர்முக நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான கொடுப்பனவுகள் இன்றும் ஓரளவு பண்ட வடிவிலும் அமைகின்றன. விவசாய அறுவடை வேலையின் போது கூலியாக நெல் கொடுபடும் வழக்கம் இன்றுமுள்ளது. மதவழிபாடு, ஆயுள்வேத மருத்துவம் போன்றன தொடர்பாகவும் பண்ட வடிவிலான கொடுப்பனவுகள் இடம்பெறுகின்றன. இவற்றைக் கணிப்பில் எடுத்துக் கொள்வதில்லை. இதனுல் தேசிய வருமானம் மிகச் சரியான பெறுகைகளைக் காட்டுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. பதுக்கல் :**

வளர்முக நாடுகளில் மக்கள் போதிய வங்கிப் பழக்கத்தைக் கொண்டிருப்பதில்லை. ஒழுங்கற்ற பணச்சந்தையும் கூடக் காணப்படுகின்றது. இதனால் கணிசமான பணத்தைச் சேமிப்பாக ஒதுக்கினாலும் அவை வங்கியில் இடப்படுவதில்லை; தமது கையில் பணமாக வைத்துக்கொள்கின்றனர். இது பதுக்கல் வடிவம் ஆகும். வங்கிக்கு வராத இத்தகைய முதலாக்க வடிவங்களின் மொத்தப் பெறுமதி தேசிய செலவீடு பற்றிய விபரங்களில் சரியாகக் காட்டப்படுவதேயில்லை.

இத்தகைய பிரச்சினைகள் அனைத்தும் இலங்கைக்கும் பொருந்தக் கூடியவை. இதனால்தான் தேசிய வருமான புள்ளி விபரங்கள் இறுதியானவையாகக் கருதப்படக் கூடாது என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 7

# வளர்ச்சியும் அபிவிருத்தியும்

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நிலைகளையும், வாழ்க்கைத் தரங்களையும் ஒப்பிடுவது அவசியமாகிறது. உலகரீதியில் நாடுகளிடையில் வியாபாரம், சேவைகள், முதலீடுகள், உதவிகள், என்ற பல அடிப்படையில் தொடர்புகள் காணப்படுகின்றன. இந்த நிலையில் இவ்வாறன தொடர்புகளை அதிகரிப்பதை மட்டுப்படுத்துவதா என்ற பிரச்சினை பொதுவானதாகும். இவ்வாறன முடிவுகளுக்குப் பொருளாதாரங்கள் ஒப்பீடப்படுகின்றன.

மரபுரீதியாக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி வீதங்களின் அடிப்படையில் ஒப்பிடப்படுவதுண்டு. பொருளாதார வளர்ச்சி என்ற எண்ணக் கரு முழுமையற்றதாக ஒப்பீட்டுக்கான முழுமையான காட்டியாக அமையாது என்று கருதப்பட்டது. அதே சமயம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மரபுவழியான மூலதன முதலீட்டில் அடிப்படை சார்ந்த வளர்ச்சி பற்றிய கருத்தும் மதிப்பற்றதாகியது. இந்த நிலையில் அடிப்படை மனித தேவைகள் பற்றிய எண்ணக்கரு வளர்ச்சி பெற்றது. இது பொருளாதார வளர்ச்சியுடனேயே அடிப்படை மனித தேவைகளையும் நிறைவுசெய்தல் முக்கியம் என்ற கருத்தின் வளர்ச்சியைத் தூண்டுவதாயிருந்தது. எனினும் நாடுகளின் முழுமையுடைய வளர்ச்சி என்பது அபிவிருத்தியே எனக் கருதப்பட்டது. இதனல் தேசிய வருமானத்தினைப் பயன்படுத்தி வளர்ச்சியை மாத்திரம் கணிப்பது என்பதோடு திருப்தியடையாமல் "அபிவிருத்தி" பற்றிய நோக்கும் முக்கியமானதாகிவிட்டது.

இந்த ஒப்பீட்டியல் நிலை தொடர்பான விளக்கத்தைப் பின்வருமாறு நோக்குவோம்.

**வளர்ச்சி :**

ஒரு குறிப்பிட்ட வருட காலத்தில் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டுற்பத்தியில் அல்லது மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியாகும். இது தலாவருமானத்தின் அதிகரிப்பிலிருந்தும் நோக்கப்படும். இவ்வாறன அதிகரிப்பின் நூற்று வீதம் பொருளாதார வளர்ச்சி வீதமாகும். பொதுவாக குறித்த அடியாண்டின் விலைகளில் கணிக்கப்பட்ட நிலையான விலைகளிலான தேசிய வருமானப் புள்ளி விபரங்களிலிருந்தே இவ்வளர்ச்சி வீதங்கள் கணிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் 1982ஆம் ஆண்டின் விலையில் கணிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில்தான் பொருளாதார வளர்ச்சிவீதம் கணிக்கப்படுகிறது.

| 1982இன் காரணிச் செலவு | 1984 | 1985 | 1986 |
|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி | 5.1 | 5.0 | 4.3 |
| மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி | 5.2 | 5.3 | 4.5 |
| தலா வருமானத்தின் வளர்ச்சி | 4.0 | 3.7 | 2.7 |

ஆனல் மொத்த தேசிய வருமானத்தைப்பற்றிய கணிப்புக்களில் பல குறைபாடுகள் உள்ளன. (அத்தியாயம் 5 ஐப் பார்க்கவும்). இதனல் அவ்விடங்களின் ஒப்பீடு சரியான தேசிய வருமான மாற்றத்தைக் காட்டமாட்டாது. குறிப்பாகத் தேசியவருமானக் கணிப்பீடு பின்வரும் வழிகளில் குறைபாடுடையது.

1. நாடுகளின் பொருளாதார உற்பத்திக் கட்டமைப்பின் மாற்றங்களை அது தெளிவுபடக் காட்டுவதில்லை. அதாவது பொருளாதார உற்பத்தித் துறைகளின் சதவீதப் பங்களிப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களை அவை சரியாகக் காட்டுவதில்லை.
2. நாடுகளின் வருமானப் பரம்பலும் அவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்களும் பொருளாதார வளர்ச்சி நிலை பற்றி மதிப்பிட உதவக் கூடியன. ஆனல் பொருளாதார வளர்ச்சியில் அவை வெளிப்படுத்தப்படுவதில்லை.
3. நாடுகளின் மொத்த உற்பத்தியைப் பாதிக்கக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் பொருளாதாரங்களுள் முதிர்ந்து வருவதுண்டு. தொழிலின்மை, சேமிப்பு, வீழ்ச்சி, படுகடன் வட்டி உயர்வு, உற்பத்தித் திறனின் வீழ்ச்சி போன்ற பிரச்சினைகள் கூடி இருக்கலாம். அல்லது அரசியல் குழப்பம், யுத்தம் போன்ற அரசியல் ஸ்திரமற்ற நிலைகள் காணப்படலாம். அல்லது புவியதிர்வு, எரிமலைப் பாதிப்பு, சூருவளி, வறட்சி போன்ற இயற்கைப் பாதிப்புக்கள் கூடியிருக்கலாம். இவற்றைத் தேசிய வருமான தரவுகள் வெளிக்காட்டமாட்டா. இதனல் தேசிய வருமான தரவுகளின் படியான வளர்ச்சி வேறுபாடுகள் மிகச் சரியானவையல்ல.

**கடமையும் மாற்றமும் :**

இதனல் தேசிய வருமானத்தின் மொத்தப் பெறுமதிகளை ஒப்பிடுவதைவிட உற்பத்தித் துறைகளின் கட்டமைப்புத் தொடர்பான மாற்றங்களை ஒப்பிடுவது முக்கியமானதாகி வருகின்றது. அபிவிருத்தியடைந்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் நாடுகளின் வளர்ச்சியை ஒப்பிடுதற்கு இவ்வாருன துறைகள் சார்ந்த வீதங்கள், அவற்றின் மாற்றங்கள் என்பன பயன்படுகின்றன. உலகவங்கி இந்த முறையில் பொருளாதாரங்களை ஒப்பிட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் தனது கடன் உதவிகள் பற்றிய முடிவுகளையும் அது தீர்மானிக்கின்றது.

உலகின் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளினதும் அபிவிருத்தியடைந்த நாடுகளினதும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான துறைகள் பங்களிப்பு அவற்றின் மாற்றங்கள் என்பன ஒப்பிடப்படுகின்றன. கீழே காட்டப்படும் பட்டியல் அவ் வருமான விபரங்களைத் தருகின்றது.

இவை : (i) விவசாயம்
(ii) தயாரிப்பு
(iii) சுரங்கம்
(iv) கட்டிடவாக்கம்
(v) மின்சாரம்
(vi) வாயு
(vii) நீர்

போன்ற நலச் சேவைகளை அடக்கும் ஏனைய கைத்தொழில்கள் என மூன்று வகையில் காட்டப்படும். இந்த புள்ளி விபரங்கள் நடைமுறைக் காரணிச் செலவு விலையின்படியான ஒப்பீடாகக் காட்டப்படுகின்றது. நாடுகளில் விவசாயத்துறையின் சதவீதம் குறைந்து வருவது வளர்ச்சியைக் குறிக்கும். விவசாயத் துறையின் மொத்தப் பெறுமதி படிப்படியாகக் கூடி வரவேண்டும். ஆனுலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் சதவீதப் பங்கு குறைந்தே வரவேண்டும். அதாவது ஏனைய கைத்தொழில் துறைகளுக்கு அவை விட்டுக்கொடுக்க வேண்டும் என்பதாகும். பல தொகுதி வளர்முக நாடுகளில் இத்தகைய விரும்பத்தக்க மாற்றமே ஏற்பட்டுள்ளது.

தயாரிப்புத்துறை பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் துறையாகும். தொழில் வாய்ப்பு, மெய் வருமானம், ஏற்றுமதி என்பவற்றை அதிகரிக்கும் துறையாகும். இதனுல் இத்துறையின் மொத்தப் பெறுமதி உயர்வதோடு சதவீதப் பங்கும் அதிகரித்து வரவேண்டும். இங்கு இத்தகைய மாற்றங்கள் சில தொகுதி நாடுகளின் உயர் வளர்ச்சியை மதிப்பிட உதவுகின்றன.

ஏனைய கைத்தொழில்கள் என்பவற்றையும் தயாரிப்புத்துறை என்பவற்றுடன் சேர்த்தே பொதுவாக ''கைத்தொழில் துறை'' என்பர். இதுவே பொருளாதாரத்தின் துணைத்துறை அல்லது இரண்டாம் கட்டம் என்பர். இவ்வகையில் ஏனைய கைத்தொழில்கள் எனப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள் பொருளாதாரத்தின் சகல துறைகளினதும் முழுமையான சீரான வளர்ச்சியை உறுதி செய்யத்தக்கவை. இவ்வகையில் இத்துறையும் முக்கியமானது. இதனால் இத்துறையும் மொத்தப் பெறுமதி உயர்வதோடு அதன் சதவீத பங்கும் அதிகரித்தல் வேண்டும். அவ்வாறான மாற்றமும் சில தொகுதி வளர்முக நாடுகளில் தெரிகின்றன. உயர் வருமானம் பெறும் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளில் இம் மாற்றம் அதிகமாகத் தெரிகின்றது.

| | நாடுகள் | 1960 | 1970 | 1981 |
|---|---|---|---|---|
| 1. | சீனு தவிர்ந்த அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் | | | |
| | 5.1 விவசாயம் | 33.8 | 23.5 | 19.3 |
| | 5.2 தயாரிப்பு | 17.2 | 19.4 | 19.5 |
| | 5.3 ஏனைய கைத்தொழில் | 9.0 | 11.2 | 15.5 |
| 2. | உயர் வருமானமுடைய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள் | | | |
| | 1.1 விவசாயம் | — | 3.3 | 1.1 |
| | 1 2 தயாரிப்பு | — | 5.2 | 4.5 |
| | 1.3 ஏனைய கைத்தொழில் | — | 61.6 | 73.2 |
| 3 | தென் ஆசியா | | | |
| | 2.1 விவசாயம் | 48.9 | 46.1 | 36.1 |
| | 2.2 தயாரிப்பு | 13.1 | 13.6 | 16.4 |
| | 2.3 ஏனைய கைத்தொழில் | 5.5 | 6.7 | 8.7 |
| 4. | தாழ் வருமானமுடைய அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் | | | |
| | 3.1 விவசாயம் | 50.4 | 45.5 | 38.5 |
| | 3.2 தயாரிப்பு | 14.7 | 12.8 | 14.4 |
| | 3.3 ஏனைய கைத்தொழில் | 5.9 | 7.1 | 8.4 |
| 5. | கைத்தொழில் சந்தைப் பொருளாதார நாடுகள் | | | |
| | 4.1 விவசாயம் | 5.7 | 4 1 | 3.2 |
| | 4.2 தயாரிப்பு | 28 7 | 27.1 | 20 4 |
| | 4.3 ஏனைய கைத்தொழில் | 11.6 | 11 7 | 14.2 |

மூலம்: 'Finance and Development'
Vol. 21, No. 2. Sept. 84 — p · 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் விவசாயத் துறையின் பங்கு படிப்படியாகக் குறைந்து வருவது தெரிகிறது. தயாரிப்புத் துறையின் பங்கு மெதுவாகக் கூடிவருவதும் தெரிகிறது. ஏனைய கைத்தொழில்கள் மிகவும் வேகமாக அதிகரித்து வருவதையும் காண முடிகிறது. இதன் அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியை ஒப்பிட்டு நோக்குதல் ஓரளவு உபயோகமுடையது. இலங்கையில் தேசிய உற்பத்தி பற்றிய புள்ளி விபரங்கள் உபயோகமுடையன.

தலா வருமானம் :

உலகரீதியில் நாடுகளை ஒப்பிடுதற்குத் தலா வருமானம் நீண்ட காலமாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி மாறுவிலைகளில் கணிக்கப்பட்ட தேசிய உற்பத்தியை அதே ஆண்டு குடித்தொகையால் பிரிப்பதன்மூலம் தலா வருமானம் பெறப்படும். இது ஒரு ஆண்டுக்குக் கிடைக்கின்ற சராசரி வருமானத்தைக் குறிக்கிறது. இதனடிப்படையில் உலக நாடுகள் வேறுபடுத்திக் கூறப்படுகின்றன.

அ. ஐ. நா $ 405லும் குறைவான தலாவருமானத்தைப் பெறும் நாடுகள் தாழ்வருமானமுடைய நாடுகள் எனப்படுகின்றன. அ. ஐ. நா. $ 405லும் உயர்வாகப் பெறும் நாடுகள் நடுத்தர வருமானமுள்ள நாடுகளாகக் கருதப்படுகின்றன. பாரெய்ன், புருனே, குவைத், லிபியா, ஓமான், கடார், சவுதியரேபியா, ஐக்கிய அரபு எமரேற்ஸ் என்பன உயர் வருமானமுடைய எண்ணெய் ஏற்றுமதி நாடுகளாகக் கணிக்கப்பட்டுள்ளன. ஆசிய நாடுகளை ஒப்பிட்டால்,

| பட்டியல் | தலா வருமான ஒப்பீடு | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இலங்கை | இந்தியா | மலேசியா | பாகிஸ்தான் | பிலிப்பைன்ஸ் | தாய்லாந்து |
| மொ. தே. உற்பத்தி (அ. ஐ. நா. $) | 4306 | 179820 | 26680 | 32180 | 41500 | 38730 |
| தலா வருமானம் (அ. ஐ. நா. $) | 284 | 250 | 1840 | 380 | 820 | 800 |
| வளர்ச்சி வீதம் | 5.1 | — | 5.2 | 4.3 | 3.0 | 4.1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி சமூக பொருளாதார ஆய்வு — 1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் தலாவருமானம் நாட்டுமக்கள் ஒவ்வொருவரினதும் மிகச் சரியான வருமானப் பெறுகையைக் காட்டுவதாயில்லை. அதேபோல் பொதுவாக சமூக மக்களால் பெறப்பட்ட வருமான அளவினையும் காட்டுவதாயில்லை. மொத்தத் தேசிய வருமானத்தை மொத்தக் குடித்தொகையால் பிரிப்பதனுல் தலாவருமானம் பெறப்படுகிறது எனும்போது தேசிய வருமானம் என்பதில் எல்லா வடிவிலும் (பணவடிவிலும் பண்டவடிவிலும்) அமைந்த பெறுகைகள் சரியாகச் சேர்க்கப்படவில்லை என்பதோடு மொத்தக் குடித்தொகையால் பிரிப்பது என்பது தொடர்பான குறைபாடுகளும் முக்கியமானதாகின்றது. அதன்படி பின்வரும் குறைபாடுகள் உள்ளன.

(i) மொத்தக் குடித்தொகையில் குழந்தைகள், நோயாளர், மாணவர், அங்கவீனர் ஆகியோர் உள்ளடக்கப்படுகின்றனர். இவர்கள் பொருள் ஆக்க முயற்சியில் ஈடுபடுவதுமில்லை. எவ்வித வருமானமும் பெறுவதில்லை. ஆனுல் அவர்களும் வருமானம் பெறுவதாகக் காட்டப்படும். இது தவறுனது. இலங்கையின் 1985க்கான தலாவருமானம் ரூ. 9219/- என்னும் போது அவ்வாண்டில் இலங்கையில் இருந்த ஒவ்வொரு மனித ஜீவன்களும் இத் தொகையைப் பெற்றன என்றே கருதப்படுகின்றது. இது தவறுனதே.

(ii) தலாவருமானம் எல்லோரும் ஒரேயளவு தொகையைப் பெறுவதாகக் காட்டப்படுகின்றது. அதாவது வருமானப் பகிர்வில் எவ்வித வேறுபாடும் இல்லை என்கிறது. அனைவரும் ஒத்த வருமானம் பெறுகிறுர்கள் எனக் காட்டுகிறுர்கள். வருமானப் பங்கீட்டில் சமமின்மை உள்ளபோதும் அதை தலாவருமானம் மறைத்து விடுகிறது. இலங்கையில், வருமானப் பரம்பல் சமமற்றுள்ளது. அதாவது தேசிய வருமானத்தில் கூடியபகுதி உயர்மட்ட 10 வீதத்தினருக்குக் கிடைக்கும்போது தேசிய வருமானத்தில் மிகச் சிறு பகுதியே தாழ்மட்ட 10 வீதத்தினரைச் சென்றடைகின்றது.

1980/81இன் படியான வருமானப் பரம்பலின்படி தாழ்மட்ட 10%னர் தேசிய வருமானத்தில் 1.5%ஐ மட்டுமே பெறுகின்றனர். மறுபுறம் அதி உயர்மட்ட 10%னர் தேசிய வருமானத்தில் 33.5% ஐப் பெறுகின்றனர்.

இத்தகைய உண்மையைத் தலா தேசிய வருமானம் காட்டுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) தலாவருமான மாற்றங்கள் படிப்படியாக தலாவருமானம் கூடுவது போலவே காட்டும். எல்லோரதும் வருமானம் சம காலத்தில் சம அளவில் உயரக் கூடியதான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது போன்ற மாயைத் தோற்றத்தையே இது காட்டும். உண்மையில் அவ்வாறான மாற்றம் மிகவும் கற்பனையானதே. ஆனால் நடைமுறையில் செல்வத்தின் பெருக்கம் ஒரு பக்கச் சார்பாக ஏற்பட முடியும். ஒருசிலர் முன்பிலும் பார்க்க இழந்தும் ஒருசிலர் வளர்ச்சிப் போக்கில் மேலதிகத்தை மிக வேகமாகக் குவித்தும் கொண்டிருக்க முடியும். இவ்வாறான சமூக நீதிக்கு மாறான மாற்றத்தைத் தலா வருமானத்தின் மாற்றங்கள் காட்டமுடியாது.

இலங்கையில் 1970இல் ரூபா 1,036/-ஆக இருந்த தலாவருமானம் 1981இல் ரூபா 1,352/- ஆக உயர்ந்துள்ளது. இதன் கருத்து முன்னைய ஆண்டைவிடப் பின்னைய ஆண்டில் ஒவ்வொருவரும் ரூபா 316/- கூடுதலாகப் பெற்றுள்ளனர் என்றதாக அமையும்.

| | 1969/70 | 1980/81 |
|---|---|---|
| | (தேசிய வருமானத்தின் சதவீதம்) | |
| மிகத் தாழ்ந்த 10%னர் பெறுவது | 2.0 | 1.5 |
| மிக உயர்ந்த 10%னர் பெறுவது | 28.0 | 33.5 |

இலங்கையில் தலாவருமானம் மிகவும் திருப்தியானதன்று. இதனால் தான் அபிவிருத்தி பற்றிய கருத்து வளர்ச்சிபெற்றது.

உலக ரீதியாக நாடுகளை ஒப்பிட்டு நோக்கவும் தலாவருமானம் பயன்படுகிறது. 1980 இன் படியான தரவுகளை நோக்கலாம்:

ஐ. அமெரிக்கா—$ 11,360, யப்பான்—$9890, குவைத்—$ 22840, மே. ஜேர்மனி—$ 13,590, பிரான்ஸ்—$ 11750, இலங்கை—$ 270, இந்தியா—$ 240.

அபிவிருத்தி:

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பொருத்தமான துறைகளிலும் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் ஏற்படும் சாதகமான மாற்றங்கள் அல்லது வளர்ச்சியே அபிவிருத்தி எனப்படுகிறது. இந்த அபிவிருத்தி என்பது சமூக கல்வி விருத்தியுடன் இணைந்து பொருளாதார அபிவிருத்தியைப் பாதிக்கிறது. சமூக அபிவிருத்தி பொருளாதார அபிவிருத்தியைப் பாதிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் அபிவிருத்தி என்பதில் இருந்து பின்வரும் கருத்துக்கள் தெளிவாகின்றன :

(i) நாட்டின் இயற்கை வளம், மனிதவளம், மூலதனம் என்பன உயர்வதாலும் அவற்றின் பயன்பாடு உயர்வதாலும் ஏற்படும் நலன் சார்ந்த மாற்றங்களை இது குறிக்கும்.

(ii) நாட்டின் பொருளாதார அமைப்பின் தன்மையில் மாற்றம் சாதகமான முறையிலமைந்த மாற்றம் நிகழ்வதைக் குறிக்கும். அதாவது விவசாயத் துறையின் சதவீதப் பங்கு குறைந்து கைத்தொழிலின் சதவீதப் பங்கு உயர்வதாகக் குறிக்கப்படுகிறது.

(iii) பொருட்கள் சார்ந்த நலன்கள் உயர்வதை மட்டும் குறிக்காது சமூக பண்பாட்டு அரசியல் வாழ்விலும் ஏற்படும் விரும்பத்தக்க மாற்றங்களைக் குறிக்கும்.

(iv) பொருளாதாரத்தில் ஒரு சாராரிடம் ஏற்படும் செல்வ வளர்ச்சியையன்றி எல்லா மக்களினதும் வாழ்க்கைத்தரம் உயர்வதைக் குறிக்கும். அதாவது வருமான செல்வப் பரம்பல் சீராக்கப்படும் மாற்றங்களையும் குறிக்கும் என்பதாம்.

இலங்கையில் அபிவிருத்தி என்பது விரிவான எண்ணக் கருவாகும். வளர்ச்சி என்பது வெறுமனே பொருட்கள் சார்பான அதிகரிப்பை மட்டுமே குறிக்க அபிவிருத்தி என்பது வாழ்வின் எல்லா மட்டங்களில் எல்லா மக்களைப் பொறுத்தும் ஏற்படும் மாற்றங்களையும் குறிப்பதாகிறது. இவ்வாறன அபிவிருத்தி மட்டம் எவ்வாறுள்ளது என ஆய்வதற்கு அடிப்படைத் தேவைகளை வழங்கும் ஆற்றல் மிகவும் உபயோகமானதாகக் கொள்ளப்படுகிறது. மனிதனது அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை என்பவற்றை விட சுகாதாரம், கல்வி, வீடு ஆகியனவும் முக்கியமானவையாகும்.

இவற்றினடிப்படையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை மிகவும் பொருத்தமானதாகக் கருதுகின்றனர். இதில் மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரிப்பு என்பதற்குப் பதிலாக,

(அ) நிலம், உழைப்பு, மூதல் போன்ற காரணிகளுக்கான உள்ளீடுகளின் வளர்ச்சி நோக்கப்படுகிறது. அதேபோல் தனியொரு மூலத்தின் உற்பத்தித் திறன் மாற்றமென தனித்து அடையாளம் காணமுடியாத "எச்சம்" (Residual) என்பதன் மாற்றமும் நோக்கப்படுகிறது. பல பொருளாதார நூல்கள் மனித மூலதன அபிவிருத்தியினுல் ஏற்படும் பொருளாதார விளைவுகளை அடையாளம் காணவேண்டும் எனக் கருதுகின்றன. வளர்முக நாடுகளில் வளர்ச்சிக் கணக்கீடு (Growth Accounting) பற்றிய எண்ணக்கரு முதன்மையுடையதாகக் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) 1947இல் ஜோர்ஜ் ஸ்ரிக்லர் (George Stigler) என்பவரும் எட்வாட் டெனிசன் என்பாரும் 1967, 1974, 1979இல் இக்கணக்கீட்டில் அதிக கவனம் செலுத்தினர். டெனிசன் ஐக்கிய அமெரிக்க மொத்த தேசிய உற்பத்தியின் 60% அதிகரிப்புக்கு உழைப்பு முதல் போன்ற உள்ளீடுகளே காரணம் என விளக்கினுர்.

எனினும் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்தல் பற்றிய அளவீட்டில் பல்வேறு விதமான சமூகக் குறிகாட்டிகள் (Social Indicators) பயன்படுத்தப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த பொருளியலாளர் நோர்மன் ஹிகஸ் (Norman Hicks) என்பவர் அவற்றிலும் தெளிவின்மை சிக்கல்கள் உள்ளன என்கிருர். ஆனுலும் திருத்தமான காட்டிகள் தேடப்படும்வரை இவற்றைப் பயன்படுத்த உடன்படுகின்றனர்.

i. சுகாதாரம் :

நாட்டு மக்களுக்கான சுகாதார வசதிகள் உயர்வது அபிவிருத்தியாகக் கொள்ளப்படுகின்றது. இதன்படி பின்வருவன ஒரு நாட்டின் சுகாதார தரத்தைக் காட்ட உதவுகின்றன.

(i) ஒரு வைத்தியருக்கான ஆட்கள்
(ii) ஒரு கட்டிலுக்கான நோயாளர்
(iii) ஆயுள் எதிர்பார்ப்பு
(iv) சிசு மரண வீதம்
(v) தாய் மரண வீதம்

இவற்றின் எல்லா புள்ளி விபரங்களும் கிடைப்பதில்லை. கிடைக்கக் கூடிய புள்ளி விபரங்களிலிருந்து பின்வரும் ஆசிய நாடுகளின் ஒப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

| நாடுகள் | வைத்தியருக்கான ஆட்கள் தொகை | ஒரு கட்டிலுக்கான நோயாளி | ஆயுள் எதிர் பார்ப்பு |
|---|---|---|---|
| இலங்கை | 7172 | 340 | 66 |
| இந்தியா | 3600 | 1422 | 52 |
| மலேசியா | 3473 | 464 | 53 |
| பாகிஸ்தான் | 3480 | 1719 | 64 |
| பிலிப்பைன்ஸ் | 1136 | 689 | 62 |
| தாய்லாந்து | 6830 | 654 | 63 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. கல்வி :

கல்வித்துறையிலான செலவு அதிகளவு வருமானம் தரத்தக்கன என ஆராய்ச்சிகள் தெரிவித்துள்ளன. இந்தச் செலவுகளின் பெறுமான வீதங்கள் 6.6 வீதத்திலிருந்து (சிங்கப்பூர் 1966) மிகக் கூடுதலான வீதம் 8.2 (வெனிசுவெலா 1957) வரை அமைவதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. இதனுல் அபிவிருத்தியின் சமூகக் குறிகாட்டிகளாக கல்வி பற்றிய காட்டிகள் அமைகின்றன. பின்வருவன கல்வித் தராதரத்தைக் காட்ட உதவுகின்றன.

(i) கல்வியறிவு விகிதம்
(ii) பாடசாலைகளில் மாணவர் அனுமதிக்கப்பட்ட விகிதம்
(iii) பாடசாலையை விட்டு மாணவர் வெளியேறிய விகிதம்
(iv) ஆசிரியர் — மாணவர் விகிதம்

ஆசிய நாடுகளின் கல்வித்தரத்தை ஒப்பிடும்போது இலங்கை, பிலிப்பைன்ஸ் போன்றவற்றின் வாழ்க்கைத்தரம் உயர்வதை உணர முடிகிறது.

| நாடுகள் | ஆரம்பப் பாடசாலைகளில் பதிவுசெய்யப்பட்ட விகிதம் |
|---|---|
| இலங்கை | 100 |
| இந்தியா | 76 |
| மலேஷியா | 95 |
| பாகிஸ்தான் | 57 |
| பிலிப்பைன்ஸ் | 110 |
| தாய்லாந்து | 96 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி சமூக பொருளாதார புள்ளிவிபரம் 1984.

வயதுவந்தோர் கல்வியறிவு வீதத்தையும் ஒப்பிட்டு அபிவிருத்தி நிலையை ஒப்பிடலாம்.

| நாடுகள் | வயது வந்தோர் அறிவு வீதம் |
|---|---|
| கிறிஸ் | 81 |
| ஸ்பெயின் | 87 |
| யூகோஸ்லேவியா | 77 |
| இலங்கை | 80 |
| தாய்வான் | 54 |
| பிறேசில் | 61 |
| தியுனீசியா | 16 |

மூலம் : உலக வங்கி, உலக அபிவிருத்தி காட்டிகள் — 1979.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. வீட்டுவசதி :

மக்களின் வாழ்க்கைத்தரம் பாதுகாப்பான அமைதியான ஒழுங்கான வாழ்வுக்கு வழிவகுக்கும் வீட்டு வசதியிலும் தங்கியிருக்கும். இதனால் வீடுகள் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக உணரப்பட்டுள்ளன. இலங்கையில் இதனால்தான் ஒரு மில்லியன் வீடமைக்கும் திட்டம் ஒரு பிரதான செயல் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. வீட்டு வசதியைக் காட்டப் பின்வரும் விபரங்கள் உதவும்:

(i) சனத்தொகை அதிகரிப்பு வீதத்திற்கும் வீடுகளின் அதிகரிப்பு வீதத்திற்குமுள்ள தொடர்பு.

(ii) வீடுகளின் தன்மை: நிரந்தரமானது, தற்காலிகமானது.

(iii) அறைகளின் எண்ணிக்கை; தளப்பரப்பு.

(iv) அறை ஒன்றுக்கான ஆட்களின் தொகை.

(v) வீட்டின் அடிப்படை வசதிகள் உ+ம்: தண்ணீர் வசதி, மின்சாரம், மலசலகூட வசதிகள்,

இலங்கையின் வீடமைப்பு வசதிபற்றிப் பின்வரும் புள்ளி விபரங்கள் உதவுகின்றன. (1981இன் கணிப்பு அடிப்படையில் அமைந்தவை)

| துறைகள் | வீடுகளின் தொகை | சராசரியான வீட்டின் அறைகள் | அறை ஒன்றுக்கான சராசரி ஆட்கள் |
|---|---|---|---|
| நகரம் | 509,459 | 5.8 | 2.3 |
| கிராமம் | 2084,496 | 5.1 | 2.0 |
| பெருந்தோட்டம் | 217,459 | 4.4 | 2.6 |

இவை இலங்கையின் வாழ்க்கைத்தரம் ஓரளவு உயர்நிலையிலிருப்பதையே குறிக்கின்றன.

iv. சிசு மரண விகிதம் :

குறிப்பிட்ட ஆண்டில் ஒரு வயதினை அடையமுன்னர் இறந்த சிசுக்களின் எண்ணிக்கையினை அந்த ஆண்டில் பிறந்த உயிருள்ள சிசுக்களின் எண்ணிக்கையினால் பிரித்துப் பெறப்படுவதே சிசு மரண விகிதமாகும். இது பொதுவாக 1000 இன் ஒரு விகிதமாகக் கூறப்படும். இவ்விகிதத்தில் வீழ்ச்சி ஏற்படுதல் மக்கள் வாழ்க்கை நிலைமைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் ஒரு குறியீடாகக் கருதப்படும். இவ்வாறான சிசு மரண விகித வீழ்ச்சியானது ஒரு நாட்டு மக்களது சிறந்த சுகாதார பாதுகாப்பு நிலைமைகள் சிறந்த போஷாக்கு நிலைமைகள் என்பனவற்றைக் காட்டுவதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிய நாடுகளின் நிலையுடன் ஒப்பிடும்போது இலங்கையின் நிலை சிறப்பானதென்பதைப் பின்வரும் புள்ளி விபரங்கள் (1981) காட்டுகின்றன.

| நாடுகள் | சிசு மரணம் (1000 பேருக்கு) |
|---|---|
| இலங்கை | 44 |
| இந்தியா | 123 |
| இந்தோனீசியா | 93 |
| மலேஷியா | 25 |
| பிலிப்பைன்ஸ் | 55 |
| தாய்லாந்து | 55 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி சமூகப் பொருளாதாரப் புள்ளி விபரங்கள் 1984

V. எழுத்தறிவு:

ஒரு நாட்டு மக்களின் எழுதவும் வாசிக்கவும் கூடிய ஆற்றல் முக்கியமான அம்சமாகும். இதனால் அபிவிருத்தி மட்டத்தை அளவிட இதுவும் உதவுகிறது. சமூகத்துடனான தொடர்புகளை ஏற்படுத்தி அத் தொடர்பின் நலங்களை ஒருவர் அனுபவிக்க எழுத்தறிவு இன்றியமையாதது. இலங்கை மக்களின் எழுத்தறிவுத் தராதரத்தை ஆண் பெண் ரீதியாக இங்கு நோக்க முடிகிறது.

| வருடம் | ஆண் | பெண் | பொதுவான சராசரி |
|---|---|---|---|
| 1971 | 85 . 6 | 70 . 5 | 78.5 |
| 1981 | 90 . 5 | 82 . 4 | 86.5 |

ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் நிலை திருப்தியாக இருப்பதைப் பின்வரும் அட்டவணை காட்டும்.

| நாடுகள் | எழுத்தறிவு வீதம் |
|---|---|
| இலங்கை | 85% |
| இந்தியா | 36% |
| மலேஷியா | 60% |
| பாகிஸ்தான் | 24% |
| பிலிப்பைன்ஸ் | 75% |
| தாய்லாந்து | 86% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி சமூக பொருளாதார புள்ளி விபரங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**vi. பிறப்பிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் :**

நாட்டின் அபிவிருத்தியை அளக்கும்போது பிறப்பிலிருந்து எதிர் பார்க்கும் ஆயுட்கால அதிகரிப்பும் அதன் முன்னேற்ற நிலையை அளக் கும் அளவுகோலாகும்.

பின்வரும் அட்டவணை ஆயுட்கால அடிப்படையில் நாடுகளை ஒப்பிட உதவுகிறது :

| நாடுகள் | தலாவருமானம் US$ –1984 | சராசரி ஆயுள் எதிர்பார்க்கை (1984) | | |
|---|---|---|---|---|
| | | பெண்கள் | ஆண்கள் | சராசரி |
| பூட்டான் | — | 43 | 44 | 44 |
| எதியோப்பியா | 110 | 46 | 43 | 44 |
| இந்தியா | 260 | 55 | 56 | 56 |
| இலங்கை | 360 | 72 | 68 | 70 |
| குவைத் | 16,720 | 74 | 69 | 72 |
| ஜப்பான் | 10,630 | 80 | 75 | 77 |
| அமெரிக்கா | 15,390 | 72 | 80 | 76 |

மூலம்: World Development Report 1986.

**vii. மனித உரிமைகள் :**

நாடொன்று அபிவிருத்திப் பாதையில் முன்னேறும்போது மனித உரிமைகளைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானதாகும். தனிமனிதன் ஒவ்வொருவனும் தன் உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் சுதந்திர மாக இயங்கி தனது கடமைகளை நிறைவேற்றவும் இடமளிப்பதே இது வாகும். மனித உரிமைகள் ஒரு நாட்டின் எல்லா மக்களுக்கும் கிடையாவிடில் அதன் கருத்து அபிவிருத்தி நிலை முழுமையடையவில்லை என்பதேயாகும்.

**viii. பௌதிக வாழ்க்கைத்தர அட்டவணை :**

சமூக அபிவிருத்திக் குறிகாட்டிகள் சிலவற்றை இணைத்துக் கணிக் கப்பட்ட சுட்டெண் இதுவாகும். நாடுகள் பலவற்றை ஒப்பிடுவதற்குத் தலா வருமானம் குறைபாடுடையதாகக் கருதப்படுவதால் இச் சுட் டெண்களைப் பயன்படுத்துகின்றனர். இது 1977இல் இருந்து கணிக்கப் பட்டது. சிசு மரணவிகிதம் ஓராண்டு வயதிலிருந்து எதிர்பார்க்கப் பட்ட ஆயுட்காலம், எழுத்தறிவு என்பன உள்ளடக்கப்பட்டு இது கணிக்கப்பட்டது. பின்பு ஆயுட்காலத்துக்கும் பிறபபிலிருநது எதிர் பார்க்கப்பட்ட ஆயுட்காலமும் இணைக்கப்பட்டது. 1950—2000 வருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதத்துக்குரியதாக ஆகக் குறைந்தது 1955இல் இருந்து ஆகக்கூடிய எதிர்பார்க்கப்படும் பெறுமானத்தை 2000 ஆண்டுகளுக்குரிய 100ஆகக் கொள்ளப்பட்டு இது கணிக்கப்படுகின்றது. இதன்படி பொருளாதாரங்கள் ஒப்பிடப்படுவதுண்டு. இச் சுட்டெண் 90இலும் கூடுதலாக இருப்பின் அது வளர்ச்சியடைந்த நாடாகவும் 90லும் குறைவு படும்போது அபி விருத்தி அடைந்துவரும் நாடாகவும் கருதப்படுவதுண்டு. தலா வருமான அடிப்படையில் நோக்கும்போது பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் பார்க்கச் சிறப்பானதாக இலங்கை மதிப்பிடப்பட்டுள்ளது. ஏறக்குறைய வளர்ச்சியடைந்த நாடுகளின் தரத்தை அண்மிக்கின்றது.

| நாடுகள் | பௌதிக வாழ்க்கைத்தரச் சுட்டெண் |
|---|---|
| இலங்கை | 82 |
| இந்தியா | 43 |
| பாகிஸ்தான் | 38 |
| மலேசியா | 66 |
| பிலிப்பைன்ஸ் | 71 |

இலங்கையின் நிலைப்பாடு :

இதுவரை நாம் ஆராய்ந்த குறிகாட்டிகளின் அடிப்படையில் இலங்கையின் நிலையை மதிப்பிடுவது பொருத்தமானது. பல ஆசிய நாடுகளுடன் இலங்கையின் வாழ்க்கைத்தரத்தை ஒப்பிடுவதாகப் பல குறிகாட்டிகள் மேலே காட்டப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதங்கள் கடந்த காலங் களைவிட அண்மை ஆண்டுகளில் ஓரளவு திருப்தி தருவனவாகவேயுள்ளன. 1970இன் பிற்பகுதிவரை மெய்த் தலா வருமானம் 2.1%ஆல் மட்டுமே வருடாந்தம் அதிகரித்தது. 1970 — 76 காலத்தில் அது 1.3 வீத வரு டாந்த வளர்ச்சியை மட்டுமே காட்டியது. புதிய அரச கொள்கைகளின் விளைவாக 1978 — 83 காலப்பகுதியில் வருடாந்த மொத்த உள்நாட் டுற்பத்தி 6%த்திலும் கூடுதலாக இருந்தது. 1983 — 86 காலத்தில் இது சராசரியாக 5 வீத வருட வளர்ச்சியையே குறிக்கின்றது. 1986இல் அது 4% வளர்ச்சியையே காட்டுகின்றது. பொருளாதார வளர்ச்சியானது மிகவும் நம்பிக்கை தரத்தக்கவகையில் உறுதியாக இல்லை என்பதே இதன் அர்த்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயம் இலங்கையின் வருமானப் பரம்பலும் விரும்பத்தகாத போக்கில் அசைகின்றது. அதாவது வருமானச் சமமின்மை 1970இல் முடிந்த பத்தாண்டுகளை விட 1980இல் முடிந்த பத்தாண்டுகளுக்குள் கூடியுள்ளன.

| மொத்தச் சனத்தொகையின் வீதம் | வருமானப் பரம்பல் | |
|---|---|---|
| | 1970 | 1980 |
| 80% | 48% | 45.8% |
| 20% | 52% | 54.2% |

1963—73 காலப்பகுதியில் உயர்மட்ட 40%த்தினரின் தலா வருமானங்கள் 58 டொலரால் அதிகரிக்க தாழ்மட்ட 60%த்தினர் வருமானம் 101 டொலரால் அதிகரித்திருந்தது. ஆனல் 1970—80 காலப்பகுதியில் வருமான சமமின்மையினளவு கூடியிருப்பது விரும்பத்தகாதது.

ஆனலும் சமூக ரீதியான வாழ்க்கைத்தரம் உயர்வாக இருப்பதை அவதானிக்க முடியும். 1940இல் இலங்கை சுதந்திரம் பெற்றுலும் 1950ஐ எட்டிய காலப் பகுதியில் அடிப்படைத் தேவைகளைப் பெரியளவில் வழங்கத் தொடங்கிற்று. போதியளவான உணவு மான்யம், இலவசக் கல்வி, நாடுதழுவிய இலவச மருத்துவசேவை என்ற மூன்று பிரதான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்திபது. உலகரீதியில் அடிப்படைத் தேவைகள் நிறைவுசெய்தல் என்ற கொள்கையை முதலில் பின்பற்றியது இலங்கையே எனக் கூறமுடியும். தொடக்கத்தில் அரச செலவில் 50 வீதம்வரை இவற்றுக்குச் செலவிடப்பட்டது. அச் செலவு மொத்த தேசிய உற்பத்தியில் 10சத வீதம்வரை அமைந்தன. 1950–51இன் தேயிலை, இறப்பர் வியாபாரச் செழிப்பு செலாவணி உழைப்பை அதிகரித்ததால் இவ்வகைச் சமூகநலச் செலவுகளைத் தொடர்ந்தும் பேண முடிந்தது. இதனுல் சமூகநலரீதியான வாழ்க்கைத்தரம் மிகவும் உயர்வாகவே இருந்தது. தற்போதைய ஒரு மில்லியன் வீடமைக்கும் திட்டமும் இவ்வகை நடவடிக்கையைப் பூரணப்படுத்தும் செயலாகவே அமைகின்றது. இதன்படியே இலங்கை தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு என்றவகையில் ஓரளவு திருப்தியற்றதாயினும் சமூகநலத் துறைகளின் வரிவாக்கம் என்றவகையில் சிறப்பாகவே இருந்ததை சமூக அபிவிருத்திக் குறிகாட்டிகள் காட்டுவது திருப்தியளிப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 8

# சமநிலைத் தேசிய வருமானம்

நாடுகள் ஒவ்வொன்றும் சமநிலை மட்ட தேசிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முயல்கின்றன. ஏனெனில் மிகவும் திருப்திகரமான வருமான நிலையை அது குறிக்கும். தளம்பலற்ற வருமான அளவினை அது காட்டுகின்றது.

தேசிய வருமானம் சமநிலையை அடைவதனால் பின்வரும் நிலைமைகள் காணப்படும்.

(i) தேசிய வருமானம் மக்களின் நுகர்வு, முதலீடு என்பவற்றுக்குச் சமனாயிருக்கும்.

(ii) தேசிய வருமானம் தேசிய உற்பத்திக்குச் சமனாகும்.

(iii) தேசிய உற்பத்திச் செலவு உற்பத்தியாளர் வருமானத்துக்குச் சமனாயிருக்கும்.

எனவே வருமானம் உற்பத்திக்கும், செலவுக்கும் சமனாகும். சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை அடையாளம் காண்பதற்குப் பின்வரும் நிலைமைகள் உதவுகின்றன.

(i) நாட்டின் சேமிப்பு முதலீட்டுக்குச் சமனாகும்.

(ii) நிறை தொழில் வாய்ப்பு உருவாக்கவும் உதவும்.

(iii) பணவீக்கமோ பணச் சுருக்கமோ காணப்படமாட்டாது. அதாவது விலை மட்ட உறுதி பேணப்படும்.

இவ்வாறான நிலைமைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகவே அமைகின்றன. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அந்நாட்டில் தொழில் தேடுகின்ற அனைவருக்கும் தொழில் வழங்குவதற்கு வேண்டியளவு முதலிடக்கூடிய தொகையை நாட்டு மக்கள் சேமிக்கின்றனர். அந்தளவு சேமிக்கக்கூடியளவு உயர் வருமானம் கிடைக்கின்றது. அத்தகைய வருமான அளவே சமநிலைத் தேசிய வருமானம் எனப்படும்.

இந்த நிலையில் பணவெளியீடு ஏற்படுவதுமில்லை. இதனால் பண நிரம்பல் அதிகரிப்பதுமில்லை. எனவே பணவீக்கநிலை உருவாவதுமில்லை. இதனால் பணநிரம்பல் அதிகரிப்பதுமில்லை. அதேபோல் வருமானத்தில் ஒருபகுதி பதுக்கப்படுவதுமில்லை. இதனால் பணநிரம்பல் குறைக்கப்படுவதுமில்லை. அதன்வழி பணச்சுருக்கம் ஏற்படுவதுமில்லை. இவ்வாறான பணவீக்க, பணச்சுருக்க நிலைமைகள் இல்லாத நிலையே சமநிலைத் தேசிய வருமானம் எனப்படும். இதனை மறுபக்கத்திலுள்ள அட்டவணை விளக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வருடங்கள் | தேசிய உற்பத்தி 1 ( 2+3 ) | நுகர்வு 2 | சேமிப்பு 3 | முதலீடு 4 | உற்பத்தியாளர் செலவு 5 ( 1=5 ) | உற்பத்தியாளர் வருமானம் 6 ( 2+4 ) | பொருளாதார நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1970 | 310 | 300 | 10 | 20 | 310 | 330 | பணவீக்கம் |
| 1971 | 330 | 310 | 20 | 20 | 330 | 330 | சமநிலை |
| 1972 | 350 | 320 | 30 | 20 | 350 | 340 | பணச்சுருக்கம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1970**

இவ்வாண்டில் தேசிய உற்பத்திப் பெறுமதி உற்பத்தியாளர் செல வுக்குச் சமனுயுள்ளது. தேசிய உற்பத்தி தேசிய வருமானம் என்பதால் அத் தொகையை அவர்கள் நுகர்வாகவும் சேமிப்பாகவும் பயன்படுத் துவர்.

ஆனல் இவ்வாண்டில் முதலீட்டுச் செலவு 20 மில்லியனுயுள்ளது. சேமிப்பு 10 மில்லியன் மாத்திரமே. இதனுல் முதலீட்டுக்கென 10 மில்லியன் பணவெளியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே 10 மில்லிய ஞல் பணநிரம்பல் அதிகரிக்கின்றது. இது பணவீக்கத்தை உருவாக்கும். பணவீக்கம் பொருளாதாரத்தில் பாதிப்புகளை ஏற்படுத்திவிடும். இவ் வகையில் இந்நிலை விரும்பத்தகாதது. இவ் வருடத்தில் முதலீட்டை விடக் குறைவாகவே சேமிப்பு இடம்பெற்றுள்ளது. இதனுல் இவ் வாண்டுக்கான தேசிய வருமானமாகிய 310 மில்லியன் விரும்பத்தகாதது.

**1972**

இவ்வாண்டிலும் தேசிய உற்பத்திப் பெறுமதி உற்பத்தியாளர் செலவுக்குச் சமனுயுள்ளது. தேசிய உற்பத்தி தேசிய வருமானமாயிருப் பதால் அது நுகர்வு சேமிப்பு என்பவற்றுக்குச் சமனுயுள்ளது.

இவ்வாண்டில் சேமிப்பு 30 மில்லியனுக இருந்தபோதும் முதலீடு 20 மில்லியனுக மாத்திரமே யுள்ளது. இங்கு 10 மில்லியன் ரூபா பதுக்கப் பட்டுள்ளது. இதனுல் சுற்றேட்டத்தில் பண அளவு 10 மில்லியனுல் குறைந்துவிடுகிறது. எனவே பணநிரம்பல் குறையும்; அதன்வழியாகப் பணச்சுருக்கம் ஏற்படும். இது பொருளாதார நடவடிக்கைகளை ஒடுக்கிவிடும். இதன்படி இவ்வாண்டின் தேசிய வருமானமாகிய 350 மில்லியன் விரும்பத்தக்க நிலையைக் காட்டுவதாயில்லை. இவ் வருடத்தி லும் சேமிப்பு முதலீட்டுக்குச் சமனுக்கப்படவில்லை.

**1971**

இந்த ஆண்டில் தேசிய உற்பத்தியான 330 மில்லியன் உற்பத்தி யாளர் செலவுக்குச் சமனுயுள்ளது. தேசிய உற்பத்தி தேசிய வருமா னம் என்பதால் அத்தொகை நுகர்வு, சேமிப்பு என்பவற்றுக்குச் சமனுக வுள்ளது.

இவ்வாண்டில் நுகர்வில் செலவிடப்படாத தொகையான சேமிப்பு 20 மில்லியனுயுள்ளது. அத்தொகை முழுவதும் முதலீடாகியுள்ளது. அதாவது முதலீடு சேமிப்பிலும் குறைவாகவோ கூடுதலாகவோ இல்லை. தேவையான முதலீட்டுத் தொகை முழுவதையும் மக்கள் சேமித்துள்ள னர். இதனுல் பண அளவு கூடவும் இல்லை; குறையவும் இல்லை. இதன் காரணமாகப் பணவீக்கமோ, பணச்சுருக்கமோ ஏற்படாது.

இவ்வாறுன நிலையில் நிறைதொழில் கிடைக்கும். மெய் வருமான மும் உறுதிப்படுத்தப்படும். குறித்த இவ்வாண்டின் வருமான மட்ட மாகிய 330 மில்லியன் மிகச் சிறந்த ஒருநிலையைப் பிரதிபலிக்கின்றது. இதுவே சமநிலைத் தேசிய வருமானமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 9

# தேசிய வருமானத்தை அதிகரித்தல்

தேசிய வருமானம் ஒரு நாட்டினது மொத்த உற்பத்திப் பெறு மதியைக் குறிக்கின்றதென்பதை நாம் இதுவரை விளக்கியிருந்தோம். பொருளாதாரங்களின் இலட்சியம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை அதாவது பொருள்சார் வசதிகளை அதிகரிப்பதேயாகும். இதற்கு நாட்டில் கிடைக்கும் பொருட்கள், சேவைகளின் மொத்த அளவு உயர்தல் வேண்டும். இந்தவகையில், தேசிய உற்பத்தியைப் பெருக்குவதே பொருளாதார வளர்ச்சியாகும். எல்லா நாடுகளினதும் நோக்கம் குடித்தொகை வளர்ச்சியைவிட வேகம் கொண்டவகையில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதேயாகும்.

இவ்வாறான வளர்ச்சிக்கான எத்தனங்களே வளர்முக நாடுகளில் முக்கியமானவை. வளர்ச்சியை ஏற்படுத்துவதில் சமதர்ம நாடுகள் மத்திய திட்டமிடல் முறையைக் கையாளுகின்றன. நாடு முழுவதின் மூல வளங்கள் பற்றிய மதிப்பீடுகளையும், மக்கள் தொகை, மக்கள் தேவைகள் என்பவற்றின் அதிகரிப்புகளையும் கவனத்தில் எடுத்து அதன் அடிப்படையில் ஒவ்வொரு துறைக்குமான இலக்குகளை (Targets) திட்டமிடுகின்றனர். இவை தேசியரீதியில் அமைந்தனவாக இருக்கும். அரச கட்டுப்பாட்டில் நடைமுறைப்படுத்தப்படும். அரச தனியுரிமையில் இயங்கும் நிறுவனங்கள் இதில் பிரதான பங்கு வகிக்கும். எல்லா மக்களதும் நலனை உயர்த்தல் என்ற வகையில் உற்பத்தித்திறன் அடிப்படையில் வளர்ச்சிக்குரிய நடைமுறைகள் தீர்மானிக்கப்படும்.

ஆனால் முதலாளித்துவ நாடுகளில் இத்தகைய வளர்ச்சி என்பது சந்தைமுறையிலான கேள்வி நிரம்பலுடன் தொடர்புடையதான விலையினது செயற்பாட்டினால் ஏற்படுத்தப்படக்கூடியது என நம்புகின்றனர். அதுவே விலைப்பொறிமுறை என்கின்றனர். உச்ச இலாபத்தை அடைவதற்காகச் செலவுகளைக் குறைத்தல், வருமானங்களை உச்சப்படுத்தல் என்ற நடைமுறைகளில் கவனம் செலுத்தும் தனியாரே பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவேண்டியவர்களாயுள்ளனர். இவர்கள் நிறை போட்டி அடிப்படையில் இவ் வளர்ச்சியை ஏற்படுத்த முயல்கின்றனர். தற்போது அரசாங்கங்கள் இந்நாடுகளில் தலையிட்டு வளர்ச்சியை ஒழுங்குபடுத்த உதவுகின்றன. தேவையற்ற துறைகளில் வளங்கள் ஒதுக்கப்பட்டு அவை விரயமாவதைத் தடுக்கின்றனர். நுகர்பண்ட உற்பத்திப் பெருக்கம் முதலீட்டுப் பொருட்களின் உற்பத்தியைக் குறைக்காதவாறு பார்த்துக் கொள்கின்றனர். அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல், நீண்டகால உற்பத்திப் பெருக்கத்துக்குத் தடையான தொழில் நுட்பச் சிக்கல்கள் அதிகரிக்காதவாறும் பார்த்துக்கொள்கின்றனர். உற்பத்திப் பெருக்கத்தின் அடிப்படைச் சக்தியை வழங்கும் தொழிலாளர் சுரண்டப்படுவது அதிகரிக்காமலும், அவர்களுக்கு மனமுறிவு ஏற்படக்கூடிய நடவடிக்கைகளைத் தடைப்படுத்தவும் அரசாங்கங்கள் முயல்கின்றன. முன்பு அடிமை நாடுகளிலிருந்து பெறப்பட்ட வளங்கள் அந்நாடுகளின் வளர்ச்சியைத் தூண்டின. பின்பு அவை சுதந்திரம் பெற இவ்வளர்ச்சிகள் தடைப்பட்டன. எனினும் நவகாலனித்துவ நடைமுறைகள் மூலம் பிறநாட்டு வளங்களைத் தமது வளர்ச்சிக்குரியதாகப் பயன்படுத்தும் எத்தனங்களும் குறைந்துவிடவில்லை.

உலகில் அதிக எண்ணிக்கையுடையனவும், உலக குடித்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினைக் கொண்டவையுமான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் திட்டமிடல், விலைப் பொறிமுறை என்ற இரண்டையும் வெவ்வேறு விதங்களில் பயன்படுத்தி வளர்ச்சியடைய முயல்கின்றன. இவை தமது தேசிய உற்பத்தியை அதிகரிக்க மூலதனப் பற்றாக்குறை பெருந் தடையாகவுள்ளது என்ற கருத்து நிலவியது. அதன்படி மூலதனம் கூடினால் உற்பத்தி கூடும், உற்பத்தித் திறனும் உயரும், தொழில் வாய்ப்பும், வருமானமும் உயரும் எனப்பட்டது. ஆனால் அண்மைய காலங்களில் இக் கருத்து முழுமையாக ஏற்கப்படுவதில்லை. போதிய மூலதனத்தை மாத்திரம் கொடுத்தாலும் இவை தம் மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளுமா என்ற கேள்வி நிலவுகின்றது. திறமையான தொழில் முனைவோர் இதற்குத் தேவை எனப்படுகின்றது. உலக வியாபார நிலையும் சாதகமாக அமையவேண்டும் எனப்படுகிறது.

பொதுவாக பொருளாதார வளர்ச்சியை அதிகரித்துக்கொள்ள இன்று இந்நாடுகள் பின்வரும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும்.

(i) உள்நாட்டில் சேமிப்பு ஆற்றலையும், சேமிப்பு விருப்பத்தையும் உயர்த்துவதன்மூலம் மொத்த சேமிப்பை உயர்த்த வேண்டும். இதனால் முதலாக்கத்தைத் தூண்டுதல் வேண்டும்.

(ii) விவசாயத்துறையில் உள்ள வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ஆகியவற்றின் முழு இயலளவையும் பயன்படுத்த முயற்சித்தல் வேண்டும்.

(iii) கைத்தொழில்கள் சுதேசிய வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்தவும், கிடைக்கும் மனித வலுவை முழுமையாகப் பயன்படுத்தவும் கூடிய வகையில் வளர்க்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலாவணி நெருக்கடியுடன் தொடர்பற்ற முறையிலும் உற்பத்தித்திறன் உயரக் கூடிய முறையிலும் இவை ஒழுங்கு படுத்தப்படல் வேண்டும்.

(iv) இயன்றளவு நாட்டின் வலு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். நீர்மின்வலு, நிலக்கரி, மரம், ஞாயிற்றுச்சக்தி போன்ற வற்றை விருத்தியாக்க வேண்டும். வலு விரயத்தையும் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

(v) நாடுகள் பணப் பொருளாதாரங்களாக இருப்பதால், மொத்த உற்பத்தியைப் பெருக்க உதவக்கூடிய முறையில் நாணய, நிதிக் கொள்கைகளைத் தீர்மானிக்க வேண்டும். இவற்றைச் செயற்படுத்தக் கூடிய விதத்தில் பணச்சந்தை, மூலதனச் சந்தை என்பவற்றையும் விரிவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச நிதி நிறுவனங்களுடனுன தொடர்புகளை யும் சீராகப் பேணுதல் வேண்டும்.

(vi) நாடுகள் திறந்த பொருளாதாரங்கள் என்பதன் அடிப்படை யில் சென்மதி நிலுவையைச் சீராக்க முயற்சித்தல் வேண்டும். வெளிநாட்டு வியாபாரம், முதலீடுகள், கடன்கள், நன்கொடை கள் போன்றவற்றில் தெளிவான கொள்கைகளும், முரண் பாடற்ற நடைமுறைகளும் பேணப்படல் அவசியம்.

(vii) நாட்டின் குடித்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதி லும், " உபயோகமான குடித்தொகை"யாக மாற்றுவதி லும் கவனம் செலுத்த வேண்டும். ஊழியப்படை திறமையாகப் பயிற்றப்படவேண்டும். மனிதவலுப் பயன்பாடு திட்டமிடப் படல் வேண்டும். மனித முதலீடுகளாக கல்வி, சுகாதாரம், போஷாக்கு, தொழிற்பயிற்சி தொடர்பான செலவுகள் ஒழுங்கு படுத்தப்படல் வேண்டும். ஊழிய மனோபாவம், கடின உழைப் புக்கு ஏற்றதாயும், தொழில் மகத்துவத்தை ஏற்பதாயும் கட்டியெழுப்பப்படல் மிகவும் அவசியம்.

(viii) நாட்டு மக்கள் அனைவரும் உற்பத்தித் திறனற்ற வகையில் தம் சேமிப்புக்களை முடக்குவதை விலக்கவேண்டும். தங்க நகைகள், மத நிறுவனங்கள், ஆடம்பர பாவனைப் பொருட்க கள் தொடர்பான செலவினங்களை ஒழுங்குபடுத்த வேண்டும். வசிப்பிட வீடுகள் தேவைக்கேற்ப திட்டமிட்டமுறையில் மாத்திரம் நிர்மாணிக்கப்படுதல் வேண்டும். தொழிற்சாலைகள், அணைக்கட்டுக்கள், பாதைகள், பயிற்சி நிலையங்கள் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றின் நிர்மாணம், பராமரிப்பு என்பன அவ்வப் பகுதி சுயவிருப்பு நிறுவனங்களிடம் (Volunteer Organisations) விடப்படல் முடியும். ஆனல் நேரிய மேற்பார்வை, வழிகாட்டல் தேவை.

(ix) அரசு திறமையற்ற நிர்வாக முறையைக் கொண்டிருப்பின் சில துறைகளை அரசு தனியாரிடம் விட்டுவிடலாம். ஆனல் அவர்கள் நேர்மையாக மேற்பார்வை செய்யப்படல் மிகவும் அவசியம். தேசிய உணர்வுள்ள சுதேசிய கூட்டு நிறுவனங்களையும், கூட்டுப்பண்ணைகளையும் மக்கள் மட்டத்தில் உருவாக்க வேண்டும்.

(x) இவ்வாருன இலக்குகளைக்கொண்டதும், சாத்தியமாகக்கூடியதுமான இடைத்தர, குறுங்கால திட்டங்களை அரசு தயாரித்து விரயமின்றி முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சித்தல் வேண்டும்.

இவ்வாருன எல்லா நடைமுறைகளும், சமகாலத்தில் கடினமானவையாக இருப்பினும் இலங்கை போன்ற நாடுகள் இவற்றை நடைமுறைப்படுத்தினுற்ருன் தேசிய வருமானத்தை அதிகரித்தல் சாத்தியமாகும். அதாவது பொருளாதார வளர்ச்சி என்பது சாத்தியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 10

# இலங்கையின் தேசிய வருமானம்

இலங்கையின் தேசிய வருமானக்கணிப்பு தற்போது இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுகிறது. வருடாந்த மத்திய வங்கி அறிக்கையிலும் பொருளாதார மீளாய்விலும் தேசிய வருமானவிபரங்களை மத்திய வங்கி பிரசுரிக்கின்றது. உற்பத்தி வழியிலும், செலவு வழியிலும் தேசிய வருமானம் தற்போது கணிக்கப்படுகிறது. முதன் முதலில் இலங்கையின் தேசிய வருமானக் கணிப்பை மேற்கொண்ட திரு. கே. வில்லியம் என்பாரின் கணிப்பிலிருந்து சில திருத்தங்களுடன் இதைச் செய்து வருகின்றது. அண்மைக் காலங்களில் இலங்கைக் குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விபரத் திணைக்களம் தானாகவே தரவுகளைத் திரட்டி வருமான வழியிலும் தேசிய வருமானக் கணிப்பீட்டைச் செய்து வருகின்றது. ஆனால் இவ் வருமான வழியிலான கணிப்புக்குத் தேவையான தகவல்களை மத்திய வங்கி வழங்கவில்லை.

**கணிப்பு முறைகள் :**

இலங்கையில் தற்போது உற்பத்தி, செலவு வழிகளில் மத்திய வங்கியும், வருமான வழியில் குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விபரத் திணைக்களமும் தேசிய வருமானத்தைக் கணித்து வருகின்றன. அவற்றைப் பின் வருமாறு நோக்குவோம்.

**(அ) உற்பத்தி வழியில் :**

பல்வேறு உற்பத்திச் செயல் முறைகளிலிருந்து உண்டாகும் முடிவுப் பொருள்களின் கூட்டுத்தொகையைக் கணித்தல் இதுவாகும். இவ்வாறு கிடைக்கும் பெறுமதி தேசிய உற்பத்தியாகும். இது தற்போது 1982ஆம் ஆண்டை அடியாண்டாகக் கொண்டு கணிக்கப்படுகிறது. பின் வரும் காரணங்களுக்காக 1982ஆம் ஆண்டு அடியாண்டாகத் தெரிவு செய்யப்பட்டது.

(i) இவ்வாண்டில் நாட்டின் சகல துறைகள் பற்றிய அண்மைய விபரங்களைக் காட்டும் நுகர்வோர் சமூகப் பொருளாதார ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டமை.

(ii) 1977 ஜூலை 22இல் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசின் தாராள கொள்கையின் விளைவுகள் பொருளாதாரத்தில் துலங்கிய வருடமாக இது காணப்பட்டமை.

உற்பத்திவழியில் கணிக்கும்போது முதலாம்துறை, இரண்டாம்துறை (துணைத்துறை), மூன்றும் துறை (சேவைத்துறை) என மூன்றாக நோக்கப்படுகிறது. இப்பாகுபாடு முறையே விவசாயம், கைத்தொழில், சேவைகள் துறைகளைக் குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1986ஆம் ஆண்டுக்குரிய நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி பற்றிய கீழ்வரும் புள்ளி விபரங்கள் இதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

(மில்லியன் ரூபாவில்)

| | துறைகள் | பெறுமதி | சதவீதம் |
|---|---|---|---|
| | முதலாம் துறை : | | 26·0 |
| 1. | வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்தொழில் | 29106 | 26·0 |
| | 1.1 வேளாண்மை | 25037 | 22·4 |
| | 1.1.1 தேயிலை | 2723 | 2·4 |
| | 1.1.2 இறப்பர் | 856 | 0·8 |
| | 1.1.3 தெங்கு | 3935 | 3·5 |
| | 1.1.4 நெல் | 6613 | 6·0 |
| | 1.1.5 ஏனையவை | 10910 | 9·7 |
| | 1.2 காட்டுத் தொழில் | 1958 | 1·7 |
| | 1.3 கடற்றொழில் | 2111 | 1·9 |
| | இரண்டாம் துறை : | | 26·6 |
| 2. | சுரங்கத்தொழிலும், கல்லுடைத்தலும் | 2615 | 2·3 |
| 3. | தயாரிப்புத் தொழில் | 17558 | 15·7 |
| | 3.1 ஏற்றுமதி பதனிடல் | 3225 | 2·9 |
| | 3.2 தொழிற்கூட கைத்தொழில் | 12108 | 10·9 |
| | 3.3 சிறு கைத்தொழில் | 896 | 0·7 |
| | 3.4 ஏனையவை | 1329 | 1·2 |
| 4. | கட்டிடவாக்கம் | 8191 | 7·3 |
| 5. | மின்வலு, வளி, நீர், நலத்துறைப்பணிகள் | 1406 | 1·3 |
| | மூன்றும் துறை : | | 49·8 |
| 6. | போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் | 13377 | 12·0 |
| 7. | மொத்த, சில்லறை வர்த்தகம் | 23821 | 21·3 |
| | 7.1 இறக்குமதிகள் | 9468 | 8·5 |
| | 7.2 ஏற்றுமதிகள் | 2462 | 2·2 |
| | 7.3 உள்நாட்டு | 11891 | 10·6 |
| 8. | வங்கித்தொழிலும், காப்புறுதியும், உண்மைச் சொத்தும் | 5174 | 4·6 |
| 9. | குடியிருப்புக்களின் உடைமை | 3497 | 3·3 |
| 10. | பொது நிர்வாகமும், பாதுகாப்பும் | 5274 | 4·8 |
| 11. | பணிகள் (வேறு எங்கும் சேராதவை) | 4242 | 3·8 |
| 12. | மொத்த உள்நாட்டு உற்பத்தி | 114261 | 102·4 |
| 13. | வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருவாய் | (2696) | (2·4) |
| 14. | மொத்த தேசிய உற்பத்தி | 111565 | 100·0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) வருமான வழியில் :

இலங்கை குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களம் வருமான வழியிலான தேசிய வருமானக் கணிப்பீடு ஒன்றை வெளியிடுகின்றது. மத்திய வங்கி ஆண்டறிக்கையில் இக் கணக்குப் பிரசுரிக்கப்படுவதில்லை. மத்திய வங்கி தரவுகளை வழங்காதபடியால் அதன் அங்கீகாரம் பெற்றதாக இதைக் கருத நியாயமில்லை.

1983 மார்ச் 30ஆம் திகதிப்படியான குடிசன மதிப்பீட்டுப் புள்ளி விபரத் திணைக்களத்தின் வெளியீட்டின்படி கீழ்வரும் கணக்குத் தரப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மில்லியன் ரூபாவில் உள்ளன. இவை 1982ஆம் ஆண்டுக்குரிய வருமான மதிப்பீடு ஆகும்.

| | விடயங்கள் | மில்லியன் ரூபாய் |
|---|---|---|
| 1. | அலுவலர்க்கான கொடுப்பனவு | |
| | 1.1 மத்திய அரசும் உள்ளூராட்சி மன்றமும் | 4628.6 |
| | 1.2 தனியார் துறை | 38364.5 |
| | மொத்தம் | 42993.7 |
| 2. | கூட்டுத்தாபனமல்லா முயற்சிகளின் வருமானம் | 33378·0 |
| 3. | உடைமைகளின் வருமானம் | |
| | 3.1 வாடகை | 2019.8 |
| | 3.2 வட்டியும், இலாபமும் | 50.0 |
| | மொத்தம் | 2069.8 |
| 4. | கூட்டுத்தாபனங்களின் ஒதுக்கம் | |
| | 4.1 அரச கூட்டுத்தாபன வருமானம் | 4752·0 |
| | வட்டி, இலாபம் | (50.0) |
| | நேர்வரி | (2627.0) |
| | மொத்தம் | 7429.0 |
| 5. | கூட்டுத்தாபனங்களிலிருந்து நேர் வரி | |
| | 5.1 வரி | 2376.0 |
| | 5.2 வருமானவரி — மேலதிக அறவீடு | 251.0 |
| | 5.3 இலாபவரி (மிகை) | — |
| | 5.4 இலாபவரி | — |
| | மொத்தம் | 2627.0 |
| 6. | அரச பொது வருமானம் | 447.7 |
| 7. | கழிக்கப்பட்ட அரச கடன் வட்டி | 5561.8 |
| 8. | நுகர்வுக் கடன் வட்டி | 29.5 |
| 9. | தேசிய வருமானம் | 77999.3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) செலவு வழியில் :

இலங்கை மத்திய வங்கி செலவு வழியிலான கணிப்பீட்டைத் தயாரித்து தனது ஆண்டறிக்கையில் வருடாந்தம் வெளியிடுகிறது.

தனியார் நுகர்வு, அரச நுகர்வு, உள்நாட்டு வெளிநாட்டு முதலீடு என்பன முடிவடைந்த உற்பத்திகளான செலவுகளின் கூட்டுத் தொகையை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகின்றன.

மொத்தத் தேசிய செலவு நடைமுறைச் சந்தை விலைகளினடிப் படையில் கணிக்கப்படும். 1986ஆம் ஆண்டுக்கான தேசிய செலவுக் கணிப்பீடு பின்வருமாறு தரப்படுகின்றது. இவை அனைத்தும் மில்லியன் ரூபாவில் உள்ளன.

| | விடயங்கள் | மில்லியன் ரூபாவில் |
|---|---|---|
| 1. | தனியார் நுகர்வு | 139,406 |
| | 1.1 பொருட்கள் ஆளணியில்லா சேவைகள் இறக்குமதிகள் | 29,406 |
| | 1.2 உள்நாட்டு உற்பத்திப் பொருட்களும் சேவைகளும் | 110,000 |
| 2. | அரசின் நுகர்வு | 18,480 |
| | 2.1 பொருட்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு : மத்திய அரசு | 16,853 |
| | 2.2 பொருட்கள் சேவைகள் மீதான நடைமுறைச் செலவு : உள்ளூராட்சி மன்றம் | 1,627 |
| 3. | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | 42,326 |
| | 3.1 அரசினதும் அரசதொழில் முயற்சிகளினதும் | 9,634 |
| | 3.2 அரச கூட்டுத்தாபனங்கள் 3.3 தனியார்துறை | 32,692 |
| 4. | இருப்புக்களின் மாற்றங்கள் | 137 |
| | 4.1 அரசும் அரச தொழில் முயற்சியும் | (50) |
| | 4.2 அரச கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும் | 187 |
| 5. | மொத்த உள்நாட்டுச் செலவு (1+2+3+4) | 200,349 |
| 6. | வெளிநாட்டுத் தேசிய முதலீடு | (11,462) |
| 7. | பன்னாட்டு நன்கொடைகளினதும், மாற்றல்களினதும் தேறிய பெறுகைகள் | (13.239) |
| 8. | மொத்த தேசிய முதலீடு (5+6—7) | 175,648 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணிப்பின் குறைபாடுகள் :**

1. **புள்ளிவிபரங்களைப் பெறுதல் :**

தேசிய வருமானக் கணிப்புப் பற்றிய புள்ளி விபரங்களைச் சரியாகவும், தொடர்ச்சியாகவும் பெறுவது கடினமாயுள்ளது. இவை பின்வரும் முறைகளில் அமைகின்றன.

(i) முறைமையற்ற பகுதிகள் மிகவும் அதிகமாக உள்ளன. அவை பற்றிய கணக்குகள் இல்லை. கிராமிய மருத்துவம் நடைபாதை வியாபாரம் போன்றன அதிகளவில் வளர்ச்சி அடைந்துள்ளன. ஆனால் எவ்வித விபரங்களும் அவைபற்றிக் காணப்படுவதில்லை.

(ii) முறையான பகுதிகளில்கூட விபரங்கள் மிகவும் ஒழுங்காகத் திரட்டப்படுவதில்லை. இதனால் இவற்றின் விபரங்களினடிப் படையில் மதிப்பீடு செய்ய முடிவதில்லை.

(iii) பல தனிநபர்கள், நிறுவனங்கள் வருமான வரி நோக்கங்களுக் குப் பயந்து தமது வருமான விபரங்களைச் சரியாக வெளியிட விரும்புவதில்லை.

(iv) புள்ளி விபரங்களைச் சேகரிக்கும் நிறுவனங்களின் நிதிவசதிகள் ஆளணி வசதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதும் புள்ளி விபரங் கள் கிடைப்பதற்குத் தடையாகவுள்ளன.

2. **பெறுமதிகளைச் சரியாகக் கூட்டுதல் :**

இலங்கையில் சேவைகளின் பெறுமதிகள் சரியாகக் கணிக்கப்படுவ தில்லை. பகுதி நேர வேலையில் ஈடுபடுவோர், வீட்டுவேலையாட்களின் வருமானங்கள் போன்றன மிகச் சரியாகக் கணிக்கப்படுவதில்லை. கிராமப் புறங்களில் இன்றும் சிலர் தமது வேதனங்களைப் பண்டங்களாகவே பெற்றுவருகின்றனர். அவை கணிப்பில் உள்ளடக்கப்படுவதில்லை.

3. **பெறுமானத் தேய்வு :**

இலங்கை மத்திய வங்கி பெறுமானத் தேய்வு பற்றிய கணிப்பீடு களைச் செய்ய முடியாதுள்ளது. முதற் சொத்துக்களின் பெறுமானத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய்வு கணிக்கப்படுவதில் உள்ள கடினத்தன்மை இதற்குக் காரணமாகும். அவைபற்றி பின்வருவன கவனத்திற்குரியன :

(i) விவசாயத்துறையில் ஒழுங்கு முறைகள் இல்லாததாலும், குடும்பத்தன்மை மிகுந்திருப்பதாலும் அங்கு பெறுமதி இழப்புக்கள் சரியாகக் கணிக்கப்படுவதில்லை.

(ii) கைத்தொழிற் துறையில் ஒழுங்காகக் கணிக்கப்படலாமெனினும், சில உபகரணங்கள், போக்குவரத்து வாகனங்கள் போன்றன உற்பத்தித் தொடர்பில்லாமலும் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றின் பெறுமதி இழப்புக்களை உற்பத்தியுடன் தொடர்பு படுத்தாது தவிர்ப்பது கடினமாயுள்ளது.

(iii) நிலத்தின் செழிப்பின் குறைவு, ஊழிய வினைத்திறன் வீழ்ச்சி பற்றிய கணிப்பீடுகளுக்கான மிகவும் திருத்தமான புள்ளிவிபர முறைகள் கையாளப்படாமல் இருப்பதும் ஒரு குறைபாடாகும்.

இவற்றைவிட ஏற்கனவே நாம் கவனித்த தேசியவருமானக் கணிப்புப் பிரச்சினைகளும் இலங்கைக்குப் பொருந்தக்கூடியனவாயுள்ளன.

## பொருளாதார கட்டமைப்பும் மாற்றமும் :

ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்திக்குஆன ஒவ்வொரு துறையினதும் சதவீதப் பங்கு எவ்வாறுள்ளது என்பதே பொருளாதாரக் கட்டமைப்பு ஆகும். சார்பு ரீதியில் விவசாயம், கைத்தொழில், சேவைகள் எனபன எவ்வாறு வளர்ச்சியுற்றுள்ளன என்பதை இது விளக்கும். இவ்வாறன துறைகளின் சதவீதப்பங்கு மாறுவது பொருளாதார முன்னேற்றங்களைக் காட்டுவதாகும். அதேபோல் ஒவ்வொரு துறையிலும் கிடைக்கும் சார்புரீதியிலான தொழில்வாய்ப்பு விகிதமும் அதன் மாற்றமும் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் காட்டும்.

இதன்படி 1959, 1970, 1985 காலப்பகுதிகளில் ஏற்பட்ட கட்டமைப்பு மாற்றங்களைக் கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது. நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தி கூடினாலும் சதவீதப் பங்குகளில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் பொருளாதார கட்டமைப்பும் — மாற்றங்களும்

| | துறைவகைப் படியான சதவீதப் பங்கு | | |
|---|---|---|---|
| | 1959 | 1970 | 1985 |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் — | 39.1 | 28.8 | 26.6 |
| 2. சுரங்கமும் கல் அகழ்வும் — | 0.5 | 0.7 | 2.3 |
| 3. தயாரிப்புத் தொழில் — | 11.6 | 16.9 | 15.1 |
| 4. கட்டிடவாக்கம் — | 4.8 | 5.7 | 7.6 |
| 5. மின்வலு, வாயு, நீர் நலத்துறைப் பணிகள் — | 0.2 | 0.8 | 1.2 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப் படுத்தல் தொடர்பூட்டல் — | 9.2 | 9.7 | 12.1 |
| 7. மொத்த சில்லறைவர்த்தகம் — | 13.6 | 19.5 | 21.5 |
| 8. வங்கி, காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள் — | 0·9 | 1.2 | 4.7 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை — | 3.4 | 3.1 | 3.2 |
| 10. பொது நிர்வாகமும், பாதுகாப்பும் — | 5.1 | 4.0 | 4.2 |
| 11. வேறுபணிகள் — | 12.3 | 11.2 | 4.2 |
| 12. மொத்த உள்நாட்டுஉற்பத்தி — | —— | —— | —— |
| 13. வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானம் — | 0.6 | 1.7 | 2.7 |
| 14. மொத்த தேசிய உற்பத்தி — | 100.0 | 100.0 | 100.0 |
| மொத்த தேசிய உற்பத்தி (மில்லியன் ரூபாவில்) — | 5,893 | 12,967 | 106,733 |

இந்த வகையில் முதலாம் துறை, இரண்டாம் துறை, சேவைகள் துறை என்ற அடிப்படையில் இவற்றின் சதவீதப் பங்கை பின்வருமாறு தொகுத்து நோக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| துறைகள் | | சதவீதப் பங்கு | | |
|---|---|---|---|---|
| | | 1959 | 1970 | 1985 |
| முதலாம் துறை | — | 39.1 | 28.8 | 26.6 |
| இரண்டாம் துறை | — | 17.1 | 24.1 | 26.2 |
| சேவைகள் துறை | — | 43.8 | 47.1 | 47.2 |
| மொத்தம் | — | 100.0 | 100.0 | 100.0 |
| தயாரிப்புத் தொழில் | — | 11.6 | 16.9 | 15.1 |

**விவசாயம் :**

இது முதற்துறையாகும். இலங்கையின் வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் என்பன இதில் அடங்கும். விவசாயம் என்பது கிராமிய விவசாயமான சிறு நில விவசாயத்தையும் பெருந் தோட்ட விவசாயமான பெரு நில விவசாயத்தையும் குறிக்கும். இவற்றில் முறையே நெல், சிறு தானியங்கள், பண்ணை உற்பத்தி என்பனவும், மீன்பிடியும் கிராமிய விவசாயத்தில் முக்கியமானவை. 23,500க்கு மேற்பட்ட கிராமங்களில் 10,000 கிராமங்கள்வரை மீன்பிடிக் கிராமங்களாகும். இதனால் மீன் பிடியும் முதன்மையானது. பெருந்தோட்ட விவசாயத்தில் தேயிலை, இறப்பர், தெங்கு, வாசனைத் திரவியங்கள் என்பன குறிப்பிடத் தக்கன. இலங்கையில் 1.8 மில்லியன் விவசாயிகள் உள்ளனர். இலங்கையின் மொத்த தொழில் வாய்ப்பில் 50%வரை இத்துறையால் வழங்கப் படுகிறது.

இலங்கையின் பிரதான உணவு வழங்கும் துறையாகவும், செலாவணி உழைக்கும் துறையாகவும் இது காணப்படுகிறது. இறக்குமதிப் பிரதியீட்டுத் துறையாகவும் இது வளர்க்கப்பட வேண்டும் என்பதோடு, இத்துறையின் வருமானம் உயர்ந்தால்தான் எதிர்கால கைத்தொழிற் துறைக்கான சந்தையாக இத்துறை வளர முடியும்.

இத்துறையின் மாற்றங்களுக்கு இத்துறை சார்ந்த பாரிய செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமை பிரதான காரணமாகும். சுதந்திரத்தின் பின் இத்துறையில் கல்லோயா, உடவளவை துரித மகாவலி போன்ற பாரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

1978-84 காலப் பகுதியில் இத்துறை 4% வளர்ச்சியைப்பெற்றுள்ளது. நெல்லும் ஏனைய உபஉணவும் சராசரியாக 4.8 வீத வளர்ச்சியை அடைந்தன. பெருந்தோட்ட ஏற்றுமதி விவசாயத் துறை சராசரியாக ஒரு விகித வளர்ச்சியையே எய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துறையின் மொத்தப் பெறுமானம் கூடியே வந்துள்ளது. ஆனல் சதவீதப் பெறுமானம் படிப்படியாகக் குறைந்துள்ளது. இது விரும்பத் தக்க வளர்ச்சியைக் காட்டும் மாற்றமாகும். இதை 1959, 1970, 1985 புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

கைத்தொழில் :

இது துணைத்துறையாகக் கருதப்படுகிறது. இதில் சுரங்கம், கல் அகழ்வு, தயாரிப்பு, கட்டிடவாக்கம், மின்சாரம், நீர், வாயு போன்ற துறைகள் உள்ளடக்கப்படும். தேயிலை, றப்பர், தெங்கு பதப்படுத்தும் தொழில்கள் இதில் முக்கியமானவை. தொழிற்சாலைக் கைத்தொழில்கள் தனியார் துறையிலும், அரசகூட்டுத் தாபனங்களிலும் காணப்படுகின்றன.

இலங்கையில் தொழில் வாய்ப்பை வழங்கவும், செலாவணி உழைக்கவும் இத்துறை விரும்பப்படுவதாகும். விவசாயத்துறைக்கான துணைப் பொருட்களை வழங்குவதில் இதன் பங்கு வளர்ச்சியடையவில்லை. பாவனைப் பொருட்களை வழங்கும் துறை என்ற வகையிலும் ஓரளவு உள்ளீடுகளைத் தருவது என்ற வகையிலும் இது முக்கியமானது.

உறுதியற்ற முறையில்தான் கைத்தொழில் வளர்ச்சிபெற்று வந்துள்ளது. 1950களின் முற்பகுதியிலும் 1960களின் தொடக்கத்திலும் கைத்தொழில் முயற்சிகள் தொடங்கப்பட்டன. இவை இறக்குமதிப் பதிலீட்டு அடிப்படையில் தொடங்கப்பட்டவை. அந்நிய செல்வாக்குக் குரிய துறைகளுக்கே உரியனவாக அமைந்தன. பெரிதும் ஆடம்பர நுகர் பண்டங்களை உருவாக்கின. இவற்றின் தொழில் நுட்பமும் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. முதலில் அரச வரிச் சலுகைகளைப் பயன்படுத்தி அதிக இலாபம் உழைக்கும் தனியார் கைத்தொழில்களாக மாத்திரமே இவை வளர்ச்சி பெற்றன. இலங்கையின் செலாவணி நெருக்கடிகளுடன் இணைந்த வகையில் எழுபதுகளின் முற்பகுதியில் இவற்றின் வளர்ச்சி பாதிப்புற்றது. இவற்றின் உற்பத்தித்திறனும் மிகவும் குறைவாக இருந்தது 1977இன் பின் தாராளக் கொள்கையும் வெளிநாட்டு முதலீடுகளும் இத் துறையில் மாற்றங்களை ஏற்படுத்தின.

இத்துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 17 வீதத்தை உருவாக்கித் தருகின்றது. மொத்த தேசிய உற்பத்தியில் இவற்றின் பங்கு படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது. எனினும் தனியாகத் தயாரிப்புத்துறையை நோக்கினல் உறுதியற்ற வளர்ச்சிப் போக்கே தென்படுகின்றது. தயாரிப்பு கைத்தொழில்கள் 1978—84 காலப்பகுதியில் வருடாந்தம் 5 வீத வளர்ச்சியை மட்டுமே அடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில் துறையின் மொத்தப் பெறுமதி கூடிச் செல்வதோடு சதவீதப் பங்கும் அதிகரித்தல் வேண்டும். இலங்கையின் இத்தகைய மாற்றமும் திருப்திகரமானதே.

சேவைகள் துறை :

சேவைகள் துறை பொருளாதாரத்தின் மூன்றாம் துறையாகும். இது பொருளாதாரத்தின் பிற்புலத்துறை எனவும் அழைக்கப்படும். மக்களின் வாழ்க்கைத்தரத்தை இத்துறை நேரடியாக நிர்ணயிக்கின்றது. அத்துடன் விவசாயம் கைத்தொழில் போன்ற துறைகளின் வளர்ச்சிக்கு இதுவே பிற்புலமாயுள்ளது.

இத் துறையில் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல், மொத்த, சில்லறை வியாபாரம், வங்கி, காப்புறுதி உண்மைச் சொத்துக்கள், குடியிருப்புக்களின் உடைமை, பொதுநிர்வாகம், பாதுகாப்புப் போன்ற பலவும் அடங்கும். இத்துறையின் மொத்தப் பெறுமதி, சதவீதப் பங்கு என்பன உயருதல் வேண்டும். இலங்கையில் அதேவகை மாற்றம் ஏற்பட்டுள்ளது. 1959இல் இதன் பங்கு 43.8 வீதமாயிருந்தது. 1970இல் 47.1 வீதமாக உயர்ந்தது. 1985 காலப்பகுதியில் சேவைகள் துறையின் மொத்தப் பெறுமதி குறிப்பிடத்தக்களவில் கூடியபோதும் சதவீதப் பங்கு சிறிதளவால்தான் அதிகரித்து 47.2 வீதமாக அமைந்தது.

இலங்கையில் பொருளாதாரம் உள்ளமைப்புத்துறை என்றவகையில் இத் துறையின் வளர்ச்சி முக்கியமானது. அதிக தொழில் வாய்ப்பு வழங்கும் துறை என்ற வகையிலும் இது முக்கியமானது.

போக்குவரத்துத் துறையில் 40,000 கிலோமீற்றர் வீதிகள் காணப்படுகின்றன. 20,000 கிலோமீற்றர் பெருந் தெருக்களையும், மிகுதி, துணைவீதிகளையும் பெருந்தெருக்கள் திணைக்களம் பராமரிக்கிறது. 1500 கிலோ மீற்றர்வரையிலான புகையிரதப்பாதை, ஒரு சர்வதேச விமான நிலையம், ஒரு பிரதான, மற்றும் இரண்டு சிறிய துறைமுகங்களும் காணப்படுகின்றன. தனியார்துறையும் அரச துறையும் இதில் ஈடுபட்டுள்ளன. இத்துறையின் அபிவிருத்திக்காக ஐந்துவருடத் திட்டம் ஒன்று ரூ. 5000 மி செலவில் வகுக்கப்பட்டுள்ளது. வீதிப் போக்குவரத்து மொத்த தொன்–கிலோமீற்றரில் 90 வீதத்தையும் பயணிகள்–கிலோ மீற்றரில் 80 வீதத்தையும் கொண்ட பிரதான துறையாகும். தனியார் பேருந்து 1979 வரை காணப்படவில்லை. பின்பு வளர்ச்சி பெறலாயிற்று. மொத்தப் பயணிகள் கிலோ மீற்றரில் 30 வீதத்தைக் கொண்ட இத்துறையில் 5000 தனியார் பேருந்துகள் உள்ளன. 10,000 சிறிய நடுத்தர வாகனங்களும் காணப்படுகின்றன. நிறை போட்டியுடைய இத்துறை அண்மைக் காலத்தில் முக்கியத்துவம் பெற்றதாயுள்ளது.

தொடர்பூட்டல் தராதரம் மிகவும் குறைவானதாகும். 100பேருக்கு 0.69 தொலைபேசிகள் என்ற விகிதத்திலேயே தொலைபேசிப் பரம்பல் அமைந்துள்ளது. இது தாய்லாந்து, மலேஷியா, பிலிப்பைன்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நாடுகளிலும் குறைவானது. பாரிய கொழும்புப் பிராந்தியத்தில் 20,000 தொலைபேசிகள் பொருத்தப்பட்டுள்ளன. பத்து ஆண்டுகளுக்கு முன் புவி செய்மதித் தொடர்பு நிலையம் நிறுவப்பட்டது. சிங்கப்பூர், மத்திய கிழக்கு ஆகியவற்றை இணைக்கும் கடல் – கீழ் தொடர்பு முறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது வியாபார, வங்கி தொழில் வளர்ச்சிக்கும் உதவுவதாயுள்ளது.

வங்கி முறை படிப்படியாக வளர்ச்சி பெற்றுள்ளது. வங்கிக் கிளைகளின் விரிவாக்கம் குறிப்பிடத்தக்களவில் இடம்பெற்றது. மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தனியார் வங்கிகள் என்பனவற்றின் கிளைகள் அதிகரித்துச் சென்றுள்ளன. மத்திய வங்கி, மாத்தறை, மாத்தளை, அநுராதபுரம் ஆகிய இடங்களில் பிரதேச அலுவலகங்களைத் திறந்தது. 1985ஜூலையிலிருந்துகளுத்துறை,குருநாகல்,மாத்தறை,அநுராதபுரம்அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை பின்பு 32கிளைகளையும் ஆரம்பித்தன. 1986ன் முடிவுவரை வர்த்தக வங்கிகளின் 1036 கிளைகள் காணப்பட்டன. தேசியசேமிப்பு வங்கி 60 கிளைகளைக் கொண்டிருந்தது. அந்நிய வங்கிகளின் வருகையும், அந்நியச் செலாவணி வங்கி அலகுகளின் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்கதாயிருந்தன. காப்புறுதித் தொழிற்பாடுகளும் இத்துடன் இணைந்து வளர்ச்சிபெற்றன. இவை 1959 – 1970 – 1985 காலப்பகுதியில் வளர்ச்சியைக் காட்டுகின்றன.

நிர்வாகம், பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகள் அண்மைக் காலங்களில் விரிவடைந்தனவாயினும் சதவீதப் பங்கு ஒப்பீட்டு ரீதியில் அதிகம் வளர்ச்சியடையவில்லை.

முடிவாக இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பில் விவசாயத் துறையின் சதவீதம் கூடியிருப்பதாலும் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுவதாகக் கொள்ள முடிகின்றது.

பொருளாதார வளர்ச்சி :

இலங்கையின் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பானது உறுதியற்ற போக்கில் காணப்படுகின்றது. எனினும் வளர்ச்சிப் போக்கினைக் காட்டுவதாயுள்ளது. இவற்றைப் பின்வரும் முறையில் நிரல்படுத்தி நோக்கலாம்.

(i) மொத்த உள்நாட்டு உற்பத்தி 1970இல் ரூ. 13187 மில்லியனுயிருந்து 1984இல் ரூ. 24382 மில்லியனுயிற்று. 1971 — 77 காலப்பகுதியில் இதன் வளர்ச்சி 2.9 வீதமாயிருந்தது. 1978 — 84 காலப்பகுதியில் இது 6.1 வீதமாக உயர்ந்திருந்தது. 1986இல் இது 4.5 வீதமாகவே தென்படுகிறது.

(ii) தலா மொத்த உள்நாட்டுற்பத்தி 1970இல் ரூபா. 1054லிருந்து 1984இல் ரூ 1543ஆகக் கூடிற்று. 1971 — 77இல் சராசரி வளர்ச்சி 1.3 வீதமாயிருந்தது. 1978 — 84 காலப்பகுதியில் 4. 3 வீதமாகக் கூடியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 1960 – 66 காலப் பகுதியில் வருடாந்தம் சராசரியாக 4.7 வீதமாயிருந்தது. ஆனல் 1968இல் 8. 3 வீதமாகக் காணப்பட்டது. 1977இல் இது 4.4 வீதமாயிருந்தது. ஆனல் 1978இல் 8.8 வீதமாக அசாதாரண வளர்ச்சியைக் காட்டிற்று. ஆனல் இந்த வளர்ச்சி வீதம் உறுதிப்படுத்தப்படவில்லை. 1986இல் இது 4.5 வீதமாக மாத்திரமே காணப்பட்டது.

(iv) இலங்கையின் தலாவருமானம் படிப்படியாக அதிகரித்துச் சென்ருலும் அது மிகவும் சிறப்பானதாயமையவில்லை. 1968இல் ரூ. 739ஆக இருந்த தலாவருமானம் 1968இல் ரூ. 6922/– ஆக உயர்ந்திருந்தது.

இலங்கையில் சீரற்ற காலநிலையின் பாதிப்புக்கள் விவசாயத்துறையின் உறுதியான வளர்ச்சிக்குத் தடையாயிருந்தன. தொழில்நுட்ப வளர்ச்சியின்மை, கனிப்பொருள் வளமின்மை, செலாவணி நெருக்கடி என்பன கைத்தொழில் வளர்ச்சியின்மைக்குப் பொறுப்பாக இருந்தன. அண்மைக்கால (1983இன் பின்) இனக் கலவரங்களைத் தொடர்ந்த விரும்பத்தகாத நிலைமைகள் சுற்றுலாத் துறையையும் ஏனைய சேவைகள் துறையையும் கடுமையாகப் பாதித்தன. அரசின் அதிகரித்த யுத்தச் செலவினங்கள், கூடிச் செல்லும் கடன்கள், விவசாய அறுவடை நிலங்கள் தொழிற்சாலைகள் என்பன பாதிக்கப்பட்டமை போன்ற நிகழ்வுகள் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்தன.

எனினும் 1977 ஜூலையில் ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசின் தனியார் மயமாக்கல், தாராளமயமாக்கல், ஏற்றுமதி சார்ந்த உபாய முடைய தொழில் ஊக்குவிப்பு என்பன பல துறைகளில் வளர்ச்சியை ஏற்படுத்த உதவியிருந்தன. நெல் உற்பத்தி, தனியார் துறை ஏற்றுமதிக் கைத்தொழில்கள், கட்டிட நிர்மாணத்துறை, நீர் மின்வலு உற்பத்தித் துறை, தனியார் பேருந்துத்துறை, மொத்த சில்லறை வியாபாரம், பாதுகாப்புத் துறை போன்றவற்றில் இக் காலப்பகுதியில் வளர்ச்சியைக் காணக்கூடியதாயுள்ளது.

எதிர்காலத்திலும் சர்வதேச வர்த்தக, கடன் கொடை சார்ந்த தொடர்புகள் சாதகமானதாக இருந்தாலும், காலநிலையில் சீரான தன்மை காணப்பட்டாலும், சமவளர்ச்சி நோக்கம் வலுவடைந்தாலும் ஓரளவு பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்த்தல் முடியும். ஆனல் யுத்த மேகங்கள் கலைந்துபோக, தெளிவான அமைதி வானம் தோன்றுவது பொருளாதாரம் வளர்ச்சியடையும் நம்பிக்கையைத் தருவதாயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனகமத்

வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org